Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவமயம்

சீர்மிகு திருக்கோவலூரர்

கோவல் ஜெயராமன்



செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ, அன்பரொடு மரீஇ
மால் அற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே

சிவஞான போதம் - 12

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

C. S. S.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சீர்மிகு திருக்கோவலூர்

கோவல் ஜெயராமன்

'சிவமே பொருள்; அதனை சேரும் நெறி அன்பே'

கலி 5106 தாரண ஆண்டு வைகாசித் திங்கள் 30 (12-06-2004)
அன்று திருக்கோவலூரில் சைவ சித்தாந்தப் பெருமன்றத்தின்
98ஆம் ஆண்டு விழா மாநாட்டில் வெளியிடப்பட்டது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முதற்பதிப்பு, ஜூன் 2004.
© கோவல் ஜெயராமன்

அச்சிட்டோர்:
அலமு பிரிண்டிங் ஒர்க்ஸ்,
இராயப்பேட்டை, சென்னை - 14

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

சிவமயம்

முன்னுரை

கோவல் ஜெயராமன்

செம்பொற்சோதி இறைவன் திருவருளால் 98வது சைவ சித்தாந்தப் பெருமன்ற மாநாடு திருக்கோவலூரில் தாரண ஆண்டு வைகாசித் திங்கள் 30,31 (12-06-2004, 13-06-2004) அன்று நடைபெறும் பேறு கிட்டியுள்ளது.

இந்த மாநாடு இங்கு நிகழ்வதற்கு வித்திட்ட நிகழ்ச்சியை இங்கு விவரிக்க விரும்புகிறேன். அடியேன் பணிபுரியும் சென்னை பட்டாபிராமிலுள்ள தர்மமூர்த்தி இராவ் பகதூர் கலவல கண்ணன் செட்டியார் இந்துக் கல்லூரியில் தமிழ்த் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவராகப் பணிபுரிந்த முனைவர் அ. நாகலிங்கம் அவர்கள் 05-09-2002 அன்று நிகழ்ந்த ஆசிரியர் திருநாள் விழாவில் தமது நூல்கள் மற்றும் தமது உதவியினால் வெளிவந்த நூல்கள் மற்றும் தமது துறையிலுள்ள பிற பேராசிரியர்களின் நூல்கள் ஆகியவற்றைக் கொண்ட ஒரு புத்தகக் கண்காட்சி அமைத்திருந்தார். அந்தக் கண்காட்சியில் இலங்கை தெல்லிப்பழையில் 1981ல் நடைபெற்ற பெருமன்றத்தின் 75ஆவது ஆண்டு பவள விழா மலரினைக் காணும் வாய்ப்பு அடியேனுக்குக் கிட்டியது. சைவ சித்தாந்தத்தின் மீதுள்ள அடிப்படை ஈர்ப்பு அந்நூலை ஊன்றி நோக்க என்னை உந்தியது.

அந்தப் பவள விழாவில் சைவ இளைஞர் மாநாட்டுத் தலைவராக எமது பேராசிரியர் முனைவர் அ. நாகலிங்கம் அவர்கள் பங்கு பெற்றமையை அறிந்தேன். சைவ சித்தாந்த மகாசமாஜம்

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)
எனும் பெயரில் அப்பொழுது பெருமன்றம் விளங்கியது. இந்த சமாஜத்தினை நிறுவியவர் திருக்கோவலூர் ஆதீனம் ஞானியாரடிகள் (5வது பட்டம்) என்பதனையும் அப்பொழுதுதான் அறிந்தேன். வருடா வருடம் நடைபெறும் மாநாடு நான் விசாரித்தவரையில் திருக்கோவலூரில் நடைபெற்றதாகத் தெரியவில்லை. இதோ சமாசம் நிறுவி நூறாவது ஆண்டும் நெருங்கிவிட்டது. அதற்கு முன்பாக திருக்கோவலூர் ஆதீனம் அவர்களால் நிறுவப்பெற்ற இந்த அமைப்பின் மாநாடு திருக்கோவலூரிலேயே நடைபெற வேண்டும் எனும் எண்ணம் உதித்தது. இதனையே முனைவரிடத்தில் தெரிவித்தேன். அடியேனது நியாயமான உணர்வுகளையும் சைவசித்தாந்தத்தின்பால் அடியேனுக்கு உள்ள பக்தியினையும் உணர்ந்த ஐயா அவர்கள் இது சம்பந்தமாகப் பெருமன்றத் தொடர்புடையவர் ஒருவரிடத்தே அறிமுகம் செய்து வைப்பதாகக் கூறினார்கள். அவ்வாறே ஓரிரு நாட்களில் பெருமன்றத்தின் துணைத் தலைவர் திரு. முருகு. இராமலிங்கம் அவர்களிடத்தே அழைத்துச் சென்று அறிமுகம் செய்து அடியேனது அவாவினை எடுத்துக் கூறினார்கள். திரு. முருகு. இராமலிங்கம் அவர்களும் 2003ல் நடைபெறவேண்டிய 97வது மாநாட்டினையே திருக்கோவலூரில் நடத்தலாம் எனும் வகையில் பேசினார்கள். ஆனாலும் ஓரிருமாதங்களில் அந்த மாநாடு புதுவையில் நிகழ பெருமன்றத்தில் முடிவு செய்துள்ளதாக முனைவர் ஐயா அவர்களுக்கு தெரிவித்தார்கள். அது அடியேனுக்கு சற்று ஏமாற்றத்தை அளித்தது. இருந்தபோதும் அடுத்த ஆண்டின் மாநாடு திருக்கோவலூரில் நடைபெற ஆவன செய்வதாக வாக்கு கொடுத்தனர்.

எண்ணம் திண்ணியதாக இருந்தால் எண்ணியாங்கு எளிதில் நிறைவேறத் திருவருள் துணை செய்யும். குறித்த தினத்தில் மாநாடு புதுவையில் நடைபெற, மாநாட்டிற்கு வந்து, “அடுத்த மாநாடு எங்களது ஊரான திருக்கோவலூரில் நடைபெறும்” என அறிவித்து விடுமாறு திரு. முருகு. இராமலிங்கம் அவர்கள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)
அடியேனுக்கு அறிவுறுத்தினார். அவ்வாறே புதுவையில் நடைபெற்ற 97வது ஆண்டு விழா மாநாட்டில் 98வது ஆண்டு விழா மாநாடு திருக்கோவலூரில் நடத்துவோம் என்று அடியேன் மேடையேறி அறிவித்தேன். இது பரம நாடகனின் திருவுளப்படி நிகழ்வது என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

முனைவர் அவர்களிடத்தில் ஏன் மாநாடு திருக்கோவலூரில் நடைபெறவேண்டும் என்பதனை விளக்கப் புகுந்தபோது, இவ்வூரிற்கு அதற்கான அனைத்து அருகதைகளும் உள்ளன என்பதனைத் தெளிவுறுத்தும் பொருட்டு இவ்வூரின் பெருமைகளை ஒரு தாளில் எழுதிக்கொடுத்தேன். அதனை முனைவர் படித்தார்.

முனைவர் அடியேனுக்குத் துணையாக இருக்கின்றார் எனும் ஒரே காரணத்திற்காகவே இந்த மாநாட்டினை இங்கு நடத்தப் பெருமன்றத்தார் இசைவு அளித்துள்ளனர் என்பதனை அடியேன் பரிபூரணமாக அறிவேன். முனைவர் அவர்கள் காட்சிக்கு எளியர், அனைவரையும் பாராட்டக் கூடிய அரிய பண்பாளர், எழுதும் முயற்சியில் அனைவரையும் ஊக்குவிக்கும் அற்புதர்.

முனைவர் அவர்கள் சிறியேனைத் திருக்கோவலூர் பற்றிய நூல் ஒன்று யாக்கும்படி பணித்தார். மேலும் அந்நூலை மாநாட்டிலேயே வெளியிடலாம் என்னும் யோசனை கூறினார். திருக்கோவலூரைப்பற்றிப் பல நூல்கள் வெளிவந்துள்ளன. மேலும் ஒரு நூல் வெளி வருவதனைச் சான்றோருலகம் வரவேற்கும் என நம்புகிறேன். இந்நூலை இயற்ற ஊக்குவித்த முனைவர் அவர்களுக்கே இந்நூலின் பயன் உரித்தாகும்.

கோவல் வீரட்டானத்துறை அம்மான் திருவடி போற்றி!
அறையணிநல்லூர் அதிதுல்யநாதர் திருத்தாள் போற்றி!போற்றி!

திருச்சிற்றம்பலம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முன்னுரை 3

1. சீர்மிகு திருக்கோவலூர் 7

2 கோவல் வீரட்டானம் 12

3. மெய்ப்பொருள் நாயனார் 22

4. சங்கப்புலவர் கபிலர் 25

5. திருக்கோவலூர் ஆதீனம் தவத்திரு ஞானியார்மடம் 30

6. திரு அறையணி நல்லூர் 36

7. திருக்கோவலூர் அருகே அமைந்துள்ள சில சிவத்தலங்கள் 44

8. நடுநாடு 55

9. நடுநாடு தந்த நாயன்மார்கள் 58

10. நடுநாட்டில் திருஞானசம்பந்தரும் மாணிக்கவாசகரும் 82

11. நடுநாட்டுச் சந்தானக்குரவர்கள் 85

12. நடுநாட்டுப் பாடல் பெற்றத்தலங்கள் 93

13. சிவத்திரு ஞானியார் அடிகள் (ஐந்தாம் குருநாதர்) 111

14. சைவ சித்தாந்தப் பெருமன்ற வரலாறு 119

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

திருச்சிற்றம்பலம்

1. சீர்மிகு திருக்கோவலூர்

படைகொள் கூற்றம் வந்து மெய்ப்பாசம் விட்ட போதின்கண்
இடை கொள்வார் எமக்கிலை எழுக போது நெஞ்சமே
குடைகொள் வேந்தன் மூதாதை குழகன் கோவலூர்தனுள்
விடையது ஏறுங் கொடியினான் வீரட்டானஞ் சேர்துமே.

ஐம்புலன்களால் ஆட்டுண்டு ஐந்தவத்தையில் அல்லல்பட்டுப் பின்பு உயிர் பிரியும் காலத்தே துணையாவார் யாருமில்லை. எனவே நெஞ்சமே! வெண் கொற்றக் குடையைக் கொண்ட மலையமான் மூதாதையாகிய குழகன் விடை அது கொடியாகக் கொண்ட சிவபிரான் உறைந்து அருள் செய்யும் திருக்கோவலூர் எனும் பதியில் உள்ள வீரட்டானம் எனும் ஆலயத்தைச் சென்று சேர்வாய் என இற்றைய தினத்திற்கு ஏறக்குறைய 1300 ஆண்டுகட்கு முன் தமிழகத்தில் தோன்றி வாழ்ந்தருளிய திருஞானசம்பந்தர் பாடியுள்ளார்.

தனக்கென ஒன்று வேண்டும் குறையில்லாத நிறைவுடையோனாகிய இறைவன் தனக்கு இயல்பாய் உள்ள எல்லையற்ற பெருங்கருணையாலே குறைபல உடைய உயிர்களை உய்விக்கத் திருவுளம் கொண்டே திருக்கோவலூர் எனும் பதியில் எழுந்தருளியுள்ளான். அந்தகன் என்பானை அழித்ததால் இங்குள்ள கோயில் வீரட்டானம் எனப்படுகிறது.

இத்திருக்கோவலூர் மிகவும் தொன்மையான பதியாகும். இது சங்க இலக்கியங்களிலும் வருகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பண்டைக் காலத்தில் தமிழகம் பன்னிரு நாடுகளாகப் பகுக்கப்பட்டு, தமிழ்மன்னர்கள் பலரால் அரசாளப் பெற்றது. அவை தென்பாண்டி, குட்டம், குடம், கற்கா, வேண், பூழி, பன்றி, அருவா, அருவாவடதலை, சீதம், மலாடு, புனல்நாடு என்பன. அவற்றுள் மலாடு எனப்பெறும் நாட்டின் தலைநகராய்த் திருக்கோவலூர் விளங்கியது. மலையமான் நாடு என்பதன் திரிபே மலாடு என்பதாகும். மலையமான் நாட்டை ஆண்ட மன்னர்கள் மலாடர் எனப்பெற்றனர். அவர்களில் மலையமான் திருமுடிக்காரி புகழ் பெற்ற மன்னனாகச் சங்க நூல்களில் போற்றப் பெறுகிறான். இவன் கடையேழு வள்ளல்களுள் ஒருவன்.

துஞ்சா முழவிற் கோவற் கோமான்
நெடுந்தேர்க் காரி கொடுங்கால் முன்துறைப்
பெண்ணையம் பேரியாற்று முன்மணல் (அகம் 35. 14-16)

என்ற அகநானூற்றுப் பாடலில் திருக்கோவலூர் காரி மன்னன் தலைநகராகக் குறிக்கப்படுதலைக் காணலாம்.

மலாடர் மரபில் தோன்றிய மெய்ப்பொருள் நாயனார் இவ்வூரைத் தலைநகராகக் கொண்டு அரசு புரிந்ததைப் பெரிய புராணத்தில் காணலாம். மெய்த்தவவேடமே மெய்ப்பொருள் எனக் கருதி அரசு புரிந்து இறைவன் திருவடி அடைந்த மெய்ப்பொருள் நாயனார் வாழ்ந்த சிறப்புடையது கோவலூர்.

நீரு நிலனுந்தீயும் வளியுமாக விசும்போ டைந்துட னியற்றிய மழுவா ணெடியோன் உறையும் வீரட்டானத்தைச் சம்பந்தர், அப்பர் ஆகிய சமயக்குரவர்கள் பாடியுள்ளனர்.

பன்னிரு திருமுறைகளில் ஒன்பதாவது திருமுறையில் ஒன்பது அடியார்கள் பாடிய பாடல்கள் இருக்கின்றன. ஒவ்வொரு பாவும் திருவிசைப்பா எனப்படும். இவற்றை இயற்றியவருள் சேதிராயர் ஒருவர். சேதிராயர் என்னும் பட்டம் இவரைத் திருக்கோவலூர் மன்னராகக் கருத இடம் தருகிறது. ஆராய்ந்தறிக. இவர் தில்லையைப்பற்றி ஒரே திருவிசைப்பா பாடியுள்ளார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இற்றைய தினம் இவ்வூர் திருக்கோவிலூர் என மருவியுள்ளது. தற்பொழுது இதன் எல்லையாவது வடக்கே தென் பெண்ணையாறும் தெற்கே தேவியகரம் எனும் ஊருக்கு இடைப்பட்ட வயல் வெளியும் மேற்கே சந்தப் பேட்டை எனப்பெறும் ஊருக்கு இடைப்பட்ட ஏரியும் மற்றும் கிழக்கே வீரட்டானேசுவரர் உறையும் கீழையூர் எல்லையுமாகும். ஓரிரு கல்வெட்டுக்களில் இவ்வூர் சயங்கொண்ட சோழ மண்டலத்து மலாடான ஜநநாத வளநாட்டுக் குறுக்கைக் கூற்றத்து திருக்கோவலூர் என்று வழங்குகிறது. சமயக்குரவர்கள் காலத்தில் இவ்வூரினை நகர் என்றே குறிப்பிட்டுள்ளனர்.

அப்பரடிகளது அடைவு திருத்தாண்டகத்தில்:

காவிரியின் கரைக் கண்டி வீரட்டானங் கடவூர்வீ
ரட்டானங் காமருசீ ரதிகை
மேவியவீ ரட்டானம் வழுவை வீரட்டம் வியன்பறியல்
வீரட்டம் விடையூர்திக் கிடமாங்
கோவல்நகர் வீரட்டங் குறுக்கைவீ ரட்டங் கோத்திட்டை
குடிவீரட் டான மிவை கூறி
நாவில்நவின் றுரைப்பார்க்கு நணுகச் சென்றால்
நமனதமருஞ் சிவன்தமரென் றகல்வர் நன்கே

என இப்பதியைக் கோவல்நகர் வீரட்டம் என்றே குறிப்பிடுகிறார்.

தமிழரின் நாகரிகம், பண்பாடு, பக்தியொழுக்கம் ஆகியவையெல்லாம் ஆற்றின் கரையிலேயே தோன்றி வளர்ந்து சிறந்து வந்திருக்கின்றன. நீறில்லா நெற்றி பாழ், ஆறில்லா ஊருக்கு அழகு பாழ் என்பர். பெண்ணை நதி - பனங்காட்டு வழியே வரும் நதி; பெண்ணை - பனை, எனக் கூறுவர் ஒருசாரர். இந்நதியைப் பிநாகினி என்றும் அழைப்பர். இந்நதியின் வேகத்தை வெண்ணை உருகுமுன் பெண்ணை பெருகும் எனச் செப்புவர்.

ஔவையாரது செந்தமிழ்ப் பாடலுக்குப் பெண்ணை ஆற்றில் பால், தயிர், நெய் பெருகி வந்தது. மற்றும் இவ்வூரில் பொன்மாரி

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

பொழிந்தது, பருத்தி ஆடையாகவும், நெல் அரிசியாகவும் விளைந்தது என்றும் கூறுவர். இதற்கு அகச்சான்றாக இன்றும் திருக்கோவலூர் அருகே, குடமுருட்டி பூமாரி, விளந்தை போன்ற பெயருடைய ஊர்கள் உள்ளன. மேலும் ஔவையாரது பாடலுக்கு மூன்று துண்டாக வெட்டுண்டு கிடந்த பனைமரம் எழுந்து நின்றதாகவும் இதன் சான்றாக பனைப்பாடி எனும் ஊர் அருகே உள்ளது.

பெண்ணை ஆறு குடகு திசையில் (மைசூர் நந்திமலையில்) தோன்றி அருகில் சந்தனம் முதலிய வாசனை மரங்கள் நிறைந்த குன்றின் உச்சியிலிருந்து பாய்ந்து ஒசூர், கிருஷ்ணகிரி, ஆரூர் வழியே பொங்கிவரும் அலைகளுடன் வந்து திருக்கோவலூரை அணி செய்கிறது. இது சிறந்த தமிழ்ப்புலவர்களால் போற்றி வணங்கப் பெற்றது.

திருஞானசம்பந்தர் தமது பதிகத்தில்,

“வளங்கொள் பெண்ணை வந்துலா வயல்கள் சூழ்ந்த கோவலூர்” எனப் பதிவு செய்துள்ளார்.

அப்பரடிகள் தமது பதிகத்தில் கொழித்து வந்தலைக்குந் தெண்ணீர் கோவல் வீரட்டனீரே என்றுளார்.

புகழ்பெற்ற சோழப்பேரரசின் **(Imperial Cholas)** கீர்த்தி மிக்க மன்னனான இராச ராச சோழனின் தாயார் வானவன் மாதேவி இந்நாட்டு இளவரசி. அருண்மொழிவர்மன் எனப் பெயரிடப்பட்டு அரசாளும் நாளில் சிவபாதசேகரன் எனச் சைவ சமயத்தின் தொண்டனாகவும் தமிழர் கோயில் கட்டிடக் கலையின் கலங்கரை விளக்கமாகவும் கலாரசிகர்களது உள்ளங்களில் தமக்கென ஒரு அழியா இடத்தைப் பிடித்துள்ளவனாகவும் கடல்கடந்து இன்றைய பர்மா, மலேசியா, இந்தோனேசியா, கடாரம் ஜாவா, சுமத்ரா, இலங்கை போன்ற நாடுகளின் மீது செங்கோலோச்சிய ஏகாதிபத்திய சோழனாகவும் விளங்கிய இராசராசசோழன் பிறந்த மண் இம்மண் எனத்துணிந்து கூறலாம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இவ்வூரின் சிறப்புகளுக்கெல்லாம் மகுடமாக விளங்கும் செய்தி சங்க இலக்கியங்களில் அதிக அளவு பாடல்களை இயற்றியுள்ள சங்கப் புலவராகிய கபிலர் உயிர்நீத்ததும் இவ்வூரே என்பது தான்.

சைவ சித்தாந்த மகாசமாஜத்தை 1905ல் நிறுவிய ஞானியார் சுவாமிகளது திருக்கோவலூர் ஆதீனம் அமையப்பெற்ற ஊரும் இவ்வூரே. வீரட்டானத்திற்கு எதிரிலேயே தவத்திரு ஞானியார் மடம் அமைந்துள்ளது.

மேலும் முதல் மூன்று ஆழ்வார்கள் முதன் முதலில் பிரபந்தம் பாடிய நேர்த்தியான திருவிக்கிரமன் உலகளந்த கோலத்தில் நின்றிருப்பது இவ்வூரில் தான். இங்கு ஜீயர்மடம் ஒன்று உள்ளது.

பெண்ணையாற்றின் வடகரையில் ஆதி சங்கரர் கொள்கையைப் பின்பற்றும் ஞானானந்தர் மடமும் துவைதக் கொள்கையைப் பின்பற்றும் மத்துவர்களது ரகூத்தும சுவாமிகள் மூலப் பிருந்தாவன மடமும் அமைந்துள்ளன. மேலும் கிழக்கில் பகவான் ரமணர் வழிபட்ட பாடல்பெற்ற தலமான அறையணிநல்லூர், ஆற்றின் கரையிலமைந்துள்ள ஒரு பெரிய பாறையின் மீதமைந்துள்ளது.

இவ்வூரில் அமைந்துள்ள மடங்களை சற்று ஊன்றி நோக்கும் போது அத்துவிதம், துவிதம், விசிட்டாத்துவிதம் மற்றும் இவற்றுக்கெல்லாம் எல்லையாகவும் முடிந்த முடிவாகவும் திகழும் நத்துவிதமாம் சைவசித்தாந்தம் ஆகிய கொள்கைகள் சங்கமிக்கும் ஒருபதியாகவே இவ்வூர் திகழ்கின்றது.

இவ்வூரின் அருகே அமைந்துள்ள கீர்த்திமிகு பதிகள் திருவண்ணாமலை, திருவிடையாறு, திருவெண்ணெய்நல்லூர், திருமுண்டீச்சரம், திருநெல்வெண்ணெய் ஆகியவையாகும்.

இனி வரும் பக்கங்களில் இவ்வூரைப் பற்றிய பிற சிறப்புக்களைக் காணலாம்.

திருச்சிற்றம்பலம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

திருச்சிற்றம்பலம்

2. கோவல் வீரட்டானம்

எல்லாஞ் சிவனென்ன நின்றாய் போற்றி!
எரிசுடராய் நின்ற இறைவா போற்றி!
கொல்லார் மழுவாட் படையாய் போற்றி!
கொல்லுங் கூற்றொன்றை உதைத்தாய் போற்றி!
கல்லாதார் காட்சிக்கு அரியாய் போற்றி!
கற்றார் இடும்பை களைவாய் போற்றி!
வில்லால் வியன் அரனம் எய்தாய் போற்றி!
வீரட்டங் காதல் விமலா போற்றி!

உலகிலேயே ஆலய நிர்மானத்தில் தலைசிறந்தவராக விளங்குபவர் தமிழர்களே எனும் மொழி நம்மைப் பெருமிதம் அடைய வைக்கிறது. இதற்குக் காரணம் எந்நாட்டவர்க்கும் இறைவன் விரும்பி உறைவது தென்னாடு என்பதுவே.

நாடும் நகரமும் நற்றிருக்கோயிலுந்
தேடித் திரிந்து சிவபெருமான் என்று
பாடுமின் பாடிப் பீணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே

எனும் பாடல் ஆலய வழிபாட்டின் அவசியத்தைக் கூறுகிறது.

ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பார் ஔவையார்.

தத்துவங்களுக்கெல்லாம் தத்துவமாக விளங்கும் மெய்கண்டாரின் சிவஞான போதம்

செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ, அன்பரொடு மரீஇ

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

மால் அற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே

எனும் இறுதிச் சூத்திரத்துடன் முடிவடைகிறது.

இறைவன் வீற்றிருக்கும் ஆலயங்களுக்கும் பெயர் உண்டு, அவை மூலட்டானம், சிற்றம்பலம், வெள்ளடை, தூங்கானை மாடம், அருட்டுறை, மயானம், காரோணம், கபாலீச்சுரம், கோடீச்சுரம், கணபதீச்சுரம், சித்தீச்சுரம், ஆலவாய், தான் தோன்றி மாடம், மாகாளம், நீணெறி, கொட்டிட்டை, வடதளி, மேற்றளி, கீழ்க்கோட்டம் காவிரிக்கோட்டம், வர்த்தமானீச்சுரம், கொடுமுடி, அநேகதங்காபதம், பருப்பதம், வீரட்டானம் எனப் பல. அவற்றுள் வீரட்டானம் என்பது இறைவனின் மறக்கருணை எனும் வீரட்டச் செயலை விளம்பும் தலம் என்பர். இதனை சுருக்கமாக வீரட்டம் என்றும் கூறுவர். வீரட்டம் என்பதற்கு ஞானமயமானதலம் எனும் பொருளும் உண்டு.

கோவல் எனும் தமிழ் சொல்லுக்கு பெரிய வன்னிலம் என்பதுவே பொருள் எனினும் மேலும் பல விதமான பொருள் உரைப்பாரும் உளர். மாதவஞ் செய் தென்றிசை தமிழ்நாட்டில் இறைவன் எட்டுத் தலங்களில் வீரட்டகாசம் செய்துளான். அவற்றுள் இரண்டு தலங்கள் நடுநாட்டில் அமைந்துள்ளன. அவை திருக்கோவல் வீரட்டமும் திருஅதிகை வீரட்டமும் ஆகும்.

எட்டுத்தலங்களுள் திருக்கண்டியூர் எனும் பிரமன் சிரம் கொய்த தலத்திற்குப் பின் இரண்டாவதாகப் போற்றப் படுவது அந்தகாசுரனை இறைவன் தமது சூலத்திற்கோத்துக் கூத்தாடிய கோவல் வீரட்டம்.

பூமன் சிரம் கண்டி; அந்தகன் கோவல், புரம் அதிகை
மாமன் பறியல் சலந்தரன் விற்குடி மாவழுவூர்
காமன் குறுக்கை, யமன் கடவூர் இந்தக் காசினியில்
தேமன்னு கொன்றையும் திங்களும் சூடிதன் சேவகமே

எனும் பாடல் அட்ட வீரட்டங்களையும் அங்கு நிகழ்ந்த வீரட்டகாசங்களையும் குறிப்பிடுகின்றது.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

பெண்ணையாற்றின் தென்கரையின் மீது அமைந்துள்ளது கோவல் நகர் வீரட்டம். மேற்கு நோக்கிய ஆலயம்.

இறைவனது சந்நிதியும் இறைவி சிவானந்த வல்லியின் சந்நிதியும் தனித்தனி கோபுரவாயில்களுடன் வரிசையாக மேற்கு நோக்கி அமைந்துள்ளன.

இத்தலத்து இறைவனை முருகப்பெருமான், கண்ணபிரான், உரோமசமுனிவர், கற்பகத்தரு, காமதேனு, எமன், குபேரன், வாணாசுரன், பதஞ்சலி, வியாக்கிரபாதர் ஆதிசேஷன், மிருகண்டு முனிவர், பார்வதி, சூரியன், கயமுகன், வியாழபகவான், கபிலர், இராமபிரான், பரசுராமர், கண்ணுவர், தெய்வீகன், மெய்ப்பொருள் ஆகியோர் வழிபட்டுள்ளனர்.

இறைவி சிவானந்த வல்லி, பெரியநாயகி எனும் பெயருடன் தெற்கிலிருந்து ஆலயத்தை அனுகுபவருக்கு முதலில் உள்ள சிறிய கோபுர வாயிலுடன் அமைந்த சந்நிதியிலிருந்த வண்ணம் அருள் செய்கிறார். அழகிய சந்நிதி. அதற்கேற்ற சுற்றுப்பிரகாரம்.

அடுத்து அமைந்துள்ள ஐந்து நிலைக்கோபுரவாயிலில் நுழைந்ததும், "நெஞ்சமுத்திப் பேசுமெழுத்துடனே பேசா எழுத்தினையும் கூசாமற் காட்டக் கொடி" என உமாபதி சிவாசாரியார் கூறியதுபோல் கோவல் வீரட்டத்தின் கீர்த்தியை செப்பும் கொடி மரத்தை தரிசித்து சிறிய பலிபீடத்தினைத் தாண்டி இரண்டடி முன் சென்றால் சிறிய காதுகளுடன் மானின் சாயலுடன் பெரிய திருநந்தித்தேவர் வீற்றிருக்கிறார். மிக அழகியத் தோற்றம்.

ஆலயத்துள் பிரவேசிக்காது வெளிப் பிரகாரத்தில் வலம் வந்தால், வடபிரகாரத்தில் முதலில் தெரிவது தலத்தின் விருட்சமான கொன்றை. மரங்களுக்குப்பின்னே ஆலயத்தினை ஒட்டியவாறு உள்ள பெண்ணையாற்றுப் படித்துறையை அடைவதற்கு ஒரு வாசல் உளது. அது எப்பொழுதும் காப்பிட்டே உள்ளது. கிழக்குப் பிரகாரத்தில் ஒரு பெரிய அரசமரம் உளது.

Digitization by Hindu-Heritage-Foundation of America: HHFA(USA)
பிரகாரத்தை சுற்றிவிட்டு நந்தித்தேவரை வணங்கிவிட்டு வாயிலிடம் வரும்போது ஆலயத்தில் பலகனிகளுடன் வாயிலும் சேர்த்து மொத்தம் ஒன்பது அமைந்து இருப்பது ஒன்றுளே ஒன்பது வாயில் வைத்தாய் எனும் அப்பரின் பாடலை நினைவுறுத்துகிறது. ஊன் உடம்பு ஆலயம் என்பது திருமூலர் வாக்கு.

வாயிலிலிருந்த வண்ணமே ஆள் உயரம் உள்ள சுயம்பு மூர்த்தியான வீரட்டேசுவரப் பெருமானைக் காணலாம். இருப்பினும் வலதுபுறமாக சென்று மூலையில் உள்ள ஔவையாரால் விநாயகர் அகவல் பாடப்பெற்ற பெரியானைக் கணபதியை முதலில் கண்டு மீண்டும் சென்ற வழியே திரும்பினால் சாமநல் வேதனும் நாமம் நூறாயிரஞ் சொல்லி வானோர் தொழு நாதனுமுமாகிய குழகன் கோமள மாதொடு சோமாஸ்கந்தராக வேறு எந்தப் பகுதியிலும் காணவொண்ணாத எழிலுடன் வீற்றிருக்கிறார். இறைவியின் சௌந்தர்யத்தை வார்த்தையால் கூற முடியாது. இத்தலத்து பிரதோஷ மூர்த்தியும் மிகுந்த அழகுடன் பெரிய உருவமாகக் காணப்படுகிறார். அடுத்து வரைந்து வைத்தது போன்று அமைந்துள்ள சங்கு சக்கரதாரியின் அறை.

இறைவனிடம் செல்வதற்கு முன் மீண்டும் இடமாக வந்தால் ஆறுமுகத்துடன் மயில்மீது அமர்ந்து இருபுறமும் வள்ளி தெய்வானையுடன் முருகப் பெருமான். அடுத்தது வழக்கமாக சிவாலயங்களில் தென்படும் கெஜலக்ஷ்மி. உள் பிரகாரத்தில் கிழக்கு நோக்கிய வண்ணம் முன்னேறினால் ஆட வல்லான், தலத்தின் உற்சவரான அந்தகாந்தக மூர்த்தி, மற்றும் பள்ளியறை ஆகியவற்றுக்கான தனித்தனி அறைகள் உள்ளன. அடுத்தது ஒரு கிணறு. மூலையில் நவக்கிரகங்கள். கிழக்கு உட்பிரகாரத்தில் சூரியன் பூசித்த லிங்கம் மற்றும் பஞ்ச பூதத் தலங்களுக்கான லிங்க மூர்த்திகள், அபிதகுசாம்பாள், காசி விசுவநாதர், விசாலாட்சி, அகத்தீசுவரர், அர்த்தநாரி, சூரியன், தெற்கு பிரகாரத்தில் சம்பந்தருக்கு ஒரு தனி உருவம், அடுத்து மெய்த்தவவேடமே மெய்ப்பொருள் எனக்கருதி அரசுபுரிந்த மெய்ப்பொருள் நாயனார்,

Digitized by Hindu Heritage Foundation of America. HHFA(USA)
நரசிங்க முனையரையர் ஆகியோர், மீனாட்சி சுந்தரேசுவரர், ஜடாமுனி, ஐயனார், சப்தகன்னியர், அதற்கடுத்து தில்லைவாழ் அந்தணர் முதலாக அறுபத்து மூவர், அவர்களுக்கிடையில் வடக்கு பிரகாரத்தில் அமைந்துள்ள ஆட வல்லானுக்கு நேரெதிரில் நால்வருக்கான உருவங்கள், பின்பு இதர நாயன்மார்கள் என ஒரு தமிழ்நாட்டு சிவாலயத்திற்கான அம்சங்கள் அனைத்தும் உள்ள அற்புத ஆலயம்.

மேலும் ஒரு சுற்று கருவரையைச் சுற்றி சுவரிலுள்ள எழில் கொஞ்சும் சோழர் கலையை சுவைத்து மகிழ்வதன்முன் இறைவனை தரிசிப்போம்.

கம்பீரமான பெரிய கருவறையைக் கண்டவுடன் அது 10,11 ஆம் நூற்றாண்டு சோழற் காலத்திருப்பணி என்று எண்ண இடம் கொடுக்கிறது. வாயில் காப்பாளர்கள் அதை உறுதிப்படுத்தும் வகையாக இரண்டு கரங்களுடன் கோரைப் பற்களுடன் தர்ஜனை விஸ்மாயை முத்திரைகளுடன் காட்சியளிக்கிறார்கள். இருவர் சடையிலும் பாம்பு உள்ளது.

10, 11ம் நூற்றாண்டுகளில் சோழப்பேரரசு இராசராச சோழன் மற்றும் கங்கைகொண்ட சோழனாகிய இராசேந்திரன் ஆகியோரது ஆட்சியில் ஒரு மிகச்சிறந்த நிலையை அடைந்திருந்தது. அனைத்து திசைகளிலிருந்தும் திறை வந்த வண்ணமிருந்ததால் வலிமை மிக்க சோழர்களின் வலிமையை ஒத்ததாகவே பெரியதாகவும் கம்பீரமாகவும் அமைந்தன அக்காலத்து சிவாலயங்கள்.

திருமுல்லைவாயில், திருவொற்றியூர், திருப்பாசூர் ஆகிய ஆலயங்களில் அமைந்துள்ளது போலவே அகன்ற கருவரையும் அர்த்தமண்டபமும் இங்கு அமைந்துள்ளது.

இறைவர் சுயம்புத்திருமேனியாக ஆவுடையாரின் கோமுகம் வழக்கத்திற்கு மாறாக வலதுபுறம் அமைந்திருக்கும் வண்ணம் வீற்றுஅருள் செய்கிறார்.

Digitization by Hindu Heritage Foundation of America, HHFA(USA)

"நஞ்சினை உண்டு இருள் கண்டவரே! பண்டு அந்தகனைச்
செற்ற வெஞ்சின மூவிலை சூலத்து வீரட்டனீரே!"

என அரற்றி, பிதற்றி, அலறி, கதறி, அழுது அவரது திருத்தாள் போற்றி, "புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என் மனத்தே வழுவாதிருக்க வரம் தர வேண்டும்" என வேண்டி பின் பிரியா விடைப் பெற்று மீண்டு ஒருமுறை கருவறையைக் காண வலம் வந்தால், பத்மம், குமுதம் அகரப்படை ஆகிய அம்சங்களையும் யாளி பூதகணங்கள் அவற்றுக்கு உரிய இடத்தில் முறையே இடம் பெற்றிருப்பதனையும் பூதகனங்கள் விமானத்தை தாங்கியிருக்கும் அழகையும் கண்டு ரசித்து நகர்ந்தால் முதலில் தென்படுவது எண்கரங்களுடன் எங்கும் காணாத பல்லவர் காலத்து கொற்றவை. பல்லவர் சிற்பத்துக்கே உரித்தான எழிலுடன் காட்சியளிக்கிறார். அடுத்த கோட்டத்தில் சதுர்முகன். கிழக்குப் பிரகாரத்திற்கு திரும்புமிடத்தில் சண்டேசுர நாயனார் சிறியதொரு மண்டபத்தில் உள்ளார். அடுத்து ஈசனுக்கு நேர் பின்புறத்தே அமைந்துள்ள கோட்டத்தில் மாலொடு நான்முகன் அறிவொனா லிங்கோத்பவர் எனப்படும் அண்ணாமலையார். தெற்கே அமைந்துள்ள கோட்டத்தில் ஆலமர் செல்வன் பசுவாகிய ஆன்மா மும்மலமாகிய ஆணவம், கன்மம், மாயையை ஒழிந்து பதியாகிய முக்கண் முதல்வனைப் பற்ற வேண்டும் என ஞானம் உபதேசிக்கிறார். அடுத்தமைந்துள்ள கோட்டத்தில் கணபதி காணப்படுகிறார். கருவறை சுவற்றில் பல கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

பரகேசரி வர்மனின் 5வது ஆண்டில் வான கோவரையர் தேவியார் நங்கை குலமாணிக்கத்தார் 15 கழஞ்சு பொன்னுக்கு விளக்குத் தானம் செய்வித்ததாக அறிகிறோம். இக் கல்வெட்டுப் பகுதியை நோக்க இப்பகுதி விசயாலயன் ஆளுகைக்கு உட்பட்டிருக்க வேண்டும் என உணரப்படும்.

மூன்றாம் நந்தி வர்மனின் 16ம் ஆண்டு கல்வெட்டு, தென்னவன் இருங்கோவேள் ஆன மறவன் பூதி திருக்கோவலூர்

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)
நகரத்தார் வசம் 24 கழஞ்சுப் பொன்னை முதலாக வைத்து அதன் வட்டியைக் கொண்டு மகாதேவருக்கு ஒருநந்தா விளக்கு எரிப்பதற்கு ஏற்பாடு செய்த செய்தியை குறிப்பிடுகிறது.

இராசராச சோழனுடைய தமக்கையார் 'குந்தவ்வை' சுவாமிக்கு 'பொன்பூ' ஒன்றும் விளக்குகள் ஏற்றுவதற்கு என 2000 கழஞ்சு பொன்னும் ஊர்ச்சபையாரிடம் அளித்ததாகக் கல்வெட்டுச் செய்தி கூறுகிறது.

இத்தலத்திற்குச் சிறப்பான அந்தகாந்தக மூர்த்தி:

இறைவன் உலகப் பொருட்களில் ஒருவன் அல்லன், அவன் வேறுபட்டவன். அவன் சூரிய ஒளி போல அனைத்திலும் வியாபித்திருக்கிறான். இறைவன் அருளே திருமேனியாக அமைந்தவன். இறைவனை உணர்த்தும் அருள் அது அவன் திருமேனியாகும்.

உயிருக்கு உருவம் தர ஒருவன் வேண்டும். இறைவன் தன் இச்சையால் திருமேனி எடுப்பான். இறைவன் உயிர்களிடம் கொண்ட இரக்கம் காரணமாக வடிவம் எடுக்கிறான். அவனது திருமேனி மூவாத்திருமேனி.

இறைவனது வடிவத்தை சைவ சித்தாந்தம்,

போக வடிவம் - அம்மையப்பர் போன்றன

யோக வடிவம் - ஆலமர் செல்வன் போன்றன

வேக வடிவம் - காலசம்ஹாரமூர்த்தி போன்றன

என மூன்றாகப் பகுக்கிறது. அந்தகாந்தகர் என்பது இறைவனது வேக வடிவம். அந்தகன் என்பான் உமையன்னை இறைவனது கண்களை மூடிய காலத்தில் பிரபஞ்சத்தில் ஏற்பட்ட அந்தகார இருளே ஒரு உருவமாக தோன்றியவன். இவன் உயிர்களை இம்சித்து வந்தான். சில காலத்தில் சில தீங்குகள் ஏற்படுவனவே தீயவர்கள் மிகும் இடத்தில் மக்கள் வாழ அஞ்சுவர். நாத்திகர்

Digitization by Hindu-Heritage-Foundation of America: HHFA(USA)

மிகும் நாடு வறுமை நோயால் அழிந்துபோகும். அது போன்று அந்தகனது தீங்குகள் மிகுந்தபோது, உலகைக்காக்கும் பொருட்டு இறைவன் அந்தகனை தமது சூலத்திற்கோத்து நடனம் புரிந்தார். இவ்வாறு நடனம் புரிந்தமையாலே இது ஞானமயமான தலமாகக் கருதப்படுகிறது. இங்குள்ள உற்சவர் அந்தகன் மீது நின்றுகொண்டு சூலத்தைப் பாய்ச்சுவது போல் உள்ளார்.

தேவாரப் பதிகங்கள்

சம்புந்தர் வேறெங்கும் இலாத வகையில் இத்தலத்து பதிகத்தில் மனிதப் பிறவியில் நோய், மூப்பு, இதர துன்பங்களாகிய நணுகுமுன் கோவல் வீரட்டானம் சேர்ந்து வழிபட அறிவுறுத்துகிறார்.

அவர் காலத்தில் தமிழர்கள் புறச்சமயங்களில், குறிப்பாக சமணத்தில் நாட்டம் உள்ளவர்களாக இருந்தனர். அவர்களை தமது செந்தமிழ் பாக்களால் நெறிப்படுத்தினார்.

இத்தலத்து பதிகத்தில் நெஞ்சத்தை வேண்டுவது போல் பாடுகிறார். ஆழிநெஞ்சமே என காண்டற்கரிய ஆழமுடைய நெஞ்சத்தைக் குறிப்பிடுகிறார். இவர் மூன்று வயதில் பாடத் தொடங்கி பதினாறு வயதில் முத்தி பெற்றவர். எனவே இவரது பாடலில் இயற்கை காட்சிகள், புத்துணர்ச்சி, ஆரோக்கியம் ஆகியவையே காணப்படும். கோவலூர் பதிகத்தில் இருமல், சூலைநோய், கம்பதாளி, குன்மம், மூப்பு ஆகியவை வந்து நலியாமுன் பனந்தோப்பு மிகுந்திருக்கும் கோவலூரில் உள்ள வீரட்டானத்தை சேர்வாய் நெஞ்சமே! என்கிறார்.

அறிவிலாதவர்களதுப் பொய்ப்பிரச்சாரத்திற்குப் பலியாகி மதமாற்றம் எனும் படுகுழியில் வீழாது வீரட்டானம் சேர்க என்கிறார்.

குறிகொளாழி நெஞ்சமே கூறை துவரிட்டார்களும்
அறிவிலாத அமணர்சொல் அவத்தமாவது அறிதிரேல்
பொறிகொள்வண்டு பண்செயும் பூந்தண் கோவலூர்தனில்
வெறி கொள் கங்கை தாங்கினான் வீரட்டானஞ் சேர்துமே

எனப் பாடுகிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சமணப் படுகுழியிலிருந்து மீண்ட அப்பர் அதிகையில் சில காலம் தங்கி பின்பு தலயாத்திரை மேற்கொண்டபோது தரிசித்த தலங்களில் கோவல் வீரட்டம் ஒன்று.

ஈசன்பால் அன்பு செலுத்த இயலாது அல்லல்படும் தன்மையை பதிகத்தில் குலைகொள் மாங்கனிகள் சிந்தும் கோவலூர் வீரட்டனாரிடம் முறையிடுகிறார்.

செத்தையேன் சிதம்பநாயேன் செடியனேன் அழுக்குப்பாயும்
பொத்தையே போற்றி நாளும் புகலிடம் அறிய மாட்டேன்
எத்தை நான் பற்றி நிற்கேன் இருளற நோக்க மாட்டாக்
கொத்தையேன் செய்வதென்னே கோவல் வீரட்டனீரே!

எனப் பாடுகிறார்.

திருக்கோவலூரில் மற்றொரு முருகன் கோயிலும், பல்லவர் காலத்தையொத்த கணபதியை உடைய வெள்ளை விநாயகர் ஆலயமும் உள்ளன. வெள்ளை விநாயகர் ஆலயத்தில் தமிழகத்தில் தஞ்சாவூர், கங்கைகொண்ட சோழபுரம், திருப்புனவாயில் ஆகியத் தலங்களுக்கு அடுத்தபடியான நான்காவது மிகப்பெரிய (10 அடிக்கு குறையாத) பதினாறுமுக பல்லவர் பாணி ஷோடசகோண சிவலிங்கத்திருமேனியுள்ளது.

ஞானியார் மடத்தின் முதல் குருமூர்த்தியின் சீவசமாதி அமைந்துள்ள இடமும் ஒரு சிவலிங்கத் திருமேனியுடன் ஆலயமாக உள்ளது. தினமும் பூசை நடைபெறுகிறது.

தீர்த்தம்:

பெண்ணை நதி இத்தலதீர்த்தம். திருக்கைலாயத்தில் சிவபெருமானைத் தரிசிக்கச் சென்ற சனகாதி முனிவர்கள் நால்வரை நந்திதேவர் தடுக்க அவர்கள் இட்ட சாபத்தால் மனித உருவமடைந்து குடகு மலையைச் சார்ந்து பெருமானைக் குறித்து பஞ்சாக்கினி நடுவில் தவம் செய்தனர். அதற்கு உகந்த பெருமான்

Digitization by Hindu Heritage Foundation of America, HHFA(USA)

பார்வதி சமேதராய்க் காட்சியளித்து நந்திதேவரின் தவத்தீயினை தணிக்க, தம் சடையிலுள்ள கங்கையின் நீரைப் பிநாகம் என்னும் தம் வில்லின் மூலம் நந்தியின் சிரசில் சொரிய அது ஒரு ஆறாகப் பெருகியது. அதுவே பெண்ணைநதி. இதனை பிநாகினி, தட்சிண கங்கை எனவும் புகல்வர்.

வாழ்க திருக்கோவலூர்! ஓங்குக வீரட்டானத்தின் புகழ்!

முல்லையங் கண்ணி முடியாய் போற்றி!
முழு நீறு பூசிய மூர்த்தீ போற்றி!
எல்லை நிறைந்த குணத்தாய் போற்றி!
ஏழ் நரம்பின் ஓசை படைத்தாய் போற்றி!
சில்லைச் சிரைத்தலையில் ஊணா போற்றி!
சென்றடைந்தார் தீவினைகள் தீர்ப்பாய் போற்றி!
தில்லைச் சிற்றம்பலம் மேயாய் போற்றி!
திருவீரட்டானத்து எஞ்செல்வா போற்றி!

திருச்சிற்றம்பலம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

3. மெய்ப்பொருள் நாயனார்

செந்தமிழ் நாட்டிலே 'இறையன்பு' வெறும் உணர்ச்சி அடிப்படையில் அமைந்தது அன்று; பரம்பொருளிடம் காட்டப்படும் வழிபாட்டினை மட்டுமே அதுகொண்டிருப்பதன்று; அது மனிதனின் மூவகை உணர்வுகளையும் அழகிய முறையில் ஒருமைப்படுத்தி வெளியிடுவதாக அமைந்துள்ளது.

அது மட்டுமா? அது உலகநேயத்தை உண்டாக்குவதுடன் அனைத்துயிர்க்கும் அன்பு காட்டி உலகையே இன்பத்துள் ஆழ்த்தும் தொண்டின் பின்புலமாகக் கொண்டு பேரொளி வீசுகின்றது எனலாம். இறையன்பு உடையவனைத் தொண்டன், அடியான் என்ற சொற்களால் குறிப்பதிலிருந்து இஃது உணரப்படும். மன்பதைக்குப் பணி செய்து மன்னுயிர் மாட்டு பேரன்பு கொள்ளும் பெருநெறியே தமிழ்நாட்டு இறையன்பு என்று கூறுவது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.

இறையன்பில் திளைத்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம்மை அடியார்க்கு அடியன் என்றும் அவரை ஆவணங்காட்டி ஆட்கொண்ட இறைவன் தம்மை அடியார்க்கு எளியன் என்றும் தாமே திருவாய் மலர்ந்தருளியுள்ளனர்.

ஈசனடிக்கு அன்பில்லார்போல் எளியார் இல்லை யாவர்க்கும்
ஈசனடிக்கு அன்புடையார் போல் வலியார் இல்லை யாவர்க்கும்
ஈசனடிக்கு அன்பின்மையினால் எளிதாய் திரிந்த இக்கயவாய்
ஈசனடிக்கு அன்புடைமையினால் வலிதாயிற்றே எவ்வுயிர்க்கும்

எனும் பாடல் ஈசன்பால் அன்புடைமையினால் ஏற்படும் திண்மையைக் குறிக்க,

சிவனடியார்க்கு அன்பிலாச் சிந்தையே இரும்பு; ஏவல் செய்துநாளும்
அவன் அடியார் திறம் தொழுகா ஆக்கையே மரம், செவிகணாதிஐந்தும்

Digitization by Hindu Heritage Foundation of America, HHFA(USA)

[illegible] பரவுஞ் சைவ
தவநெறியில்லா நெறியே பவநெறி

எனும் பாடல், தாழ்வெனும் தன்மையோம் சைவமாம் சமயஞ்சாரும் ஊழ் பெறல் அரிது என்பதனையே இயம்புகிறது.

அடியார் என்பார் உடம்பெடுத்ததன் பயனே உள்ளம் உரை செயல் கடந்தவனை காண்பதுவே என்றும் சிவனடியார்க்கு உண்டாகும் குறைவு ஈசனுக்கு உண்டானதாகும் எனும் கருத்துடையாராவர். அடியாரது மிக முக்கியமான இலக்கணமாவது தம் திருத்தொண்டு முட்டுப்படும் போது அதற்கு மேல் வாழ விரும்பாத மாண்பாம். உலகினில் என் செயல் எல்லாம் உன் விதியே நீயே உள் நின்று செய்வித்தும் செய்கின்றாய் என்றும் நிலவுவதோர் செயல் எனக்கு இன்று உன் செயலே என்றும் நினைத்தலே அடியார்களின் உள்ளம்.

இப்படி பிறவாயாக்கைப்பெரியோன்பால் பேரன்பு கொண்ட குற்றமற்ற அடியார்கள் அறுபத்துமூவரை சுந்தரர் தமது திருத்தொண்டத் தொகை எனும் தேவாரப் பதிகத்துள் குறிப்பிட்டுள்ளார். இவர்களுள் பதினொன்மர் மன்னானாய் மன்னவர்க்கோர் அமுதமானாய் எனும் அப்பரடிகளின் வாக்கின்படி அரசராவர். இவ்வரசர்களுள் முதன்முதலில் குறிக்கப்பெறும் அரசராவார் திருக்கோவலூரை தலைநகராகக் கொண்டு அரசாண்ட மெய்ப்பொருள்நாயனார். சோழர் கால திருக்கோவலூர் கல்வெட்டுக்கள் 'தத்தா நமர்காண் என்ற மிலாடுடையார்க்கு' என சோழ மன்னர்கள் இவர்பால் கொண்ட பக்தியினை விளம்புகிறது.

இறைவன் அன்பே வடிவானவன், அறிவானும் அவனே; அறிவிப்பவனும் அவனே, அறிவும் அவனே; அறியும் பொருளும் அவனே, என தெளிந்த சிந்தையராய் அவனது அடியார்களையும் அவர்களது மெய்த்தவ வேடத்தையுமே அவனாகக் கண்டு வணங்கி வாழ்ந்து அரசாண்டு வந்தார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America - HHF(USA)
முத்தநாதன் எனும் ஓர் அரசன் மெய்ப்பொருளின் சேதி நாட்டைக் கைப்பற்ற பலமுறை முயன்றும் தோல்வியையே சந்தித்தான்.

சூழ்ச்சியால் நாயனாரை வீழ்த்தக் கருதினான். நாயனார் அடியார்பால் கொண்டுள்ள அன்பினையும் சிவவேடத்தின்பால் கொண்டுள்ள பக்தியினையும் அறிந்த முத்தநாதன் திருநீறு, உருத்திராக்கம், சடைமுடியணிந்து சிவனடியார் வேடந்தரித்து அந்தி சாய்ந்த பின் மன்னனின் அரண்மனை வாயிலடைந்தான்.

பள்ளியறையிலிருந்த மன்னன் முத்தநாதனின் வேண்டுகோளுக்கிணங்க தனது அரசியாரையும் வேறிடம் செல்லப் பணித்தார். ஆகமத்தை உபதேசிப்பதாகக் கூறிய கபடதாரி தமது புத்தகக் கவளிக்குள் ஒளித்துவைத்திருந்தக் குறுவாளை எடுத்து தான் வந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டான்.

தத்தன் எனும் அரசனின் மெய்க்காப்பாளன் நடந்ததறிந்து முத்தநாதனைக் கொல்ல எத்தனித்த வேளையில் உயிர் பிரியும் நிலையிலிருந்த மெய்ப்பொருள், 'தத்தா நமர்' எனக்கூறித் தடுத்து மெய்த்தவவேடம் புனைந்து வந்த முத்தநாதனுக்கு யாதொரு தீங்கும் நேராத வண்ணம் பாதுகாப்பாக எல்லைவரைச் சென்று விட்டுவிட்டு வந்து தமக்கு செய்தி கூறப் பணித்தார். தத்தன் மன்னரது ஆணையினை சிரமேற்கொண்டு மாபாதகனான முத்தநாதனை ஊர் எல்லையில் அழைத்துச் சென்று விடுத்து மீண்டு வந்து செய்தி கூறிய பின்னே மன்னன் ஆனந்த கூத்தனின் கழலினைச் சேர்ந்தார். மெய்ப்பொருள் நாயனாரது பக்தியானது கண்ணப்பர் பூதநாயகன்பால் வைத்த அன்பிற்கு நிகரானது.

ஆரணவுருவார் தில்லையம் பலமெய்தப் பெற்றோ
ரோருணர்வாவ ரென்று மொன்றலரொன்றா ரல்லர்
காரணராகா ரொத்த கருத்திலர் நிரத்தவின்பப்
பூரணரவர்கள் வாழும் புவனமும் பொதுவாமன்றே.

கோயில் புராணம்.

திருச்சிற்றம்பலம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

4. சங்கப்புலவர் கபிலர்

சங்கப் புலவர் வணக்கம்

தடவரை முனிவன் ஈன்ற தமிழ்க் கொழுங் குழவி தன்னைப்
படர்வெயில் உமிழும் சங்கப் பலகையாம் தொட்டில் ஏற்றி
நடைவர வளர்த்து ஞால நனந்தலை மறுகில்விட்ட
மடனறு புலமை யோரை மனத்துயாம் நினைத்தும் அன்றே

– சீகாளத்திப் புராணம்

நீதியார் மதூகநீழல் நெட்டிலை யிருப்பை யென்றோர்
காதல் கூர்கவிதை பாடுங்கபிலனார் பிறந்த மூதூர்
சோதிசேர் வகுளநீழல் சிலம்பொலி துளங்கக் காட்டும்
வேத நாயகனார் வாழும் வியன்திருவாத வூரால்

எனும் பாடல் பெரும்பற்றப்புலியூர் நம்பி இயற்றிய திருவிளையாடற் புராணத்தில் ஞான உபதேசம் செய்த திருவிளையாடலில் வருகிறது. வாதவூராவதுவே கபிலர் பிறந்த மூதூர்.

இவரது காலத்தில் வாழ்ந்த பெண்பாற் புலவர் மாறோக்கத்து நப்பசலையார்

நிலமிசை பிறந்த மக்கட்கெல்லாம்
புலனமுக்கற்ற அந்தணாளன்
இரந்து செல் மாக்கட்கு இனியிடம் இன்றி
பரந்திசை நிற்கப் பாடினன்

என்று புகழ்ந்து பாடியுள்ள அடிகளில் இருந்து கபிலர் செந்தமிழ் நாட்டு அந்தணர் என்பது விளங்குகிறது.

அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுகலான்

என்ற குறட்பாவுக்கு விளக்கமாய் வாழ்ந்தவர் கபிலர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இவனை, நக்கீரர்,

உலகுடன் றிரிதரும் பலர்புகழ் நல்லிசை
வாய்மொழிக் கபிலன் (அகம்: 78)

எனவும், பெருங்குன்றூர்க் கிழார்,

உவலைக் கூராக் கவலையி னெஞ்சின்
நனவிற் பாடிய நல்லிசைக்
கபிலன் பெற்ற ஊரினும் பலவே (பதிற்: 85)

எனவும், பொருந்தில் இளங்கீரனார்,

செறுத்த செய்யுள் செய்செந் நாவின்
வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க்கபிலன் (புறம்: 126)

எனவும் பாராட்டுகின்றனர்.

இவர் செல்வக்கடுங்கோ வாழியாதனைச் சிறப்பித்துப் பாடிய செய்யுள்கள் பதிற்றுப்பத்தின் ஏழாம் பத்தாக நின்று திகழ்கின்றன. அவையிற்றின் அருமையுணர்ந்த அப்புரவலன் மனமகிழ்ந்து வழங்கிய பரிசில் “சிறுபுறமென நூறாயிரங் காணங் கொடுத்து நன்றாவென்னுங் குன்றேறி நின்று தன் கண்ணிற் கண்ட நாடெல்லாம் காட்டிக் கொடுத்தான் அக்கோ,” என அவ்வேழாம் பத்தின் பதிகம் கூறுதலான் உணரலாம்.

இவர் குறிஞ்சித்திணை பாடுதலில் தன்னிகரற்றவர். இவர் பாடிய இருநூற்றெழுபத்தொன்பது செய்யுள்களுள் நூற்று தொண்ணூற்றொரு செய்யுள் குறிஞ்சித்திணைப் பற்றிப் பாடப்பட்டனவாகும்.

இவர் தன்புலம் சிறக்கவும் பின்புலம் வியக்கவும் வாழ்ந்தவர். இவர் உள்ளும் புறமும் ஒத்த நிலையர். மூவேந்தரும் இவர் புலமைக்கு பணிந்தனர். இவர் வாழ்தல் வேண்டிப் பொய் கூறார். வேந்தர்கள் தவறு செய்தபோது அதனைத் தவறாது சுட்டிக்காட்டி அறிவுறுத்தும் சிறந்த தன்மையர்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)
இவர் மலையமான் திருமுடிக்காரிக்குக் கூறும் அறிவுரை சுவையானது.

காரி என்ற புகழ்பெற்ற குதிரையைக் கொண்ட திருமுடிக்காரி திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்ட நடுநாட்டை ஆண்டு வந்தான். இவனது நாடு நன்செய்யும் புன்செய்யும் நிறைந்த, மலைகளால் சூழப்பெற்ற வளம் மிக்க நாடு. தென் பெண்ணை நதியால் நீர் வளம் நிரம்பப் பெற்றும் காடுகளால் பகைவரிடத்துத் தனித்தும் இருந்தது. மூவேந்தர்களில் எவரேனும் ஒருவர் இவனது துணை பெற்றால் அவன் படை வெற்றியை மட்டுமே பெறும் என்று பகையரசர் பாராட்டும் பெருமையுடையவன்.

இவன் தன்னை நாடி வந்த பாணர்கட்கும், கூத்தர்கட்கும் புலவர்கட்கும் வரையாது வழங்கி மகிழும் இயல்பு உடையவன். ஒரு சமயம் கபிலர் இவனது கொடைச் சிறப்பைக் கேள்வியுற்று இவனது அரசவைக்குச் சென்று தக்கவாறு பாடினார். காரியும் அரசவையில்பாடிய அனைவருக்கும் சமமாகப் பொருள் கொடுத்து மகிழ்ந்தான்.

ஆயின் கபிலர், பெற்றது போதும், துயர் அற்றது என்று மனம் பொறுத்தார் இல்லை. வளத்தைக் கொண்டு நாட்டை இனம் பிரிப்பது போல, பொருளைக் கொண்டு விலையை நிர்ணயம்செய்வது போல, புலமையைக் கொண்டு அறிவை அளப்பது போல தனது பாடல்களைச் சரியாகப் பாராட்டாது, பத்தோடு பதினொன்றாகத் தன்னையும் பிற புலவர்களோடு சமமாக நடத்தியதில் கபிலருக்கு உடன்பாடில்லை.

தனது தகுதிக்கு ஏற்ப பரிசிலைப் பெற விரும்பினார். பொருந்தாத இந்த பரிசிலைக் கொண்டு வறுமையைப் போக்கிட எண்ணும் குணத்தை வெறுத்தார். எனவே காரியை நணுகி, "வள்ளல் தன்மை வாய்க்கப் பெற்ற கொடையரசே! நான் சொல்லுவனவற்றைச் சிறிது செவி மடுப்பாயாக. ஒரு திசையில் வள்ளல் ஒருவன் இருந்தால் பல திசைகளில் இருந்தும் வரும்

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

பரிசிலைப் பெற புலவர் மக்கள் பலரும் வருவர். வருகின்ற எவருக்கும் தம்மிடம் உள்ளதை இல்லை என்று சொல்லாது எவருக்கும் ஈதல் எளிது. அவ்வாறு வழங்குகின்ற உள்ளம் மட்டும் இருந்தால் போதுமானது அன்று. வருகிறவர் அனைவரும் ஒரே விதத் தகுதியை உடையவர்கள் அல்லர். எனவே அவரவர்களின் திறமை, புலமை அறிந்து, இவர் சிறந்தவர், இவர் மிகச் சிறந்தவர் என்ற அளவில் பரிசில்களை வழங்குவதற்கு, தகுதி அறியும் அறிவும், ஆற்றலும் வேண்டும். இவ்வரியதகுதி உன்னிடத்து இருக்கிறது என்று எண்ணியே உன்னிடம் வந்தேன். ஆனால் திறன் அறியும் அறிவு இல்லாமல் வழங்குகின்ற மனம் ஒன்றே கொண்டவன் நீ என்பதை நான் விரும்பவில்லை. மனம் பெற்ற நீ, தகுதி அறியும் ஆற்றல் கொண்டவனாக இருத்தலை நான் விரும்புகிறேன். பொதுவாக நோக்காது தகுதியாக நோக்கி என்னைப் போன்றவர்கட்கு உவகையை அளித்தால் நின் ஆக்கம் உயரும். இனியாவது வருகின்ற எவரையும் பொதுவாக எண்ணாது தகுதி அறிந்து மதித்து அதற்குத் தக பரிசிலை வழங்கும் பழக்கத்தை ஏற்பாயாக" என்ற பொருளில்,

ஒரு திசை ஒருவனை உள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசில் மாக்கள்;
வரிசை அறிதலோ அரிதே; பெரிதும்
ஈதல் எளிதே; மாவண் தோன்றல்!
அது நன் கறிந்தனை யாயின்,
பொது நோக்கு ஒழிமதி புலவர் மாட்டே

(புறம் - 121)

என்று பாடினார்.

தம்பிரான் தோழராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் தான் தலையணையாக உபயோகித்த செங்கல் பொன்கல்லாக்கப்பெற்ற திருப்புகலூர் பதிகத்தில், 'கொடுக்கிலாதானை பாரியே என்று கூறினும் கொடுப்பாரில்லை' எனப் பாடியுள்ளார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருமுறையிலேயே கொடைக்கு மேற்கோளாகக் காட்டப்பட்ட வள்ளல் பாரியிடம் கபிலர் ஒப்பற்ற நட்பு பூண்டொழுகினார். பாரி சூழ்ச்சியால் கொல்லப்பட்டபின் அவரது மகள்களுடன் பறம்பு மலையை பிரியவொன்னாது கையறுநிலையாகப் பாடல்கள் பாடிப் பிரிந்து, பிறகு பெரிதும் முயன்று அவர்களை பாதுகாப்பானவிடத்தில் ஒப்படைத்து, பின் பெண்ணை பேரியாற்றங்கரையில் வடக்கிருந்து உயிர் நீத்தார்.

நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி நற்கனகக் கிழி தருமிக்கு அருளினோனும் இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடையந்தனனுமாகிய நம்பெருமான் கோவலூர் குழகன் அமைந்துறையும் வீரட்டானத்திற்கு அருகே தென்பெண்ணையாற்றில் கபிலர் உயிர்நீத்த கபிலக்கல் உள்ளது. அந்தக் கல்லில் மீது ஒரு அழகிய சிவலிங்கத்திருமேனி அமைந்துள்ளது. கபிலர் உயிர் நீத்தமையை இராசராசன் சாசனம் உறுதிப்படுத்துகிறது.

வன்கரை பொருது வருபுனற் பெண்ணைத்
தென் கரை யுள்ளது தீர்த்தத் துறையது
மொய்வைத் தியலு முத்தமிழ்க் கபிலன்
மூரிவண்டடக்கை பாரிதன்னடைக் கலப்
பெண்ணை மலையற்குதவிப் பெண்ணை
யலைபு முவத்து அந்தரிக்ஷஞ் செல(லை)
மினல் புகும் வீடு பேற் றெண்ணிக்
கனல் புகுங் கபிலக் கல்லது புனல் வளர்
பேரெட்டான வீரட்டானம்
அனைத்திலும் அநாதியாயது

(திருக்கோவலூர்ச் சாசனம்)

தென்னிந்திய கல்வெட்டு வால்யூம் 7 – எண் 863

இவரது நினைவாக ஆண்டுதோறும் திருக்கோவலூரில் கபிலர் விழா நடைபெறுகிறது.

திருச்சிற்றம்பலம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

5. திருக்கோவலூர் ஆதீனம் தவத்திரு ஞானியார் மடம்

உலகிலேயே மிகப் பழமை வாய்ந்ததும், காலம் கணிக்க முடியாததுமாகியது சைவ சமயம். மலப்பற்று மிக்கோர் சைவத்தின் செம்மை உணராது இகழ்வதும் புறநெறிச் சார்வதும் உண்டு. விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயம் செய்து எரிவினால் சொன்னாரேனும், எம்பிராற்கு ஏற்றது ஆகும். எனும் பொறையையும்,

யாதொரு தெய்வம் கொண்டீர், அத்தெய்வம் ஆகி அங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர்; மற்றத் தெய்வங்கள்
வேதனைப்படும்; இறக்கும், பிறக்கும்; மேல்வினைசெய்யும்
ஆதலால், இவை இலாதான் அறிந்தருள் செய்வனன்றே

எனும் தெளிவையும் பெற்று,

பொங்கு பல சமயமெனும் நதிகள் எல்லாம்
புகுந்து கலந் திடநிறைவாய்ப் பொங்கி ஓங்கும்
கங்கு கரை காணாத கடலே!

என ஈசனைப் போற்றும் மேலோர்கள் சிற்றறிவினரது இயல்பான மலப்பற்றினை உணர்ந்து அவர்களை நெறிப்படுத்தும் பொருட்டு இயற்படுத்தியதுவே சைவ மடங்கள்.

இறைவன் அன்பே வடிவானவன். அறிவானும் அவனே; அறிவிப்பவனும் அவனே. அறிவும் அவனே; அறியும் பொருளும் அவனே. என தெளிவுறுத்த தொடங்கப்பட்டவையே ஆதீனங்கள். காரிட்ட ஆணவக் கருவறையில் கட்டுண்டு கிடக்கும் உயிர்களுக்கு அவற்றின் பக்குவங்களிற் கேற்ப உலகத்தையும் உடலையும், கரணங்களையும் அனுபவிக்க வேண்டிய இன்ப துன்பங்களையும் அதற்கு ஏதுவான பொருள்களையும், உயிர்கள் உய்யும் பொருட்டு

Digitization by Hindu-Heritage-Foundation of America. (HHFA) (USA)

படைத்துக் கொடுக்கும் முழுமுதற்பொருளான சிவபெருமானின் செய்நன்றி அறிதலின் அடையாளமாக அப்பெருமானை வழிபடுவது உயிர்களின் தலையாய கடமையாகும் என்பதனை அறிவுறுத்துவதற்காகவே சைவ மடங்கள் பணி செய்கின்றன.

தேவர் குறளும் திருநான்மறை முடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் று உணர்

என மக்களுக்கு உணர்த்துவதே இம்மடங்கள் தமது தலையாய பணியாக கொண்டுள்ளன.

திருமுறையே சைவத்தின் கருவூலம் தெண்டமிழின் சீர்சால் வேதம்
திருமுறையே கைலையின்கண் சிவபெருமான் செவிமடுத்த தேம்பாகும்
திருமுறையே ஸ்ரீ நடராஜன் கரம் வருந்த எழுதியருள் தெய்வ நூலாம்
திருமுறையே சொக்கேசன் மதிமலிவாய் மலர்ந்தருளும் சிறப்பிற்றாமால்

என்பதனை தமிழரிடம் வற்புறுத்துவதே தமது குறிக்கோளாக இம் மடாலயங்கள் கொண்டுள்ளன.

வேதமாவது பசு என்றும், அதனிடமிருந்து பெறப்படும் பால் ஆகமம் என்றும், நால்வரின் செந்தமிழ் பாக்கள் அதிலிருந்து எடுக்கப் பட்ட நெய் என்றும் வெண்ணெய் மெய்கண்டாரது சிவஞானபோதமாவது அதன் சுவை என்றும் இந்த மடங்கள் மக்களிடையே எடுத்துக் கூறுகின்றன.

தமிழ்நாட்டில் தீய பிரச்சாரங்கள் ஒரு பக்கம் நடந்து கொண்டு தானிருக்கின்றன. இருபதாம் நூற்றாண்டில் ஈனர்களின் பேச்சும் பிரச்சாரமும் அம்பலத்தில் ஏறியது. நமது நம்பிக்கைகளைப் பழித்துப் பேசுவதுவே கொள்கையாகக் கொண்ட பதவியாசை பிடித்த

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

ஒரு குள்ளநரிக் கூட்டம் தம்மை தமிழின் காவலர்கள் என்று கண்டவற்றை திரித்துக்கூறி வடமொழியின் மீதும் ஒரு குறிப்பிட்ட சமூகத்தினர் மீதும் காழ்ப்புணர்ச்சி ஏற்படுத்தி, தமிழகத்தில் நாத்திகம் பேசி, ஆன்மா உண்டு எனக் கூறுபவன் முட்டாள் என்றெல்லாம் கூறி, இழிவான திசையில் அனேக மக்களை திசை திருப்பி தற்பொழுது அவர்களை திக்கற்றவர்களாக ஆக்கியுள்ளனர். மக்கள் மக்களாக வாழாது மாக்களாகவே வாழ்கின்றதொரு சூழல் ஏற்பட்டுள்ளது.

இற்றை தினம் ஓர் ஈனன் திருநீற்றினைப் பழித்துப் பேசுகிறான். இதனைக் கேள்வி கேட்க யாரும் முன் வரவில்லை, ஆதீனங்கள் உட்பட, எனில், எறிபத்தர், சத்தி நாயனார் ஏயர்கோன் கலிக்காமர், செருத்துணை, கோட்புலி, மெய்ப்பொருள், புகழ்ச்சோழர், கலியர், சிறுத்தொண்டர், இயற்பகை, கலிக்கம்பர், கழற்சிங்கர், நீலநக்கர் வாழ்ந்த மண்ணில் இன்று நாம் எவ்வாறு வாழ்கிறோம் என்பது சொல்லாமலே தெள்ளென விளங்குகிறது.

உலகிலேயே அதிக அளவில் மதமாற்றம் நடைபெற்றுள்ள, நடைபெற்றுக் கொண்டிருக்கிற புண்ணியபூமியாகவும் தமிழ்நாடு திகழ்கிறது. மடங்கள், மடாதிபதிகள் யாது செய்திருந்தனர்? யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் போல் இதற்கு எதிர்ப்பினையும் கண்டனத்தையும் தெரிவிக்கவில்லையென்றாலும் குறைந்த பட்சம் தமது ஆட்சேபனையையாவது தெரிவித்தார்களா? ஊர் ஊராக ஆலயங்களுக்கு அருகே, குறிப்பாக பாடல் பெற்ற தலங்களில், ஒரு விகாரமான கிழட்டு உருவத்தை அமைத்து தமிழர்களது தெய்வநம்பிக்கையை பழித்து இழித்து வாசகங்கள் காணப்படுவது எவ்வாறு? போன்ற கேள்விகள் எழலாம்.

இவற்றிற்கெல்லாம் பதில் எனக் கேட்பின், இன்றைய பொருப்பற்ற அரசியலமைப்பில் மடங்களும் மடாதிபதிகளும் தமது எல்லைக்கு எட்டிய வரை அவர்களது பணிகளை செய்து கொண்டுதானிருக்கின்றனர். சுதந்திரத்திற்காகக் கூட தங்களால்

Digitization by Hindu-Heritage-Foundation of America: HHFA(USA)

இவ்வற்றை செய்திருக்கின்றனர் என்பது அனேகர் அறியாததே. தஞ்சையை ஆட்சி புரிந்த மராத்தியர்களில் சரபோஜியின் காப்பாளரான அமரசிம்மன் 1787 முதல் 1789 வரை ஆண்ட போது ஆங்கிலேயர்களை சோழ நாட்டை விட்டுத் துரத்த ஒரு பெரும் படையைத் திரட்ட இரகசிய திட்டங்கள் மேற்கொண்டு அதன்படி அப்போதைய ஆட்சியாளர்களான நாநாபத்னாவிஸ், மாதவராவ், அகல்யாபாய், மகதாஜி சிந்தியா, சத்ரபதி சிவாஜி, துக்கோஜி, ஒல்கார் முதலானவர்களுக்குக் கடிதங்கள் அனுப்பியும், தமது தூதுவர்களான நரசிங்கராவ் போன்சுலே, தபோநிதி காசிவாசி குமரகுருபர கோசுவாமி ஆகியவர்களை அவர்கள் சந்திக்க மாபெரும் திட்டமொன்றைச் செயல் படுத்த முனைந்தார். காசிவாசி குமரகுருபர கோசுவாமி என்று இங்குக் குறிப்பிடப் படுபவர் திருப்பனந்தாள் காசிமடத்து அதிபரான இரண்டாம் குமரகுருபரர் ஆவார்.

நாட்டின் இன்றைய அரசியலமைப்பினாலும் எண்ணும் போதே துயரத்தைத் தரும் நீதித்துறையமைப்பினாலும் அவர்களது சொத்துக்களிலிருந்தே பயன்பெற முடியாத அவல நிலையிலுள்ளனர்.

பரஞ்சோதி முனிவர், மெய்கண்டார் வழியில் உபதேசம் பெற்றவர்கள் வழி தோன்றிய மடங்களே திருக்கைலாய பரம்பரை என அழைக்கப்படுகின்றன. பழமையான சைவ மடாலயங்களாவன திருவாவடுதுறை ஆதீனம், திருத்தருமபுர ஆதீனம், திருப்பனந்தாள் ஆதீனம், திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி, ஞானப்பிரகாசர் மடாலயம். காஞ்சிபுரம் போன்றவை. இன்னும் பல ஆதீனங்களும் தமிழகத்தில் பல இடங்களில் தோன்றி செயல்பட்டு வருகின்றன. தொண்டை மண்டல ஆதீனம், திருக்கோவலூர் ஆதீனம், பேரூர் ஆதீனம் போன்று பல உள்ளன.

கடவுள் முற்றறிவுடையவன், நம்முடைய அறிவு சிற்றறிவு, பொருள்களிற் சார்ந்து அவற்றின் வண்ணமாய் இருந்து அறிதல் நம் இயற்கை. கல்வி அறிவினால் முற்றறிவுடைய முதல்வனை

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

அறிந்து அவனைத் தொழுது பிறவித்துன்பத்தை ஒழித்து வீடெய்துதலே நம்முடைய முடிவான நோக்கமாய் இருத்தல் வேண்டும் என கற்பிப்பதையே நோக்கமாக கொண்டுள்ளன இந்த மடங்கள்.

திருக்கோவலூர் ஆதீனமாவது 18ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தொடங்கப்பட்டது. இதன் முதன் குருமூர்த்தி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகள் ஆவார். இவரது தோற்றம்: ஆனந்த கார்த்திகை, கிருத்திகை, கி.பி. 1673. இவரது திருவருட் கலப்பு: விகுர்தி, மாசி 27, வியாழன், அனுஷம், கி.பி 1770. ஆட்சி: 97 ஆண்டுகள். இவர் திருவண்ணாமலை குகை நமச்சிவாயரின் சிஷ்ண பரம்பரையில் வந்த ஆறாவது சுவாமிகளால் சிவலிங்க தாரணதீட்ஷை செய்விக்கப்பட்டு ஸ்தூல பஞ்சாக்ஷர மந்திரோபதேசமும் பெற்றவர்.

அம்பலவாண சுவாமிகள், அவிநாசி நாத சுவாமிகள், மதுரை சட்டை முநிவர் முதலியோர் இவரின் சீடர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர் நிஷ்டானுபூதி, சிவசோடசமாலை உட்பட 31 நூல்களை அருளிச் செய்துள்ளார். இவரது நிஷ்டானுபூதி நூலையும் அதற்கு முத்து கிருஷ்ண ப்ரும்மம் என்பவர் எழுதிய வியாக்யானத்தையும் புகழ்ந்து வடலூர் வள்ளலார் ராமலிங்க அடிகள் சாற்றுவிக்கவி ஒன்றைப் பாடியுள்ளார்.

இப்படி அளவற்ற பெருமைகள் வாய்ந்த ஆதிகுரு மூர்த்தியவர்கள் திருக்கோவலூர் வீரட்டானத்திற்கு பின்புற ஜீவசமாதி அடைந்துள்ளனர். இங்கு ஒரு அழகிய சிவலிங்கத்திருமேனி அமைந்துள்ளது. இரண்டாவது குருமூர்த்தி இவரது ஜீவசமாதிக்கு ஆலயம் எடுப்பித்தார். இவரது அனுக்க தொண்டர் அண்ணாமலை என்பார் அருகிலே சமாதியடைந்துள்ளார். இரண்டு சமாதிகளிலும் பூசை ஞானிய மடத்திலுள்ள சுந்தரராமலிங்கம் (தற்போதைய 8வது பட்டத்தி தங்கையாரின் கணவர்) அவர்களால் நடைபெற்று வருகிற

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

அண்ணாமலை அவர்களது சமாதியில் சிவலிங்கத் திருமேனி யில்லாது சிறிய நந்தி உள்ளது. இவரது வேண்டுகோட்படி இவருக்கு அபிஷேகம் மட்டுமே நடைபெறுகிறது. நைவேத்யம் இல்லை. மேலும் சற்று வடக்கில் ஆற்றங்கரையின் மீதுள்ள பாறையில் முதல் குருமூர்த்தி தியானம் செய்த இடம் ஒரு சிறிய அறையாக அமைக்கப்பட்டிருக்கிறது.

ஞானியார் மடத்தின் 2, 3, 4, 5, 6வது பட்டங்கள் கடலூர் அருகே வண்டிப் பாளையம் எனும் இடத்தில் சமாதியடைந்துள்ளனர். இவர்களுள் 5வது பட்டமான ஞானியார் சுவாமிகளே மிகவும் பிரகாசமாக ஒளிர்ந்தவர். திருக்கோவலூரிலிருந்து தலைமையகம் திருப்பாதிரிப் புலியூருக்கு வெகு காலத்திற்கு முன்பே மாறியிருக்கிறது.

இருந்த போதும் திருக்கோவலூர் வீரட்டானத்தின் எதிரே அமைந்துள்ள கட்டிடம் 1911ல் தொடங்கி 1912ஆம் ஆண்டு மீண்டும் புதிதாக கட்டி முடிக்கப்பட்டது. தமிழகத்தில் மக்களை நெறிப்படுத்துவதில் ஞானியார்மடம் திருப்பாதிரிப்புலியூரிலிருந்த வண்ணம் அயராது உழைத்திருக்கிறது.

தற்போது எட்டாவது பட்டம் தவத்திரு. சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் எளிமையே வடிவமாக திருப்பாதிரிப்புலியூர் தோன்றாத் துணை நாதர் ஆலய வீதியில் உள்ள மடத்தில் உறைந்து தம்மை நாடி வருவோர்க்கு நல்லாசி வழங்குகின்றார்.

திருச்சிற்றம்பலம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

6. திரு அறையணி நல்லூர்

'சோழநாடு சோறுடைத்து' என்பர். காவிரியின் கொடையினால் அவ்வாறு கூறப்பட்டாலும் அதற்குள் அமைந்துள்ள பொருள் காவிரியின் இருகரை மருங்கிலும் ஆயிரக்கணக்கில் ஆலயங்கள் ஈசனுக்கு அமைந்திருத்தலே.

திருச்சிராப்பள்ளிக் குன்றின் மீதமைந்துள்ள மகேந்திரவர்மனின் கிரந்த கல்வெட்டொன்று, மலைமகள், எங்கு நதிப்பிரியரான சிவபெருமான் காவிரியின் மீது காதல் கொண்டு விடுவாரோ என அஞ்சி, காவிரியானவள் பல்லவனுக்குரியவள் என ஈசனுக்கு ஞாபகப்படுத்துவதாக, சுவைபட அமைந்துள்ளது.

காவிரிக் கரைமேல் அமைந்துள்ளது போலவே தென்பெண்ணையாற்றின் கரை மீதும் எண்ணற்ற ஆலயங்கள் அமைந்துள்ளன. அவற்றுள் பாடல் பெற்றவை, கோவல் அறையணிநல்லூர், திருவிடையாறு, திருவெண்ணெய் நல்லூர் திருமுண்டீச்சரம், திருத்துறையூர், திருவடுகூர் ஆகியன.

தமிழகத்தில் வேறெங்கும் காணமுடியாத படி இரு பாடல்பெற்றதலங்கள் நதிக்கு வெகு அருகாமையில் கரைமீதே வடக்கு, தெற்கு என இருபுறங்களும் அமைந்து அழகு செய்வது இங்கு மட்டுமே. கோவல் வீரட்டத்திலிருந்து பெண்ணை யாற்று மணலில் இறங்கினால் அறையணி நல்லூர் அறையணிநாதர் ஆலயத்தில் கரையேறலாம். ஏறியதும் தெற்கு நோக்கி, அதாவது ஆற்றிலிருந்து நுழையும் வகையில், அழகிய எழுநிலைக் கோபுரம் கம்பீரமாக பாறைமீது அமைந்திருக்கிறது.

கச்சிப் பல தளியும் ஏகம்பத்தும் என அப்பரால் பாடப்பெற்ற கச்சியிலும் இதுபோன்ற நதியின் இருகரையில் தலங்கள்

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

அமையவில்லை. திருத்துருத்தி வேள்விக்குடியோ, திருச்சிராப்பள்ளி - திருஆனைக்காவோ கூட இதுபோன்று அமைந்தில்லை.

அறை எனும் சொல்லுக்கு பாறை என்பது பொருள். பாறை மீதமைந்து பாறைகளால் அணிசெய்யப்பட்ட ஊர் என்பதனால் இவ்வூருக்கு அறையணிநல்லூர் எனப் பெயர் ஏற்பட்டுள்ளது எனக் கொள்ளலாம். நல்லூர் என அழைக்கப்படும் பதிகள் சிலவற்றுள் இதுவும் ஒன்று. இன்றைய தினம் இவ்வூர் அரகண்டநல்லூர் என மருவியுள்ளது.

தமிழகத்தில் வேறெங்கும் பாடல் பெற்றத்தலங்கள் இதுபோன்று ஆற்றோரம் அமைந்துள்ள பாறை மீதமைந்திருக்க வில்லை. சிராப்பள்ளியில் உள்ளது குன்று, அதுபோலவே திருவெறும்பியூரும்.

பெருமான் இத்தலத்தும் மேற்கு முகமாகவே வீற்றிருக்கிறார். அப்பரடிகள் தமது அடைவுத் தாண்டகத்தில்,

தீர்த்தப் புனற் கெடில வீரட்டமுந்
திருக்கோவல் வீரட்டம் வெண்ணெய் நல்லூர்
ஆர்த்தருவி வீழ்சுனை நீர் அண்ணாமலை
அறையணிநல்லூரும் அரநெறியும்
ஏத்துமின்கள் நீரேத்த நின்ற ஈசன்
இடைமருது இன்னம்பர் ஏகம்பமும்
கார்தயங்கு சோலைக்கயிலாயமுங்
கண்ணுதலான் தன்னுடைய காப்புக்களே.

எனப் பாடியுள்ளார். இப்பதிகளுள் திருக்கோவல் வீரட்டம், அறையணிநல்லூர் மற்றும் நெடிதுயர்ந்த அண்ணாமலையையும் ஒரு சேர ஓரிடத்தில் இருந்தவாறே தரிசிக்கலாம்.

இத்தலத்துப் பெருமான் அழகிய சுயம்புத்திருமேனியாக பாறையிலிருந்தே தோன்றி வளர்ந்தவராக சோதிமயமாக ஒளிர்கிறார். ஈசனாரின் திருநாமங்களாவன அறையணிநாதர், அதுல்யநாதர், ஒப்பிலா மணி ஈசர் ஆவன.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)
அறையாகிய பாறையின் மீதமர்ந்தருள்பாலிப்பதால் அறையணிநாதர் என்று பெயர் பெற்றுத் திகழ்கிறார். அவர்தமது பேராற்றலின் முன் அண்டமானது அநுவைப் போன்றது என்றும் அவரது நுண்மையின் முன் அநுவானது அண்டம் போன்றது என்பதனாலும் அதிதுல்யநாதர் எனும் அதுல்யநாதராக பெயர் பெறுகிறார். கோவலூரிலுள்ள திருவிக்கிரமன் உலகளந்த பின் தனக்கு ஏற்பட்ட நடுக்கம் தீரும் பொருட்டு இங்குள்ள ஈசனை மணியாலும் துளவத்தாலும் பூசித்தமையால் இவர் ஒப்பிலா மணியீசர். இற்றைய தினமும் சில சமயங்களில் பெருமானுக்கு துளசியைக் கொண்டு அர்ச்சகர் பூசிப்பதுண்டு.

இங்கு இறைவனை பிரசண்டமுனிவர் வழிபட்டுள்ளார். மேலும் நீலகண்ட முனிவர், கபிலர், பாண்டவர்கள் ஆகியோரும் வழிபட்டுள்ளனர். பகவான் ரமணர் இங்கு தங்கி பின்பு அண்ணாமலையடைந்தார்.

இங்குள்ள இறைவியின் திருநாமங்களாவன அருள்நாயகி அழகிய பொன்னம்மை எனும் சௌந்தர்யகனகாம்பிகை ஆகும்.

இவ்வாலயத் திருப்பணி முடிவுறாதிருந்ததால் இளவெண்மதி சூடினான் என்பான் திருப்பணி நிகழ்ந்து முடிந்தால் தாம் உயிர் தியாகம் செய்வதாக சூளுரைத்து அதுபோன்றே செய்துமுடித்தான். இளவெண்மதி சூடினான் தன் தலையை வெட்டிக் கொள்ளும் காட்சி கோயிலுக்கு அருகில் வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாலயத்தில் 96 கல்வெட்டுக்கள் பொறிக்கப் பட்டுள்ளன. நானூற்றுவன் மலையமானாகிய இராஜேந்திர சோழ சேதுராமன் இத்திருக்கோயிலில் தட்சிணாமூர்த்தியை எழுந்தருள வைத்ததுடன் நித்திய வழிபாட்டிற்கும் விளக்கேற்றவும் வீரசோழநல்லூர் நிலங்களின் வரித்தொகையினை இதற்காக ஒதுக்கியும் வைத்துள்ளான். சோழதுங்க பல்லவர் அரையன் பெண்ணைத் தென்கரையில் உள்ள செம்பியன் மாதேவி என்னும் ஊரை

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

இக்கோயிலின் நித்திய வழிபாட்டிற்கும் நந்தா விளக்கேற்றி வைக்கவும் வழங்கி உள்ளான்.

கோ(ப்)புநாய்க்கன் வாலுநாய்க்கன், பாலுநாய்க்கன், நாகம்மா நாயக்கராயன் ஆகியோரால் 15 அல்லது 16ஆம் நூற்றாண்டில் கோயில் கோபுரம் கட்டி முடிக்கப்பட்டது. இவர்களது பெயர்கள் கோபுரத்தில் பொறிக்கப்பட்டுள்ளதை நாம் காணலாம்.

இத்தலம் பாறைமீதமைந்திருப்பதைக் கண்டோம். இப்பாறையில் ஒரு அழகிய தாமரைத்தடாகமும் மகேந்திர வர்மனது குடைவரை ஒன்றும் காணப்படுகிறது. இந்தக் குடைவரை அவன் சமணம் சார்ந்திருந்தபோது அவர்களுக்காக அமைத்து தந்ததாக இருக்கவேண்டும். இவன் சைவம் சார்ந்த பின் ஏற்படுத்திய குடைவரைகள் வேலைப்பாட்டுடனும் கருவறையின் இருபுறமும் துவாரபாலகர்களுடனும் தளிர் போன்ற அழகிய கிரந்த கல்வெட்டுக்கள் இவனது விருதுப்பெயர்களுடன் இவன் சமணம் விடுத்து சைவம் சார்ந்தமையைப் பறைசாற்றுவதாகவும் இருக்கின்றன. திருச்சிராப்பள்ளி தாயுமானவர் கோயிலிலிருந்து உச்சிப்பிள்ளையாரைக் காண செல்லும் வழியில் அமைந்துள்ள குடைவரையில் சிவனார் முயலகன் மீது ஒய்யாரமாகக்காலை ஊன்றிக் கொண்டு கங்கையை சடையில் ஏந்தும் அண்ணலாக காட்சியளிக்க அங்குள்ள கல்வெட்டு மகேந்திரவர்மன் தன்னை சைவசித்தாந்தி என்று கூறிக்கொள்வதாகக் குறிப்பிடுகிறது.

வேலூர் ஆற்காடு அருகில் விளாப்பாக்கம் வட்டத்திலுள்ள திருப்பார்மலை எனும் கிராமத்து குடைவரையும், திருக்குரங்கணில்முட்டம் எனும் பாடல்பெற்ற தலத்தருகே அமைந்துள்ள கல்மண்டகம் எனும் குடைவரையும் சமணர்களுக்காகவே ஏற்படுத்தப்பட்டவை. சென்னை பல்லாவரத்திலமைந்துள்ள குடைவரை சிவனுக்காக எடுக்கப்பட்டது எனினும் இன்று ஒரு மசூதியாக்கப்பட்டு மண்டபத்தில் முன்பு ஒட்டியிருந்த ஜிகினா பேப்பரும் போய் இப்பொழுது பீங்கான் ஓடுகள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)
பதிக்கப்பட்டு கருங்கல்லின் எழில் அறவே [illegible] வகையில் சீர்திருத்தப்பட்டிருக்கிறது. தொல்பொருள் இலாகா யாது செய்கிறதோ தெரியவில்லை.

அறையணி நல்லூரை சுற்றியமைந்த நிலம் பாறைகள் ஆங்காங்கே காணும் வண்ணம் அமைந்துள்ளது. அம்மனமாக விரதம் மேற்கொண்ட சமணர்களுக்கு இது அனுகூலமாக அமைந்து விட்டது. எனவே இப்பகுதியில் சமணர்கள் அதிகஅளவில் வாழ்ந்திருந்தனர். திருக்கோவலூரிலிருந்து உளுந்தூர்ப்பேட்டை, கள்ளக்குறிச்சி செல்லும் வழியிலும், திருவண்ணாமலை செல்லும் வழியிலும், செஞ்சி செல்லும் வழியிலும் என அனைத்து இடங்களிலும் குறிப்பாக செஞ்சியை ஒட்டியவாறு பாறைகள் மற்றும் கல்குந்து அல்லது பாறைகளை குவித்துவைத்தாற் போன்ற குன்றுகள் பல இருக்கின்றன. இவற்றிலெல்லாம் சமணம் சிந்திக்க அச்சம் ஏற்படும் வகையில் பல்கிப் பெருகியிருந்தது.

அறையணிநல்லூரிலிருந்து பெண்ணையாற்றங்கரைமீதே மேற்கே சென்றால் ஜம்பை எனும் கிராமம் உண்டு, அங்கே சமணர்கள் தங்கியிருந்த மலை ஒன்றுள்ளது. அதில் சமணகுரு மார்களுக்கு கல்படுக்கை செய்தளித்த அதியமான் கல்வெட் டொன்றுள்ளது. திருக்கோவலூரிலிருந்து உளுந்தூர்ப்பேட்டை செல்லும் வழியில் செங்கணாங்கொல்லை எனும் ஊரைத்தாண்டியுள்ள சோழபாண்டியபுரத்திற்கு அருகே அமைந்துள்ள ஆண்டி மலையில் சமண தீர்த்தங்கரர்களது உருவங்களும் கல்வெட்டுக்களும் காணக்கிடக்கின்றன. அதே போல் மலையடி குன்னத்தூர் எனும் கிராமத்தினருகே அமைந்துள்ள திருநரங்குன்றம் எனும் ஊரிலும் பார்சுவநாத், சந்திரநாத் ஆகிய சமண ஆலயங்கள் அமைந்துள்ளன. அப்பாண்டார் கோவில் என்கிறனர். மத்திய பிரதேசத்தில் கஜீராஹோவில் ஒரு பக்கம் சிவாலயங்களாகவும் (**Western group**) புறத்தே ஒருபக்கம் நேமிநாத், பார்சுவநாத் போன்றோருக்கான ஆலயங்களும் காணப்படுவது போலவே இங்கும் காணப்படுகின்றன.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

அறையணிநல்லூரின் வடக்கே அமைந்துள்ள செஞ்சியைச்சுற்றி திருநாதன் குன்று, சிறுகடம்பூர், பெரும்புகை, மங்கலம், கன்னலம், வளத்தி, மேல் மலையனூர், நந்திகிரி, மேல்கூடலூர், திருப்பருத்திக்குன்றம், கூகூர், போளூர் தொரப்பாடி, தாயனூர், சிண்டிப்பட்டு, எய்யில், கள்ளப்புலியூர், தொண்டூர், அகலூர், பொன்னகரை, வீரணாமூர், மேல்அத்திப்பாக்கம், ஏதாநெமிலி, கீழ்வயலாமூர், காட்டுசித்தாமூர், நெகமம், வல்லம், மேலும் வடகிழக்காக, சீயமங்கலம், தேசூர், சேத்பட், வேடல், செய்யாறு, வேலூர் என சமணர்கள் வாழ்ந்த பதிகள் எண்ணில் அடங்கா. இன்றும் அங்கெல்லாம் நயினார் கோயில் எனும் பெயரால் சமணர்களது ஆலயங்கள் அமைந்துள்ளன.

தெற்கே சமணர்கள் மதுரையைச்சுற்றி கழுகுமலை, சித்தர்மலை, நாகமலை, கொங்கடி, புளியங்குளம், குன்றக்குடி, உத்தமபாளையம், மேட்டுப்பட்டி, கீழவளவு எனப்பல இடங்களிலும் கொங்குநாட்டில் புகழிமலை, திருமூர்த்திமலை, தாராபுரம், கோட்டைமேடு, அறச்சலூர், திருச்செங்கோடு, பருத்திப்பள்ளி ஆகிய இடங்களிலும் எனப்பல பதிகளில் இற்றைதினத்து தமிழகத்தில் விண்ணை முட்டுமளவிற்கு மதமாறுபவர்கள் பெருகியிருப்பது போல் பெருகிக்காணப்பட்டனர். இன்று மீண்டும் மேற்கத்திய புறச்சமயங்கள் (கிறித்துவம், இஸ்லாம்) தமிழகத்தில் பரவியிருப்பது **'history is but a cycle'** எனும் வரலாற்றுக் கொள்கையையே எடுத்தியம்புகிறது. இதில் நம்மை ஆச்சர்யப்படவைப்பது யாதெனில் தமிழகத்தில் எங்கெல்லாம் சமணர்கள் அதிக அளவில் இருந்தனரோ அதே இடங்களில் மதமாற்றம் அதிக அளவில் காணப்படுகிறது. இதனை வரலாற்று மாணவர்கள் ஆய்வு செய்யலாம்.

திருஞானசம்பந்தர் இப்பதிக்கு (அறையணி நல்லூருக்கு) வந்தபொழுது இங்குள்ள சமணர்களை வாதில் வென்று கழுவேற்றியதாகக் கூறப்படுகிறது. இதற்கு சான்றாக கழுமரம் எனும் கிராமம் மேற்கே அமைந்துள்ளது. சேக்கிழார் தமது பெரிய

Digitized by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

புராணத்தில் பதிவு செய்யவில்லை என்றபோதிலும் இதுபோன்றே சம்பந்தர் தாரணிக்கு மங்கலமாம் பெருந் தொண்டை வளநாட்டில் அமைந்துள்ள ஒத்தூர் மேவிய ஒளி மழுவாளங்கை கூத்தர் திருவருள் துணையால் ஆண் பனைகளை பெண்பனைகளாக ஆக்கியதோடல்லாது அங்குள்ள சமணர்களைக் கழுவேற்றிய தாகவும் (அதற்குச் சான்றாக செய்யாற்றைவென்றான் எனும் ஊர் அங்குள்ளது மற்றும் திருவோத்தூர் ஆலயத்தில் சமணர் கழுவேற்றப்பட்ட சிற்பங்கள் காணக்கிடக்கின்றன), எசாலம் எனும் மைலம் அடுத்துள்ள பேரணி ரயில் நிலையத்திலிருந்து 6 கி.மீ. தொலைவிலுள்ள இராசேந்திர சோழனின் (1012-1027ல் கட்டப்பெற்ற) அழகிய வேசரவகை இராமீஸ்வரர் திரிபுரசுந்தரி ஆலயத்தைக் கொண்ட ஊருக்கு அருகே அமைந்துள்ள எண்ணாயிரம் எனும் காளமேகப்புலவர் பிறந்த பதியிலும் சமணர்களை கழுவேற்றியதாகக் கூறப்படுகிறது.

அறையணி நல்லூரில் இறைவனை சம்பந்தர் பாடியுள்ளார்.

பீடினாற் பெரியோர்களும் பேதமை கெடத்தீதிலா
வீடினாலுயர்ந் தார்களும் வீடிலாரிள வெண்மதி
சூடினார் மறைபாடினார் சுடலை நீறணிந் தாரழல்
ஆடினார் அறையணிநல்லூர் அங்கையாற் தொழுவார்களே

ஒப்பிலாத ஒருவனை வழிபட்டு ஆலயத்தினை வலமாக வரும்பொழுது பாறையின் மீதிருந்தே அண்ணாமலை காணக்கிடைக்க இங்கிருந்த வண்ணமே அண்ணாமலையாரை,

உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான் மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலை முழவு அதிரும்
அண்ணாமலை தொழுவார் வினை வழுவாவண்ணம் அறுமே

எனப் பதிகம் பாடினார். இதனை சேக்கிழாரும் தமது பெரிய புராணத்தில் (969,970) உறுதி செய்கிறார்,

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

தீரின் மன்னிய பதிகமுன் பாடி அத் திரு [illegible]
வாரின் மல்கிய கொங்கையாள் பங்கர்தம் மலைமிசை
வலங்கொள்வார்
பாரின் மல்கிய தொண்டர்கள் இமையவர் நாடொறும் பணிந்தேத்தும்
காரின் மல்கிய சோலை அண்ணாமலை அன்பர் காட்டிடக் கண்டார்

அண்ணாமலை அங்கு அமரர்பிரான் வடிவு போன்று தோன்றுதலும்
கண்ணால் பருகிக் கைதொழுது கலந்து போற்றுங் காதலினால்
"உண்ணாமுலை" யாள் எனும் பதிகம் பாடித் தொண்டருடன்
போந்து
தெண்ணீர் முடியார் திருவண்ணாமலையைச் சென்று சேர்வுற்றார்.

திருஞானசம்பந்தர் இங்கிருந்த வண்ணமே ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதியைப் பாடியதை குறிக்கும் வகையில் இங்கு திருஞானசம்பந்தரின் திருப்பாதங்கள் கொடிமரத்திற்கு பின்னே அண்ணாமலையை நோக்கிய வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது.

அண்ணாமலையெம் அண்ணா போற்றி!
கண்ணாரமுதக் கடலே போற்றி!
கண்ணாய் உலகுக்கு நின்றாய் போற்றி!
கயிலை மலையானே போற்றி! போற்றி!

(பி.கு: மிகவும் சிதலமடைந்திருந்த இவ்வாலயத்தை திருப்பணி தொண்டர் துரை. இராமமூர்த்தி என்பார் பல்லாண்டு அரும்பாடுபட்டு இறுதியில் ஜப்பான் நாட்டு சிவபக்தை ஸ்ரீமதி சுகன்யாவின் நிதியுதவியுடனும் ரமனாஸ்ரமத்தினர் உதவியுடனும் திருப்பணி செய்து 6-2-2003ல் கும்பாபிஷேகம் நடத்தியுள்ளார். பௌர்ணமிதோறும் இராசராச சோழன் சதயவிழாவும் நடத்திவருகிறார்)

திருச்சிற்றம்பலம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

7. திருக்கோவலூர் அருகே அமைந்துள்ள சில சிவத்தலங்கள்

1. சித்தி லிங்க மடம்:

இது திருக்கோவலூருக்கு கிழக்கே 7 கி.மீ தொலைவில் திருவெண்ணெய் நல்லூர் செல்லும் வழியில் இருக்கிறது. மிகவும் கீர்த்திமிக்க ஆலயம். புலிக்கால் முனிவர் வழிபட்டதால் சுவாமிக்கு வியாக்கிரபாதீசுவரர் எனப்பெயர். இங்கு சுந்தரமூர்த்தி சுவாமிகள் வந்து பாடாது செல்ல இத்தலத்து கணபதி அவரைப் பாட வேண்டிக் கொண்டதாக ஒரு செவி வழி செய்தியுள்ளது. இந்த அமைதியான ஆலயம் முழுவதும் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

இந்த ஆலயத்தில் பழங்கோயில்களை புதுப்பிக்கும் முறைகளை தெரிவிக்கும் கல்வெட்டுக்கள் மற்றும் கல்வெட்டுக்களை பாதுகாக்கும் முறை பற்றிய செய்திகள் காணக் கிடக்கின்றன. திருப்பணி செய்வோர், விமானம் வாங்குமுன் அதன்கண் உள்ள கல்வெட்டுகளை அவர்களைக் கொண்டு ஒலையில் எடுத்தெழுதுவித்து, விமானம் வாங்கிக்கட்டி முடித்த பின்னர்ப் பலர் கண்காணிப்பின் பேரில், தாம் காட்டுமிடத்தில் அவற்றை மீளவும் பொறிக்கும் வழக்குண்மை தெரியவந்துள்ளது. முதலாம் குலோத்துங்கன் காலத்தில் சித்திலிங்க மடத்தில் நிகழ்ந்த திருப்பணியின் போது இவ்வாறு நடந்தேறியமை அறியக்கிடைக்கிறது.

மணம்பூண்டி

பெண்ணையாற்றின் வடகரையிலமைந்துள்ளது இவ்வூர். தெய்வீகன் பாரிமகளிர் திருமணம் இங்கு நடைபெற்றதால் மணம் பூண்டி என பெயர் பெற்றதாகக் கூறுவர். இங்கு அமைந்துள்ள

Digitization by Hindu-Heritage-Foundation of America HHFA(USA)

ஞானானந்தர் மடத்தில் இரண்டு சிவசன்னதிகள் உள்ளன. இவ்வூரில் வாழ்ந்த ஒழுக்கசீலர் திரு ம.ரா. குமாரசாமிப்பிள்ளை அவர்கள் ஞானியார் சுவாமிகள் (5வது பட்டம்) பால் பக்தி பூண்டொழுகி 'ஞானியார் மாணவர் கழகம்' என்ற பெயருடன் ஓர் கழகம் நிறுவியவர். இவரைக் கோடையிடி குமாரசாமி என்றழைப்பர் எனக் கண்டாச்சிபுரம் சு. மீனாட்சி சுந்தரம் கூறுகிறார். பிள்ளையவர்கள் தம் கிராமத்தில், வள்ளற் பாக்கம் (காரணப்பட்டு) சமரச பஜனை, ச.மு. கந்தசாமிப்பிள்ளையைத் தலைவராயிருக்க வைத்து 'அருட்சோதிநாத பக்த பால சமாஜம்' என்ற பெருடன் 20-9-1908ல் ஓர் சமாஜத்தை நிறுவினர். அதன் தொடர்பாக ஞாயிறுதோறும் சொற்பொழிவுகளும், வியாழக்கிழமை தோறும் பஜனையும் நடைபெற்றன. திருக்கோவலூர், மணம் பூண்டி, அறையணிநல்லூர், கோட்ட மருதூர், நெற்குணம், கோவல் வீரட்டானம் அமையும் கீழையூர் ஆகிய பல ஊர் மக்கள் அக்கழகத்தால் தமிழ்ப்பற்றும் சைவ உணர்ச்சியும் மிக்கவராய்த் தம் பின்னோரும் நல்வழி நடக்க வழிவகுத்தது அந்தச் சமாசம் . இவர் 1911ல் "பார்க்கவ குல சங்கம்" தொடங்கினார். 1925ஆம் ஆண்டு கொங்குநாட்டுச் சேந்தமங்கலத்தில் நடந்த மாநாட்டில் 'உயிர்ப்பலி தகாத செயல்' என வாதாடினார். 1929ல் முத்தைய செட்டியார் என்பார் 32 சவரன் பொன்னால் செய்யப்பட்ட தாழ்வடம் அணிவித்தார். ம.ரா. குமாரசாமியாரின் பிரிவு, தமிழ் நாட்டின் மண்ணையும் உருக்கும், கல்லையும் உருக்கும், மரத்தையும் உருக்கும் எனத் திரு.வி.க. கூறியதாக முனைவர் அ. நாகலிங்கம் கூறுகிறார்கள்.

கண்டாச்சிபுரம்

கீர்த்திமிக்க சோழப்பேரரசின் அரசகுலத்தினர்கள் பேரில் தமிழகத்தில் இன்றைய தினமும் பலபதிகள் மருவி வழங்குகின்றன. சோழ அரசர்களைவிட அவர்களை ஈன்ற தாய்மார்கள் மற்றும் அவர்களுக்கு மாலையிட்ட மனைவி மார்களின் பெயர்களில் பல ஊர்கள் வழங்குகின்றன. வானாம்பதி என்பது வானவன்

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

மாதேவீச்சுரம் என்பதன் மருவு, தாதாபுரம் (இங்கு வல்லவராயு வந்தியத்தேவரை மணந்த குந்தவை பிராட்டியார் (கி.பி-1004இல்) இரவிகுலமாணிக்க ஈசுவரம் எனும் ஆலயத்தை அமைத்துள்ளார்) என்பது இராஜராஜபுரம் என்பதன் மருவு, செம்பியன் மாதேவி என்பது மாதவி அடிகளது பெயரில் வழங்குவது, சீயமங்கலம் என்பது சிம்மவிஷ்ணு சதுர்வேதமங்கலம் (பல்லவ மன்னன் மகேந்திரவர்மனின் தந்தை) என்பதன் மருவு. அதுபோன்றே கண்டராதித்தபுரம் என்பது மருவி கண்டாச்சிபுரமாகியுள்ளது. கண்டராதித்தர் செம்பியன் மாதேவியின் கணவர் மற்றும் பன்னிரு திருமுறை ஆசிரியர்களுள் ஒருவர். இவ்வூரில் இராமநாதீசுவரர் எனும் நாமத்தில் ஈசன் குடியிருக்கும் அழகிய ஆலயம் உள்ளது. இங்கு சச்சிதானந்தம் பிள்ளையவர்களின் தூண்டுதலில் 7-12-1938ல் ஆரம்பிக்கப்பட்ட செந்தமிழ்க் கழகம் சிறப்பாக செயல்பட்டது. 2-05-1940 அன்று நிகழ்ந்த இரண்டாம் ஆண்டுவிழாவிற்கு ஞானியார்சுவாமிகள் (5வது பட்டம்) வருகை தந்திருக்கின்றனர். வரவு செலவு ஏட்டில் பல்லக்கு தூக்கியவருக்கு சம்பளம் ஏழணா என்றும் சுவாமிகளின் ஆட்களுக்கு உணவிற்கு பெரிய படியால் 9½படி ஆணது என்றும் அதன்விலை 1 ரூபாய் 9 அணா 4 பைசா எனவும் நுணுக்கமாக எழுதியுள்ளது. கண்டாச்சிபுரம் இர. மாணிக்கவாசகன் அவர்கள் இந்த அரிய தகவல்களை பாதுகாத்து வைத்திருந்து அளித்தனர். இங்குள்ள நால்வர் சைவ மடம் மாணிக்கவாசகன் அவர்களின் பாட்டனாராகிய திரு. தரகு. அ. கணபதி முதலியார் அவர்களால் கட்டப்பெற்றது. இல்லறத்தில் இருந்து கோயில் கட்டிவிடலாம் ஆனால் மடம் அமைக்க துறவறம் மேற்கொண்டவராலேயே முடியும் எனும் நம்பிக்கைக்கு ஏற்பவே கணபதியாரும் இல்லறத்தை விட்டு வெளியேறிய பின்பே இந்த மடத்தை கட்டிமுடிக்க முடிந்தது. இங்கு சித்தாந்த பெருமன்ற மாநாடு 1938ல் நடைபெற்றதாக இவ்வூர் சு. மீனாட்சி சுந்தரம் அவர்கள் கூறுகின்றனர். திரு.வி.க, பண்டிதமணி கதிரேசஞ்செட்டியார், ஞானியார் சுவாமிகள் போன்றோரெல்லாம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இவ்வூர் நிகழ்ச்சிகளில் அதிக அளவில் கலந்து கொண்டிருந்துள்ளனர் என்பதனை அறிகிறோம். இவ்வூரில் கணபதி எனும் அன்பர் ஞானியார் சுவாமிகளுக்கு பிறர் ஒருவர் சாமரம் வீசாத வண்ணம் தாம்மட்டுமே அப்பணியை முழுதுமாக செய்ததால் இன்றும் இவ்வூரில் அவர் வீட்டினை 'ஞானியார் வீடு' என அழைக்கின்றனர் என இவ்வூர் இர. மாணிக்கவாசகன் கூறுகிறார். இவ்வூர் சு. மீனாட்சி சுந்தரம் அவர்கள் தமது தந்தையாரின் பெயரில் சுப்பராய முதலியார் அறக்கட்டளை ஒன்றினை சைவ சித்தாந்த பெருமன்ற மாநாட்டு சொற்பொழிவு செலவிற்காக ஏற்படுத்தியுள்ளார். இவ்வூர் முன்னேற்றத்திற்கு பெரிதளவில் காரணமாக இருந்தவர் 'மெம்பர்' என இவ்வூராரால் அழைக்கப்பட்ட இர. மாணிக்கவாசகனாரின் தந்தையார் க. இரத்தினசபாபதி முதலியார் எனும் சீவச்சீலர். ஆக கண்டாச்சிபுரம் சைவம் கமழும் ஊர் எனில் அது மிகையன்று.

பனைமலை

மாமல்லபுரத்து கடற்கரைக்கோயிலையும் கலங்கரை விளக்கம்போல் ஒரு குன்றின் விளிம்பில் அமைந்துள்ள ஒலக்கனேசுரர் கோயிலையும், காஞ்சிபுரத்திலுள்ள புகழ்பெற்ற கைலாசநாதர் கோயிலையும் அமைத்த கலாரசிகனான இராஜசிம்மபல்லவன் கண்டாச்சிபுரம் வழியாக சென்றடையக்கூடிய இங்குள்ள மலையின்மீது தாளகிரீசுவரர் எனும் அதிஅற்புதமானதோர் ஆலயத்தை அமைத்துள்ளான். இவன் அமைத்த கைலாசநாதர் ஆலயத்தை சுற்றி சுற்றி ஆயிரம் தடவை வந்தாலும் அதன் சிற்ப அழகை ரசித்து முடியாது. இவனது ஆலயத்தை விடுத்து பூசலால் செய்த ஆலயத்திற்கு எழுந்தருளிய ஈசனாரின் எளிமை நம்மை வியப்பிலாழ்த்துகிறது. மல்லையில் கடலருகேயும் கச்சியில் நிலத்திலும் பனைமலையில் மலையுச்சியிலும் ஆலயங்கள் அமைத்ததால் எங்கும் நிறைந்த இறைவனுக்கு நீரிலும் நிலத்திலும் விண்ணிலும் ஆலயங்களை அமைத்துப் பெருமையினை பெறுகிறான். இவ்வாலயம் வேசரவகையை சேர்ந்த விமானத்துடன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எழில்கொஞ்சும் ஆலயமாக பரமரசிகனாகிய இராஜசிம்மனின் கலையார்வத்தை பிரதிபலிப்பதாகவுள்ளது. மேலும் அழகிய கிரந்த கல்வெட்டுக்கள் அணி செய்கின்றன. விமானத்தை சுற்றி கழுக்குன்றினுச்சியி லுள்ளதைவிட பெரிய கோட்ட அறைகள் ஒவ்வொன்றிலும் ஒரு சிவலிங்கத்திருமேனி அமைந்து அழகு சேர்க்கின்றன. முக்கிய சந்நிதியின் கருவறை சதுரமாகவும் பக்க சந்நிதி கருவறை நீண்ட சதுரமாகவும் அமைக்கப்பட்டுள்ளன. மூன்றாவது தளத்தின் மேற்புரம் காணப்படும் செங்கல் வேலை பிற்காலத்திய கட்டிடமாகும். முக்கிய விமானத்தின் சுவர்களில் ஆங்காங்கே முன்கால்களை தூக்கிய நிலையில் சிங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. போரில் சிங்கம் போன்ற இராஜசிம்மனின் ஆலயத்தை சிங்கங்கள் தாங்குவது மிகப் பொருத்தமாகவுள்ளது. யானை நூல் பயிற்சியில் வத்ச ராசனையும் பகதத்தனையும் ஒத்தவன் இராஜ சிம்மன் என்பதால் அவனது ஆலயத்தில் ஆனைகள் தவறாது காணப்படுகின்றன. கருவறையின் உள்ளே பின்சுவற்றில் சோமாஸ்கந்தரும் லிங்கமும் உள்ளனர். அர்த்தமண்டபத்தில் இருசுவர்களிலும் பிரம்மா மற்றும்விஷ்ணு ஆகிய உருவங்கள் அர்த்த சிற்ப வடிவில் உள்ளன. வடக்குப் பக்கத்திலுள்ள சிறிய சந்நிதியில் மிகவும் அழகான பல்லவர் கால ஓவியங்கள் காணப்படுகின்றன. அவை சிதைந்த நிலையில் உள்ளன. வனப்பு மிக்க குடையின் கீழ் நின்ற நிலையில் தேவியும் அருகே நடராஜரின் உருவமும் மிகவும் அற்புதமாக வரையப்பட்டுள்ளன. கருவறையின் வெளிச்சுவற்றின் அதிஷ்டானத்தில் காஞ்சி கைலாச நாதர் கோயிலிலுள்ளது போல் அழகிய பல்லவ கிரந்த கல்வெட்டுக்களைக் காணலாம். அவை இராஜசிம்மனுடைய விருதுகளையும் கோயிலுக்கு வழங்கப்பட்ட மானியங்களைப் பற்றியும் கூறுகின்றன. மலைக் கீழே அமைந்துள்ள கொற்றவையின் அருகில் <<ரணஜீய ஸ்ரீ பரா, சித்ரகார்முகா, ஏகவீரா, சிவசூடாமணி>> போன்ற விருதுகளால் இராஜசிம்மனை (கி.பி. 700-728) வாழ்த்தும் கல்வெட்டுக்கள் அமைந்துள்ளன.

Digitization by Hindu Heritage Foundation of America, HHFA(USA)

சத்திரிய சிகாமணி, சங்கர பக்தன், ஆகமப்பிரியன் என நூற்றுக் கணக்கான விருதுகளுடன் குன்றின் மீதிட்ட தீபம் போல் ஒளிரும் இராஜ சிம்மன் புகழைப் போற்றுவோம்.

செஞ்சி

செஞ்சி சமணர்களது சரணாலயமாகத் திகழ்ந்திருக்கிறது. திருநாதன்குன்று சிறுகடம்பூர் ஆகியவை மிக முக்கிய சமண்தலங்கள். இங்கு மிகப் பெரிய பாறையின் மீது 24 சமணத்தீர்த்தங்கரர்களின் சிலை உருவங்களும் சல்லேகனம் எனும் நோன்பிருந்து உயிர்துறந்த சமண முனிவர் சந்திரநந்தியினைப் பற்றியும் ஒரு பிராமி கல்வெட்டு குறிப்பிடுகிறது.

சம்பந்தர் மங்கையற்கரசியாரிடம் பாடிய 'மானினேர் விழி மாதராய்' எனத்தொடங்கும் பதிகத்தில் சந்துசேனன், இந்துசேனன், கனகநந்தி, புட்பநந்தி என பல சமண குருமார்களின் பெயர்களை குறிப்பிட்டுள்ளார்.

செஞ்சியானது 15, 16வது நூற்றாண்டுகளில் விஜயநகர ஆட்சியிலேயே குறிப்பாக நாயக்கர்கள் ஆட்சியில் வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகிறது. விஜயநகர அரசர்கள் காலத்தில்தான் தமிழகத்தில் விஷ்ணுவின் ஆலயங்கள் மிகப் பிரம்மாண்டமாக திருப்பணி செய்யப்பட்டன. செஞ்சியிலேயே பல ஆலயங்கள் (வேங்கடரமணன், பட்டாபிராமர் போன்றன) திருமாலுக்கு அமைந்துள்ளது. கோபுரக் கலை விஜயநகரர் ஆட்சியில் உன்னத நிலையடைந்திருந்தது. இதனால் அதிக அளவில் பயன்பெற்றது திருக்கோவலூர் திருவிக்கிரமன் ஆலயமாகும். நாயக்கர்களுக்குப்பின் முகமதியர்கள், மராத்தியர்கள் 17ஆம் நூற்றாண்டிலும் பிரெஞ்சு மற்றும் ஆங்கிலேயர்கள் 18ஆம் நூற்றாண்டு முதலும் ஆண்டனர். செஞ்சியும் காஞ்சிபுரம் போல விஷ்ணு செஞ்சி, சிவசெஞ்சி என அழைக்கப்பட்டிருக்கிறது.

இராஜகிரி மலையடிவாரத்தில் 2 சிவாலயங்கள் அமைந்துள்ளது. கிருஷ்ணகிரியில் ஒரு கணமான

Digitization by Hindu Heritage Foundation of America: HHFA(USA)
சிவலிங்கத்திருமேனி தரையின் மீதமைந்த ஆவுடையாரோடு காணப்படுகிறது. இராஜகிரி அருகே அமைந்துள்ள ஆலயமானது தொல்பொருள் இலாகாவின் பராமரிப்பில் மிகவும் பரிதாபமாகக் காட்சியளிக்கிறது.

ஜம்பை

பெண்ணையின் வடகரை மீது ஜம்புகேசுவரர் உறையும் ஜம்பை அமைந்துள்ளது. தென்கரையில் ஒரு திருவரங்கமும் தாயுமானசுவாமி அமைந்துள்ள கள்ளிப்பாடியும் அமைந்திருப்பது நமக்கு காவிரியின் இரு மருங்கிலும் அமைந்துள்ள திருச்சிராப்பள்ளி, திருவானைக்கா, ஸ்ரீரங்கம் ஆகியவற்றை நினைவூட்டுகிறது. இங்குள்ள ஜம்புகேசுரரை வாளைமீன் பூசித்திருக்கலாம். வாளைமாமுனிவர் என்பார் பாதி மனித உடலாகவும் மீதி மீனாகவும் சிவபூசை செய்யும் சிற்பம் அமைந்துள்ளது. பல்லவர் பாணியை நினைவுபடுத்தும் சிங்கங்கள் தாங்கும் தூண்கள் இரண்டு வாயிலருகே அமைந்து அணிசெய்கின்றன. பிறதூண்கள் எழில்மிகுந்த தரங்க போதிகைகள் உச்சியில் வீற்றிருக்க காட்சியளிக்கின்றன. இறைவர் அற்புதமான சிவலிங்கத்திருமேனியாக ஜம்புகேசுவரர் எனும் திருநாமத்துடனும், இறைவி அகிலாண்டேசுவரியாகவும் அருள் செய்கின்றனர். கோயில் மிகவும் சிதலம் அடைந்த நிலையிலுள்ளது. இங்கு துவாரபாலகர்கள் மிக அருமையாக உள்ளனர். இந்த ஊரைச் சுற்றிலும் அகழியும் மதிலும் இருந்ததாக இங்குள்ள புலவர் கு. சாம்பசிவம் கூறுகிறார். மிகப் பெரிய ஆடவல்லான் இங்கு பாதுகாப்பிலுள்ளார். அரங்கிடை நூலறிவாளர் அறியப்படாததோர் கூத்து என அப்பரடிகள் கூறியபடி வாலறிவனின் கூத்தாடும் கோலம் இங்கு அமைந்துள்ளது.

திருப்பாலப்பந்தல்

இது சங்கராபுரம் செல்லும் வழியிலுள்ளது. கோபுரம் முழுவதுமாக சிதலமடைந்துவிட்டது. இங்கு இறைவன் மிக சிறியத்திருமேனியாக காட்சி தருகிறார். இறைவனது திருநாமம்

Digitized by Hindu Heritage Foundation of America. HHFA(USA)
மத்யஸ்தநாதர். தேவியார் கனகம்மை. ஓர் வழக்கின்போது சுவாமி மத்தியஸ்தம் செய்ததால் இப்பெயர் உண்டாயிற்று என்கின்றனர். அழகிய கருங்கல் திருப்பணி கவனிப்பின்றி யுள்ளது.

தெய்வீகன் திருமணத்தின்போது திருக்கோவலூரிலிருந்து இதுவரை பந்தலமைத்தமையால் இப்பெயர் பெற்றதிவ்வூர் எனவும் கூறுவர். ஆராய்ந்து தெளிக.

ரிஷிவந்தியம்

திருக்கோவலூரிலிருந்து கள்ளக்குறிச்சி செல்லும் வழியிலமைந்துள்ளது. ரிஷிகள் வாசம் செய்ததால் இப்பெயர் பெற்றது. ரிஷிவந்தியப்புராணம் எனும் நூலும் உள்ளது. கம்பீரமான கோபுரத்துடன் தோற்றமளிக்கும் அழகிய ஆலயம். இறைவர் அர்த்தநாரீசுவரர். தேனினால் அபிஷேகிக்கும்போது சிவலிங்கத்திருமேனி ஒருபாகம் ஈசனாகவும் ஒரு பாகம் உமையாகவும் காட்சியளிப்பது கண்கூடு.

எலவனாசூர் கோட்டை

இவ்வூர் உளுந்தூர்பேட்டை செல்லும் வழியில் உள்ளது. நெடுஞ்சாலை மீதே மிகப்பெரிய ஆலயம் அழகிய ராஜகோபுரத்துடன் அமைந்துள்ளது. இது ஒரு மாடக்கோயில். அப்பரடிகள் தமது அடைவு தாண்டகத்தில்,

பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதினோ டெட்டும் மற்றும்
கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற் கோயில்
கருப்பறியல் பொருப்பனைய கொகுடிக்கோயில்
இருக்கு ஓதி மறையவர்கள் வழிபட்டு ஏத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில்
திருக்கோயில் சிவனுறையும் கோயில் சூழ்ந்து
தாழ்ந்திறைஞ்ச தீவினைகள் தீரும் அன்றே

எனும் பாடலில் பெருங்கோயில் 78 உள்ளதாக குறிப்பிடுகிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation-of-America, HHFA(USA)
இது போன்ற கோயில்களை அமைத்தவன் கோச்செங்கட் சோழன். இவன் அறுபத்துமூவருள் ஒருவன். இவனது சுவையான வரலாற்றை அப்பரடிகள்,

சிலந்தியும் ஆனைக்காவில் திருநிழற் பந்தற் செய்து
உலந்தவன் இறந்தபோதே கோச்செங்கணானுமாக
கலந்தநீர்க் காவிரிசூழ் சோனாட்டு சோழர் தங்கள்
குலந்தனில் பிறப்பித்திட்டார் குறுக்கை வீரட்டனாரே

எனப் பாடியுள்ளார். எத்துணை கேவல நிலையில் உயிர்கள் இருப்பினும் அவற்றின் அன்பு வலையில் அகப்படும் எளிய தன்மையன் ஈசன் என்பது இதனால் விளங்கும். அதனால் அன்றோ

எறும்புகடை யானைதலை ஈசனைப் பூசித்துப்
பெறுங்கதி கண்டும் தேறார் பேய்கள் - அறிந்த
உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையாய் வைக்கப்படும்

என்று பாடியுள்ளார்கள். புட்பவிதி எனும் நூலில்

குதிரை சிலந்தி கழுகுடும்பு குரங்கு நரியீ யெறும்புசிதன்
மதுவண் டலவன் கரியரியா மஞ்ஞை யெகினம் புறாவாந்தை
ததியெண் காமைமுயல் கோம்பி தத்தை கேழ வருச்சிப்ப
விதியும் விலக்குங் கடந்தாற்கு விதியாலொன்றை விதிப்பாரார்?

என கமலை ஞானப்பிரகாசரும் பாடியுள்ளனர்.

முற்பிறவியில் தாம் சிலந்தியாக சிவபூசை செய்தபோது ஆனை ஊறு விளைவித்ததால் மன்னனாகியதும் அமைத்த ஆலயங்கள் ஈசனை ஆனை அனுகாவண்ணம் கட்டுமலையான மாடத்திலமைத்தான். இவனமைத்த மாடக்கோயில்களில் வலிவலம், சிக்கல், நன்னிலம், சேய்ஞ்ஞலூர் போன்ற ஒரு 25 தலங்கள் பாடப்பெற்றுள்ளன.

வேளாளர் ஏன்றவர்கள் வள்ளன்மையால் மிக்கிருக்கும்
தாளாளர் ஆக்கூரிற் தான்தோன்றி மாடமே

Digitization by Hindu Heritage Foundation of America, HHFA(USA)
எனும் சம்பந்தர் பாடல் ஆக்கூரிலுள்ளது மாடக்கோயில் எனக் குறிப்பிடுகிறது.

கோச்செங்கணான் செய்கோயில் நடுநாட்டில் அமைந்திருப்பது ஒரு பெறற்கரிய பேறு. எலவனாசூர் கோட்டைக்கும் திருக்கோவலூருக்கும் இடையே செங்கணான் கொல்லை எனும் ஊர் இருப்பது இதனை உறுதிப்படுத்துகிறது.

இங்கு எலவனாசூர் கோட்டையில், இறைவன் திருநாமம் கிராம அர்த்தநாரி. பூமி முதல் மாடம் வரை சோதியென வளர்ந்து நின்றமையால் ஜோதிர்லிங்கம் எனும் பெயரும் உள்ளது. இறைவி பெரிய நாயகி.

இங்கு சுவாமி மேற்கு முகமாகவுள்ளார். நந்தித்தேவரும் மேற்கு முகமாக உள்ளார். இதற்கு ஒரு வரலாறு கூறுகின்றனர். திருக்கோவலூரை தலைநகராக ஆண்ட தெய்வீகன் இவ்வாலய திருப்பணி செய்தபோது தினமும் எதிரியொருவன் அன்றன்று செய்த பணிகளை களைந்த வண்ணம் இருக்க தெய்வீகன் ஈசனிடம் முறையிட அவர் திருநந்தித்தேவரை ஏவித் துட்டச் செயல் செய்வானை அழித்ததாக ஒரு கர்ண பரம்பரை செய்தியுளது.

கற்றவர்பயிலும் நாகை காரோணத்தில் அமைந்துள்ள மலையீசுரன் கோயில் எனும் மாடக் கோயிலை **Reyner Van Vlisingen** எனும் கவர்னர் 1777ல் திருப்பணி செய்ததாக அந்த ஆலயத்திலுள்ள கல்வெட்டு தெரிவிக்கின்றது. பழையாறை வடதளி எனும் மாடக்கோயிலை சமணர்கள் மூடிமறைத்து அப்பரடிகள் உண்ணாவிரதமிருந்து மன்னன் உதவியால் அந்த நெறியற்ற நீசர்களை நீக்கி ஆலயத்தை மீட்டார் எனும் வரலாற்றினை பெரியபுராணம் வாயிலாக அறிகிறோம்.

எனவே அக்காலத் தெய்வீகன் திருப்பணி செய்ததிலும் ஆச்சரியமில்லை. அதற்கு ஊறு விளைவித்த துட்டர்கள் இருந்ததிலும் ஆச்சர்யமில்லை. எனவே செவி வழி செய்தியை

Digitization by Hindu Heritage Foundation of America, HHFA (USA)

ஏற்றுக் கொள்ளலாம். மேலும் இது கோச்செங்கணான் கோயில் எனவும் துணியலாம்.

உளுந்தூர் பேட்டை

இங்கு ஊரைவிட்டு 2 கி.மீ. தொலைவில் உளுந்தாண்டார் எனும் மாஷ புரீஸ்வரர் கோயில் உள்ளது. வணிகன் ஒருவன் மிளகு மூட்டைகளை கொண்டுவர இறைவன் வழிப்போக்கனாக வந்து தலைவலிக்கு பத்து போட மிளகு கேட்க, வணிகன் உளுந்து என பொய் கூறி சந்தையில் சென்று பிரித்துப்பார்க்க அனைத்தும் உளுந்தாக மாறியிருக்க மீண்டும் இறைவன் சன்னதி சேர்ந்து மன்னிப்புக்கோர மிளகாக மாறியதாக புராணம். இதனாலேயே உளுந்தூர்பேட்டை எனப் பெயர் வழங்குகிறது. பல்லவர் காலத்திய சிற்றரசர் மலாடர் கோமான் தாண்டவராயனால் திருப்பணி செய்யப்பட்டது.

திருக்கோவலூர் அருகே சிவாலயம் அமையப்பெற்ற கிராமங்கள் சில:

ஆற்றின் வடகரை

குலதீபமங்கலம் எனும் அகரம், விளந்தை, கழுமரம், மணலூர்பேட்டை, ஜம்பை, வசந்தகிருஷ்ணாபுரம், வீரப்பாண்டி நெற்குணம், வேட்டவலம், கண்டாச்சிபுரம், ஞானானந்தமடம், பனைமலை

ஆற்றின் தென்கரை:

மெய்யூர், திருப்பாலப்பந்தல், தகடி, கூவனூர், கள்ளிப்பாடி செங்கணாங்கொல்லை, சோழபாண்டிபுரம், ரிஷிவந்தியம், தியாகதுருகம், கிளியூர்

திருச்சிற்றம்பலம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

8. நடுநாடு

வேழம் உடைத்து மலைநாடு, மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து - பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர் வயற்றொண்டை
நன்னாடு சான்றோருடைத்து

எனும் பாடல் தமிழகத்தில் ஒரு காலத்தில் பெரிய பிரிவுகளாக விளங்கிய பெருந் நாடுகளைக் குறிக்கின்றது.

தேவாரப் பாடல் பெற்ற தலங்களைக் கூறும் பாடல்:

துங்கவட கயிலாய முதலா ஐந்து துளு ஒன்று
தொண்டை வடநாட்டு எண்ணான்கு
தங்கு நடுநாட்டு இருபத்திரண்டு பொன்னித்தலம் நூற்றுத்
தொண்ணூறு மலைநாட்டு ஒன்று
கொங்கேழு சிங்களத்தில் இரண்டு வைகை கொழி தமிழ்நாட்டு
ஈரேழு முதலாஞ் சூலச்
செங்கையார் தலம் இருநூற்று எழுபா நான்கு

என 274 தலங்கள் அமைந்துள்ள ஒன்பது நாடுகளையும் அவற்றுக்கான தலங்களின் எண்ணிக்கையையும் கூறுகிறது. இதில் இடம்பெற்றுள்ள 22 பாடல் பெற்ற/ தலங்கள் கொண்ட நடுநாடு என்பது தமிழகத்திற்கு நடுநாயகமாகவும் மற்றும் சோழநாட்டிற்கும் தொண்டை நாட்டிற்கு இடைப்பட்டு இருந்தமையினாலும் இப்பெயர் பெற்றது.

தெய்வீகன் எனும் ஆற்றலும் அழகுங்கொண்ட மன்னனின் ஆட்சிக்கு உரியதாயிற்று இந்நாடு என்றும் இதன் எல்லை தெற்கே திருவரத்துறை, திருவதிட்டகுடி, வெள்ளாறும், மேற்கே கொல்லிமலையும், வடக்கே கடியாறு என்னும் செய்யாறும், கிழக்கே கடலுமாகும் என்றும் கருதப்படுகின்றது. மேலும் இதனைத்

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)
திருமுனைப்பாடிநாடு, மகதநாடு, மலாடு என்று அழைத்தனர் அல்லது இம்மூன்று நாடுகளையும் தன்னகத்தே கொண்டது நடுநாடு என்றவாறும் கொள்ளலாம். நடுநாட்டின் வடமேற்கே அமைந்துள்ள திருவண்ணாமலை உள்ளிட்ட பகுதிகளை மகதநாடு என்றும் தென்கிழக்கே அமைந்துள்ள திருநாவலூர் திருவாமூர் திருவதிகை உள்ளிட்ட பகுதியை திருமுனைப்பாடிநாடு என்றும் இடைப்பட்டதனை மலாடு எனவும் கொள்ளலாம். இந்நடுநாட்டின் தலைநகராகத் திகழ்ந்ததுவும் திருக்கோவலூரே.

நடுநாடு சமயக்குரவர் நால்வருள் இருவர் தோன்றப் பெற்ற பெருமையையுடையது. (சேக்கிழார் திருமுனைப்பாடி நாடு என்கிறார்.) திருவாமூர் எனும் பதியில் திருநாவுக்கரசரும், திருநாவலூர் எனும் பதியில் சுந்தரரும் தோன்றியருளினர். திருநாவுக்கரசர் மருள்நீக்கியாக வளர்ந்து திருப்பாதிரிப்புலியூரில் பாடலிபுரம் என வழங்கிய இடத்தில் சமணம் சார்ந்து 'தருமசேனர்' எனப்பட்டம் பெற்று பின்பு சூலைநோயினால் பீடிக்கப்பெற்று, திருவதிகை வீரட்டானத்துறை அம்மான் திருவடி சேர்ந்து, பின்பு பல்லவ மன்னனாம் முதலாம் மகேந்திரவர்மனையும் சமணம் போக்கி மேன்மை கொள் சைவநீதி சேர்ப்பித்த அனைத்து வரலாறும் நிகழ்ந்தது நடுநாட்டிலேயே.

சுந்தரர் நாவலூரில் தோன்றி நரசிங்க முனையரையரால் வளர்க்கப்பெற்று, பின்பு வாலிபம் அடைந்தபோது புத்தூர் சடங்கவி சிவாசாரியார் மகளுடன் திருமணம் நடைபெறும் தருவாயில் ஆண்டவனால் தடுத்தாட்கொள்ளப்பட்டு வெண்ணெய் நல்லூரில் "பித்தா பிறைசூடி" எனச்சொற்றமிழால் பாடியமை அனைத்தும் நிகழ்ந்தது நடுநாட்டிலேயே.

சந்தானாச்சார்யார்களில் மெய்கண்டார், அருள்நந்திசிவம், மற்றும் மறைஞானசம்பந்தர் ஆகியோர் தோன்றி வாழ்ந்தது முறையே திருவெண்ணெய் நல்லூர், திருத்துறையூர், திருவிடையாறு எனும் நடுநாட்டுப் பதிகளிலேயே ஆகும்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

14) சித்தாந்த சாத்திரங்களில் 'உண்மைவிளக்கம்' எனும் அரிய நூலை இயற்றிய மணவாசகங்கடந்தார் பிறந்து வளர்ந்த ஊர் திருவதிகை எனும் நடுநாட்டுப்பதியே ஆகும்.

நடுநாட்டு நாயன்மார்கள் மொத்தம் எண்மர். அவராவர்,

1) மெய்ப்பொருள் நாயனார் - திருக்கோவலூர்

2) திருநாவுக்கரசர் - திருவாமூர்

3) கலிக்கம்பர் - பெண்ணாகடம்

4) திருநீலகண்ட யாழ்ப்பாணர் - எருக்கத்தம்புலியூர்

5) சடையனார் - திருநாவலூர்

6) இசைஞானியார் - திருநாவலூர்

7) நரசிங்க முனையரையர் - திருநாவலூர்

8) சுந்தரர் - திருநாவலூர்

திருச்சிற்றம்பலம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

9. நடு நாடு தந்த நாயன்மார்கள்

திருத்தொண்டர்கள் என்பார் சிவானுபூதிச் செல்வர்கள். தமிழகத்தில் திருத்தொண்டர்கள் காலந்தோறும், பல்வேறு இடங்களில், பல்வேறு குலத்தினில் தோன்றி பல்வேறு (தொழில்) இனிய திருத்தொண்டுகளில் ஈடுபட்டு சிவத்தை காதலித்து அவனது தொல் புகழ்பாடி வழிபட்டு வந்தனர். இவர்கள் மண், புணல், அனல், காற்று, விசும்பு எனும் ஐம்பெரும்பூதங்கள் தத்தம் நிலை கலங்கினாலும் சிந்தை கலங்காது 'ஞானமாவது ஈசன் பால் அன்பே' என்று செம்பொருட்சிவத்தை அன்புடன் வழிபட்டு வாழ்ந்தனர். இவர்கள் அறிவையறிவது பொருளெனக் கொண்டு உயிர்களில் அறியாமை முன்னின்று அறிவுப் பொருளெனக் கடவுளை காணவொட்டாது மறைப்பதால், அறியாமையை அகற்றக் கூடிய சமயக்கல்வி கற்று, உலகப் பயன் எதனையும் விழையாது சிவபெருமானிடத்திலும் அவனடியாகளிடத்திலும் அன்பு பூண்டு தொண்டாற்றி கற்றலின் பயனைப்பெற்று வாழ்ந்து வந்தனர். அடியவர்க்கு அன்பிலார் ஈசனுக்கு அன்பிலார்; எவ்வுயிக்கும் அன்பிலார் தமக்கும் அன்பிலாரெனும் உண்மையை உணர்ந்து ஒழுகி மக்களுக்கும் உணர்த்தி வாழ்ந்தனர். இலங்கும் உயிர் அனைத்தும் ஈசன் கோயில் என்றும், மன்னுயிரனைத்தும் தன்னுயிர் போல் கருதி பிற உயிர்க்கு தீங்கு புரியாது, தியாகத்திற்கு உட்படுவதே அறவொழுக்கம் என்றும், பிறருக்குத் தீங்கு சூழ்வித்து ஒருவர் வாழ விரும்புவது அறவாழ்வாகாது என்றும் மக்களுக்கு அறிவுறுத்தி தமிழ் மரபைக் காத்து வாழ்ந்தனர். மற்றும் எம் பக்கலில் உள்ள பொருள் எதுவானாலும் அது எம்பிரான் அடியார்களது உடமை ஐயமில்லை என்று முழங்கி அறநெறியில் ஈட்டிய பொருளனைத்தும் சிவன் தந்ததென்று, யார் யார் எது கேட்டாலும் இல்லையென்னாது கொடுத்து உதவி பல்லுயிரும் களிகூர

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

பொருளை அருளாக மாற்றி இன்புற்றனர். சிவனடியார்களது சித்தம் சிவமாகும்போது அவர்கள் செய்வதெல்லாம் தவமாகுமென்பர். முத்திக்கே வித்தாகும் தெய்வக்கலையறிவும் இறையுணர்வும் தந்து நிலையாமையை உயிர்களுக்கு உணர்த்தி, உலகப்பற்றறுத்து நிலைத்து நிற்கும் பொருளின்மேல் (கடவுளின்மேல்) அன்பு பெறும்படிச் செய்யும் திருக்கோயில் வழிபாட்டினை மேற்கொண்டு ஒழுக்க சீலர்களாய் சிவத்தை காதலித்து, சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானமும் பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானமும், உவமையிலாக் கலைஞானமும் உணர்வரிய மெய்ஞ்ஞானமும் பெற்ற ஞாலம் அளந்த மேன்மைத் தமிழால் அறிவு நெறி மருவும் அருட்பாடல்கள் பலபாடி வழிபட்டனர். உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லால் எங்கள் உத்தமனே என்று சிவனை தாமும் வழிபட்டு பிறரையும் வழிபடச் செய்து இறையருளால் செயற்கரிய வியத்தகு அற்புதங்கள் பல மக்களுக்கு நிகழ்த்திக் காண்பித்து கடவுள் உண்மையினை நிலைநிறுத்தி அறிவொளி பரப்பி அருளொளி வீசும் அனைத்துலகும் தொழுதேத்தும் தில்லைத்திகழ் ஒளியை வழிபட்டு அவன் திருவடியில் சேர்ந்து அழியா இன்பம் கண்டனர். இவர்களது திருவுருவங்களை திருக்கோயில்களில் வைத்தும், பன்னிரு திருமுறைகளையும் நாளும் ஓதி வழிபடுவதால் நம்மிடையே உண்மை - சீலம், ஒழுக்கம், வீரம், உறுதி, தியாகம் ஆகியவைகள் அரும்பி ஆண்மநேய ஒருமைப்பாடு பெற்று அறவாழ்வினை மேற்கொள்ளும்படிச் செய்து பிறவாநெறியளித்து சிவலோகநாதன் சேவடிகீழ் இன்புறச் செய்யும்.

இனி நடுநாட்டினைச் சார்ந்த திருத்தொண்டர்களின் சரிதையை சுருக்கமாகக் காணலாம்.

திருநாவுக்கரசர்

திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் வேளாளர் மரபில் குறுக்கையர் குடியில் (சுமார் கி.பி. 574ல்) புகழனார்க்கும் மாதினியார்க்கும் மகனாகத் திருநாவுக்கரசர் அவதரித்தார்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)
பெற்றோர்கள் அவருக்கு மருள்நீக்கி எனப் பெயரிட்டு அழைத்தனர். இளம்பருவத்தில் தம் பெற்றோரை இழந்தார். தமக்கையார் திலகவதியார் தமக்கு மணம் பேசி முடிக்கப்பட்ட கலிப்பகையார் போர்முனையில் உயிர் நீத்த செய்தி கேட்டு தாமும் தமது உயிரை விட இறங்கியபோது மருள்நீக்கியார் அவரது கால்களில் விழுந்து தன்னை விட்டுச் செல்வாராகில் தானும் உயிர் நீத்து விடுவதாகக் கூறினார். திலகவதியார் தம்பி வாழ்வதற்காகவே தாமும் உயிர்தாங்கி வாழத்தான் வேண்டும் என உறுதிகொண்டார்.

மருள் நீக்கியார் காவளர்த்தும் குளந்தொட்டும் பல அறப்பணிகளைச் செய்து கடப்பாடு வழுவாமல் வாழ்ந்து வந்தார் எனினும், உலக நிலையாமையை உணர்ந்து சமயநூற் கோட்பாடுகளை ஆராயப் புகுந்த போது நம்பர் அருளாமையால் சமணசமயம் குறுகினார்.

சமண சமயத்தில் மேம்பட்டுத் தருமசேனர் என்னும் பட்டம் பெற்று திருப்பாதிரிப்புலியூர் அருகே இருந்த பாடலிபுத்திரம் எனும் இடத்தில் வாழ்ந்து வந்தார்.

இவரது செயலால் மனவருத்தமடைந்த திலகவதியார் திருவதிகை அணைந்து அங்குறையும் ஈசனுக்கு சரியைத் தொண்டு செய்து வந்தார்.

சமணராகிய தருமசேனருக்கு சூலைநோய் பீடித்து வருத்த தமக்கையாரிடம் சரண் புகுந்தார். திருவைந்தெழுத்தோதித் திருவாளன் திருநீறு திலகவதியார் அளிப்பப் பெருவாழ்வு வந்ததெனப் பெற்றுப் பூசிக்கொண்டு திருவதிகைப் பெருமானை வழிபட்டுக் கூற்றாயினவாறு விலக்ககிலீர் எனப்பாடிச் சூலை நோய் நீங்கப்பெற்றார்.

சமணர்கள் இவரை நீற்றறையில் இட்டபொழுது மாசில் வீணையும் மாலைமதியமும் போன்ற ஈசன் திருவடி நிழலைப் பாடியும் நஞ்சூட்டியதனை நஞ்சமுது ஆக்குவித்தார் எனப் பின்பு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நனிபள்ளியில் பாடியும், யானையை [illegible]போது திண்ணன் கெடிலப்புனலுமுடையார் ஒருவர் தமர் நாம் அஞ்சுவது யாதொன்றுமில்லை என்று பாடியும் பின்பு கல்லொடுகட்டிக் கடலில் வீழ்த்திய பொழுது கற்றுணை பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே என்று பாடியும் அவ்வின்னல்களிலிருந்த தப்பியதோடு மதிகெட்டிருந்த மன்னன் மகேந்திரவர்மனையும் மெய்நெறியாம் சைவநெறியில் சேர்ப்பித்தார். பெண்ணாகடத்தில் சுடர்க்கொழுந்தை வேண்டி மின்னார் மூவிலை சூலம் தன்மேல் பொறிக்கப்பெற்றார்.

'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்றும் 'தொண்டலால் துணையும் இல்லை' என்றும் கூறித் தமிழகத்தில் கையில் சுமந்த ஊழவாரப்படையுடன் தலயாத்திரை செய்து தமிழர்களை நெறிப்படுத்தினார். இவர் சைவம் திரும்பியவுடன் முதலில் தரிசித்தத் தலங்களில் திருக்கோவலூர் ஒன்று. இத்தலத்துப்பதிகம் இதற்குச் சான்றாகவுள்ளது. பதிகத்தில், 'அழுக்குப் பாயும் உடலையும் புலன்களையுமே போற்றுகின்ற குருடனாகிய யான் செய்வதென்னே கோவல் வீரட்டனீரே?' என்கின்றார். கி.பி. 644ல் சீர்காழியில் ஞானசம்பந்தரை முதல் முறையாகச் சந்தித்து அவரால் "அப்பரே" என அழைக்கப் பெற்றார். பின்பு பல தலங்களை வணங்கி சத்திமுற்றத்து சிவக்கொழுந்திடம் கூற்றம் குமைப்பதன் முன் பூவாரடிச்சுவடு என் மேல் பொறித்துவை என வேண்டி திருநல்லூரில் இறைவனால் திருவடிசூட்டப்பெற்று, 'வானோர் இனந்துருவி மணிமகுடத்தேறத்துற்ற இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப்பில்கி நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார் நல்லூரெம் பெருமானார் நல்லவாறே' என பதிவு செய்துள்ளார்.

திங்களூரில் அப்பூதியடிகளின் மகன் அரவு தீண்டி இறக்க ஒன்று கொலாம் எனப்பாடி அவனை உயிர்ப்பித்தார். திருவாரூரில் திருவிழாக் கண்டு மகிழ்ந்தார். திருப்புகலூரில் ஞானசம்பந்தரை இரண்டாம் முறையாகச் சந்தித்து உடனுறைந்தார்.

பின்னர் நாவுக்கரசரும், ஞானசம்பந்தரும் சேர்ந்து
Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)
தலயாத்திரை செய்தனர். திருவீழிமிழலையில் இருவரும் படிக்காசு பெற்றனர். திருமறைக் காட்டில் வேதம் சாத்திய கதவை நாவுக்கரசர் பதிகம் பாடித் திறப்பித்தார், பின்னர் நாவுக்கரசர் தனியாக யாத்திரை மேற்கொண்டு செல்லும் போது பழையாறை வடதளியில் உண்ணா நோன்பிருந்து அரசன் உதவியால் சமணர்களை அகற்றி அத்தலத்து இறைவனை வழிபட்டார். திருப்பைஞ்ஞீலியில் வழியிடையே இறைவனால் கட்டமுது தரப்பெற்றார்.

பின்னர் திருக்கயிலையை தரிசிக்க விரும்பிப் பனிமலையில் ஏறிச்சென்றார். செல்லும் வழியில் இறைவனால் தடுத்தாளப்பெற்று அங்குள்ள தடாகத்தில் மூழ்கித் திருவையாற்றில் எழுந்து கயிலைக் காட்சியைக் கண்டார். பின்னர்ப் பலதலங்களை வழிபட்டுத் திருப்பூந்துருத்தியில் சிறிது காலம் தங்கியிருந்து அங்கே திங்களும் ஞாயிறும் தோயும் திருமடம் ஒன்று கட்டினார். ஞானசம்பந்தர் திருப்பூந்துருத்திக்கு வந்தபோது பிறருடன் சேர்ந்து தாமும் அவரது பல்லக்கினைச் சுமந்து மூன்றாம் முறையாக அவரைச் சந்தித்தார். சில நாட்கள் உடனுறைந்து ஞானசம்பந்தர் தொண்டை நாட்டு யாத்திரைக்காகப் பிரிந்து சென்றதும் நாவுக்கரசர் பாண்டி நாட்டு யாத்திரை மேற்கொண்டார். இறுதியாகத் திருப்புகலூரில் உழவாரப் பணி செய்து வரும்போது தமது எண்பத்தொராம் வயதில் (சுமார் கி.பி. 655ல்) சித்திரைமாதம் சதயநாளில் புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் எனத் தாண்டகம்பாடி சிவானந்த ஞானவடிவேயாகி அண்ணலார் சேவடிக்கீழ் அமர்ந்தார்.

கலிக்கம்பர்

தூங்கானைமாடத்து சுடர்க்கொழுந்து வீற்றிருக்கும் பெண்ணாகடத்தில் வணிகர்குலத்திலே உதித்தவர் கலிக்கம்பர். சுடர்க்கொழுந்து திருவடிகளுக்கு திருத்தொண்டு செய்பவர். சிவனடியார்ப் பற்றைத் தவிர வேறு எந்தப் பற்றும் இல்லாதவர். கறிவகைகள், நெய், தயிர், பால்கனி வகைகள் முதலானவற்றைக்

கொண்ட திருவமுது செய்வித்து அவர்களுக்கு வேண்டுவன
Digitization by Hindu-Heritage-Foundation of America: HHFA(USA)
வாகிய பிறநிதியங்கள் எல்லாவற்றையும் மகிழ்வுடன் கொடுப்பார்.

இவ்வாறு கலிக்கம்பர் திருத்தொண்டு செய்துவரும் நாட்களில் ஒருநாள் வழக்கம்போல் தமது திருமனையில் அமுது செய்ய வந்த திருத்தொண்டர்களையெல்லாம் விதிமுறைப்படி திருவமுது செய்விக்கத் தொடங்குமுன் அவர்களின் திருவடிகளை விளக்கத் தொடங்கினார். அப்போது அவர் மனைவியார் அத்திருமனை முழுதும் விளக்கம்பெற விளக்கித் திருவமுதும் கறியமுதும், தூய தண்ணீரும் ஆகிய இவற்றுடனே உண்ணும் மற்றைப் பொருள்களையும் செம்மைபெற அமைத்துவிட்டு வந்து கரகத்திலே நீர்வார்க்கக் கணவனார் அடியார்களுடைய காலடிகளையெல்லாம் விளக்கி பாதபூஜை செய்யலானார். அப்போது முன்னாளில் தமக்குப் பணிவிடைக்காரராய் இருந்து ஏவற்பணியை வெறுத்துக் கோபித்துக் கொண்டு வெளியேறிய ஒருவர் சிவனடியார் வேடந்தாங்கி, அங்கு வந்த அடியார்களுடனே கூடி ஒருவர் பின்னால் வந்து சேர்ந்தார். கலிக்கம்பர் அவரது திருவடிகளையும் விளக்கத் தமது திருக்கரங்களினால் பற்றினார். அப்போது காதல் மனைவியார், 'இவர் முன்பு நமது ஏவலைச் செய்யாது விட்டு சென்றவர் போலும்,' என்று எண்ணும் போது கரகநீர் வார்க்கத் தாமதப்பட்டது, அதைக் கண்டதும் கலிக்கம்பர் தம் மனைவியாரை ஏறிட்டுப் பார்த்து, 'இவள் இவ்வடியார் முன்பு இருந்த நிலையைக் குறித்து வெட்கித் திருவடி விளக்க நீர்வார்க்காது தயங்குகிறாள் போலும்' என்று மனத்தில் நினைத்துக் கொண்டு தம் மனைவியாரை மீண்டும் பார்க்காமல் வடிவாளை உருவியெடுத்து மனைவியாரின் கையிலிருந்த நீர்க்கரகத்தையும் வாங்கிக் கொண்டு, கரகநீர் வார்க்கத் தாமதித்த தம் மனைவியின் கையைத் துண்டாக வெட்டியெறிந்தார், பிறகு கரகத்தை எடுத்து அடியாரின் பாதங்களுக்குத் தாமே நீர் வார்த்து அவருடைய பாதங்களை விளக்கினார்.

பின்னர் அவ்வடியார் திருவமுது செய்வதற்கு வேண்டிய
Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)
ஏனைய செயல்களையெல்லாம் கலிக்கம்பர் தாமே செய்து துலங்காத சிந்தையுடன் அத்தொண்டருக்கு திருவமுது செய்வித்தார். அதன்பின்னர் அளவற்ற பெருமைபெற்ற கலிக்கம்ப நாயனார், தமக்கேற்ற திருத்தொண்டின் வழியிலே வழுவாமல் நின்று சிவபெருமானுடைய திருவடி நீழலை அடைந்தார்.

திருநீலகண்ட யாழ்ப்பாணர்

நடுநாட்டிலே திருவெருக்கத்தம்புலியூரில், பாணர் மரபில் திருநீலகண்ட யாழ்ப்பாணர் வாழ்ந்து வந்தார். இவர் சிவபெருமான் திருப்புகழை யாழில் இட்டு சிறப்பாக யாழ்வாசித்து வந்ததால் யாழ்ப்பாணர் என்று அழைக்கப்பட்டார். இவரது மனைவியாரின் பெயர் மதங்கசூளாமணி என்பதாகும். அவரும் இசையில் வல்லவர், கணவர் யாழ் வாசித்துப் பாட, அவரது மனைவியும் இனியகுரலில் பாடுவார். இவர்கள் சோழநாட்டிலுள்ள சிவத்தலங்களையெல்லாம் வணங்கிக் கொண்டு, மதுரை மாநகரை அடைந்தார்கள். இருவரும் அங்குள்ள திருஆலவாய் என்ற திருக்கோயிலுக்குச் சென்று சாதியின் காரணமாக ஆலயத்தினுள் நுழையமுடியாமல் கோயிலின் வெளிவாசலில் நின்று யாழை மீட்டிக் கொண்டு காலா காலத்திற்குரிய பண்களை அருமையாக அமைத்து சிவபெருமானின் புகழைப்பாடி வந்தார்கள். யாழ்ப் பாணரின் இசையைக் கேட்டு இன்புற்ற திருஆலவாய்ப் பெருமான், தமது தொண்டர்கள் எல்லோருடைய கனவிலும் அன்றைய இரவிலே தோன்றி 'பாணரை எம் திருமுன் அழைத்து வருக!' என்று கட்டளையிட்டார். மறுநாள் பொழுது விடிந்ததும் அடியார்களெல்லோரும் திருநீலகண்ட யாழ்ப்பாணரைக் கோயிலுக்குள்ளே அழைத்துச் சென்றனர். திருநீலகண்ட யாழ்ப்பானர், இறைவனை வணங்கித் தொழுது மகிழ்ந்து கூடல் பெருமானின் புகழை யாழினில் அமைத்து ஆனந்தமாகப் பாடினார். அப்போது பெருமான், திரிபுரத்தையெரித்த பண்பையும், அந்தச் செயலுக்காக பூமியாகிய தேரின் மீது நின்ற தன்மையையும், யானையின் தோலையுரித்துப் போர்த்திக் கொண்ட

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வரலாற்றையும், காமனை எரித்த கதையையும், திருமாலுக்கும், பிரமனுக்கும் அரியவராய் விளங்கும் அவர் அடியார்களுக்கு எளியவராய்க் காட்சிதரும் நிலையையும், பெரும்பாணர், தமது யாழினில் அமைத்து அன்போடு உளமுருக யாழிசைத்ததுக் கேட்டு சிவபெருமான் 'இந்தப் பாணனார் பாடுகிற சந்த யாழானது, தரையிலுள்ள சீதம் தாக்கினால் அதனுடைய நரம்புகளின் இறுக்கம் அழியும், ஆதலால், இவருக்கு முன்னால் அழகான பலகையொன்று இடுங்கள்! என்று ஒரு வானொலி வழங்கினார். அதைக் கேட்ட தொண்டர்கள் அவ்வாறே ஒரு பொற் பலகையைப் பாணர்முன் கொண்டு வந்து இட்டார்கள். பாணரும் அந்தப் பலகையினில் உட்கார்ந்து, யாழ் வாசித்து, அம்மையப்பரின் புகழைத் தீந்தமிழில் பாடித் திருவருள் பெற்றார்.

பிறகு, பெரும்பாணர் இன்னும் சில சிவத்தலங்களையும் கும்பிட விரும்பி மதுரையிலிருந்து புறப்பட்டு, திருவாரூருக்கு வந்து சேர்ந்தார். அங்கு தமது மரபு ஒழுக்கத்தின்படி திருக்கோயில் திருவாயிலின் முன்பு உட்கார்ந்து, கூற்றுவனை உதைத்தருளிய சிவபெருமானின் திறத்தையும் அடியார்களுக்குத் தாயை விடச்சிறந்த பெருங்கருணை தந்தருளும் பேரருட்திறத்தையும் யாழிலே அமைத்து அழகாகப் பாடினார். சிவபெருமான் அதைக் கேட்டு மகிழ்ந்து அங்கு பாணருக் கென்றே வேறொரு வாயில் வடதிசையில் வகுத்தருளினார். பெரும்பாணர், அதன் வழியே சென்று, வன்மீக நாதரை மூலத் தானத்தில் நேரில்தரிசித்து வணங்கி வழிபட்டு வந்தார்.

இவ்வாறு யாழ்ப்பாணர் திருவாரூரில் சிலகாலம் தங்கியிருந்து விட்டு, பிறகு அங்கிருந்து புறப்பட்டு பலசிவத்தலங்களையும் வணங்கிச் சென்று சீர்காழிக்கு வந்து சேர்ந்தார். அங்கு திருஞானசம்பந்தரின் திருவடிகளை வணங்குவதற்காக அவரைக் காணச் சென்றார். பாணனார் வந்த செய்தியை, திருஞானசம்பந்தர் தெரிந்துகொண்டு அவருக்குத் தக்கவாறு சிறப்புகள் செய்தார். பிறகு யாழ்ப்பாணர் திருஞானசம்பந்தர் பாடியருளும்

Digitization by Hindu Heritage Foundation of America (USA)
திருப்பதிகத்தின் இசையைத் தம் யாழிலே அமைத்து வாசிக்கும் பேறு பெற்று, அவருடனேயே பலகாலம் தங்கியிருந்து முடிவில் திருநல்லூர்ப் பெருமணத்தில் ஞானசம்பந்தருடனே சிவஜோதியில் கலந்து சிவபெருமானின் திருவடி நிழலை அடைந்தார்.

சடைய நாயனார்

சடையனார் என்பது இறைவர்க்குரிய பெயர் இதை இவர்க்குத் தூய்மையின் பொருட்டு இட்டு வழங்கினர். இவர் திருமுனைப் பாடி நாட்டிலுள்ள திருநாவலூரில் ஆதிசைவ குலத்தில் அவதரித்து, அந்தக் குலம் விளங்க வாழ்ந்திருந்தவர்.

இவர் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தந்தையார் என்பது ஒன்றே இவர் செய்த மாதவத்தினை விளக்கவல்லது. தம்பிரான் தோழரைப் பெற்றெடுத்த பெருமையைக் காட்டிலும் வேறொன்றினை இவருக்கு உறைக்க வேண்டுமோ?

இசைஞானியார்

அளவிலாப் பெருமைகள் வாய்ந்த சடையனாரின் அருட்செல்வத் திருமனைவியார் இசை ஞானியார். சிவபெருமானால் தடுத்தாட்கொள்ளப்பெற்ற சுந்தரரை ஈன்ற பெரும் புகழுக்குரியவர். உயர்வான சிவவேதியர் குலத்தில் வந்தவர். இவரது பெருமையை நம்மால் சொல்லவும் முடியுமோ?

நரசிங்க முனையரையர்

பெருவளத்தில் சிறந்து விளங்கிய திருமுனைப் பாடி நாட்டில் நீதி பிறழாத குறுநிலமன்னர் மரபில் அரசராக விளங்கியவர் நரசிங்க முனையரையர். சிவபெருமானது திருவெண்ணீற்றையே தமக்குரிய செல்வமாகக் கருதினார். இவர் மெய்ப்பொருள் நாயனாரின் சகோதரர் என சிலர் கருதுகின்றனர். சேக்கிழார் அவ்வாறு ஏதும் தமது பெரிய புராணத்தில் கூறவில்லை.

இவர் சிவபெருமானது திருக்கோயில்கள் தோறும் திருச்செல்வங்களைப் பெருக்கிக் காப்பதில் தம் உயிரையிழக்க

நேர்ந்தாலும் பின் வாங்காதவர். சிவநெறித்தொண்டர்களைக் கனவிலும் மறவாமல் ஆதரித்து வருபவர்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

திருவாதிரை அன்று பெருமானுக்கு விசேஷ பூசை செய்து தம்மை வந்தணையும் திருநீறணிந்த திருத்தொண்டர்கள் ஒவ்வொருவருக்கும் நூறு பசும்பொன்னுக்கும் குறையாமல் வழங்கித் திருவமுது செய்வித்து வழிபட்டு வந்தார். அவ்வாறு ஒருமுறை பொன்னளிக்கும் வேளையில் தூர்த்தரான ஒரு சிவனடியார் மானநிலை அழியும் தன்மையோடு கூடிய காமவெறியின் அறிகுறிகள் அவ்வடியாரின் மேனியில் தெரிய வந்து சேர்ந்தார். அவருடைய வடிவத்தைக் கண்டு பக்கத்திலிருந்தவர்கள் இகழ்ந்து அவரை அணுகாமல் அருவருத்து ஒதுங்கினார்கள்.

நரசிங்கமுனையரையரோ அந்த மோக வடிவினரின் எதிரே சென்று கைகூப்பி வணங்கி, அவரை அழைத்துக் கொண்டுவந்து மிகவும் பாராட்டி உபசரித்தார். சீலம்இல ரேஎனினுந் திருநீறு சேர்ந்தாரை ஞாலம் இகழ்ந் தருநரகம் நண்ணாமல் எண்ணுவார். அங்கு வந்த அடியார்களுக்குக் கொடுப்பதைக் காட்டிலும் அந்த தூர்த்தருக்கு இரட்டிப்பாக இருநூறு பொன் கொடுத்து அதற்கு மேலும் அவரைத் தொழுது இனிய மொழிகள் சொல்லி உபசரித்து, அவருக்கு விடை கொடுத்து அனுப்பினார்.

இவர் சுந்தரமூர்த்தி நாயனாரைத் தமது அபிமான புத்திரராக எடுத்து வளர்த்தவர் என்பது இவரது சிவஒழுக்கத்திற்குமேலும் மெருகூட்டும் ஓர் செய்தி.

சுந்தர மூர்த்தி நாயனார்

பன்னலம் திகழும் பரம்பொருளை இன்னிசை வடிவாகக் கண்ட பெருமை உடையது பண்டைத் தமிழ்நாடு.

பண்ணிடைத் தமிழொப்பாகிய பரம்பொருள் தாமே வலிய வந்து தடுத்தாட்கொண்டு தம்மை சொற்றமிழ் பாடப்பணித்தப் பெருமையினை உடையவர் சுந்தரமூர்த்தி நாயனார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

திருத்தொண்டத்தொகை எனும் பதிகத்தினைப் பாடும் பொருட்டே இவர் நிலவுலகில் அவதரித்ததாகச் சேக்கிழார் கூறுவார்.

திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூர் எனும் பதியில் சிவபெருமானுக்கு பரம்பரை வழியாக அன்படிமை கொண்ட சைவ அந்தணர் குலத்தில் சடையனார் இசைஞானியார் தம்பதியருக்கு சுந்தரர் பிறந்தார். அவருக்கு நம்பியாரூரன் என்று பெற்றோர் பெயர்சூட்டினார்கள்.

குழந்தை தேருருட்டி விளையாடிக் கொண்டிருந்தபோது அரசராகிய நரசிங்கமுனையரையர் கண்டார். கண்டதுமே நம்பியாரூரரை அவரது பெற்றோரின் இசைவுடன் தமது அபிமான புத்திரராகப் பெற்றார். அரண்மனையில் தமது ஆதிசைவ அந்தணர் மரபுக்குரிய முறையிலே ஒழுகி வளர்ந்து வாலிபமடைந்தார் நம்பியாரூரர்.

நாவலூருக்கு அருகேயுள்ள புத்தூர் சடங்கவி சிவாசாரி யாருடைய செந்தாமரைப் போன்ற அழகுடைய மகளை நம்பி யாரூரருக்கு திருமணம் செய்ய முடிவு செய்யப்பட்டது.

குறித்த நாளில் திருமணம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது ஒரு முதிய அந்தணர் நரைமுடியும், இடையிலே பழமையான கோவணமும், ஒரு கையில் குடையும் மறுகையில் தருப்பை முடிந்த மூங்கில் தண்டமும் அமையப்பெற்ற கோலத்துடன் மணப்பந்தலில் மணவினை துவங்கு நேரத்தில் வந்தடைந்து நம்பியாரூரரின் எதிரில் சென்று, 'உனக்கும் எனக்கும் உள்ள உடன்பாட்டால் முன்னம் ஒரு பெரும் வழக்கு இருக்கிறது! அந்த வழக்கை முடித்த பிறகு தான் உன் திருமணத்தை நீ நடத்த முயலவேண்டும்!' என்று மொழிந்தார். அதனைக் கேட்டு திகைத்த சுந்தரர் அவரது வழக்கு யாது என வினவினார்.

அதற்கு கிழவேதியர், 'மறையோர்களே! இந்த நாவலூரன் எனக்கு ஆட்பட்ட அடியான். எனக்கு உடைமையான அடிமை. இதுதான் நான் சொல்ல வந்த வழக்கு!' என்றார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இதனைக் கேட்டு சிலர் குமுறினர், சிலர் ஏளனம் செய்தனர், சிலர் சிரித்தனர். சுந்தரரும் சிரித்தார். கிழவேதியர் 'உன் அப்பனுக்கு அப்பனான பாட்டன் எனக்கு ஆள் அடிமை ஓலை எழுதிக் கொடுத்திருக்கும் போது நீ இன்று சிரித்தது ஏனடா?' என்று கேட்டார். அதற்கு சுந்தரர், 'வேதியரே குற்றமற்ற அந்தணர்கள் மற்றோர் அந்தணருக்கு அடிமையாவது என்ற வார்த்தையை இன்றுதான் உம்மிடமிருந்து கேட்கிறோம். இப்படிப் பேசும் நீர் என்ன பித்தனோ?' என்றார். அதற்கு கிழவேதியர், 'வீணாக எதிர் நின்று விளையாட்டாக வித்தகம் பேசவேண்டாம்! எனக்கு ஆளடிமையான நீ எனக்குப் பணி செய்ய வேண்டும்' என்றார்.

ஆளடிமை ஓலை தன்னிடம் உள்ளதாக கிழவேதியர் கூறியதால் அந்த ஓலையினைக் காட்டும்படி நம்பியாரூரர் கூறினார். அதற்கு கிழவேதியர், 'நீ அந்த ஓலையைக் காணத்தகுதியுள்ளவனா? அந்த ஓலையை நீதி சபையின் முன்னிலையில் நான் காட்டிய பிறகு எனக்கு அடிமைப் பணி புரியத்தான் நீ தகுதியுள்ளவன்!' என்று கூறினார். அதைக் கேட்டு வெகுண்ட நம்பியாரூரர் கிழவேதியரைத் துரத்தி அவர் கையிலிருந்த ஓலையை பலாத்காரமாக பறித்து, 'அந்தணர் வேறொருவருக்கு ஆட்பட்டு அடிமைத் தொழில் செய்வது என்ன முறை?' என்று கேட்டுக் கொண்டே அவ்வோலையைக் கிழித்தெறிந்தார்.

உடனே முதியவர் நம்பியாரூரரைப் பிடித்துக் கொண்டு, 'இப்படி நீ ஓலையைக் கிழித்தெறிதல் முறையோ?' என்று முறையிட்டார். இதைக் கண்டு திருமணத்திற்கு வந்திருந்த சுற்றத்தார் இந்த விசித்திரமான வழக்கை கொண்டு வந்துள்ள வேதியரின் ஊர் எது என வினவினர். அதற்கு அக்கிழவேதியர் தம்மூர் அருகே அமைந்துள்ள திருவெண்ணெய் நல்லூர் என்றும் ஓலையைக் கிழித்தெறிந்ததால் நம்பியாரூரன் தனக்கு அடிமை என்பதனை நிரூபித்துவிட்டான் என்றும், கூறினார். நம்பியாரூரர், 'நீர் வெண்ணெய் நல்லூர் வாசி என்றால் உம்முடைய பிழை நெறி

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

வழக்கை அங்கேயே போய் பேசிக்கொள்ளும்! போம்!' என்றார். அவ்வாறே திருவெண்ணெய் நல்லூர் சென்று அங்குள்ள வழக்காடு மன்றத்தில் தம்மிடத்தே உள்ள மூல ஓலையைக் காட்டி நம்பியாரூரர் தனக்கு அடிமை என்பதனை சாதிக்கப்போவதாக கூறினார்.

திருவெண்ணெய் நல்லூர் வழக்காடு மன்றத்தில் இன்று போல் அன்றும் வழக்கிலிருந்த ஆட்சி, ஆவணம், காட்சி எனும் மூன்று வகையான சாட்சியங்களில் தன்னிடம் இருந்த ஆவணமாகிய மூல ஓலையினை சமர்ப்பித்தார். அதில்,

"அருமறை நாவல் ஆதிசைவன் ஆரூரன் செய்கை
பெருமுனி வெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக்கு யானும் என்பால்
வருமுறை மரபுளோரும் வழித்தொண்டு செய்தற்கு ஓலை
இருமையால் எழுதி நேர்ந்தேன் இதற்கு இவை என் எழுத்து"

என இருந்தது.

நீதி மன்றத்தோர் ஓலையில் உள்ள கையொப்பத்தை நம்பியாரூரர் பாட்டனாரின் பிறிதொன்றுடன் ஒப்பிட்டுப்பார்த்து இரண்டும் ஒன்றாக இருக்கக் கண்டு

"நான்மறை முனிவர்க்கு நம்பியாரூரர்! தோற்றீர்
பான்மையின் ஏவல் செய்தல் கடன்"

எனத் தீர்ப்பு வழங்கினர்.

பிறகு கிழவேதியரிடம், தாம் யாரும் அவரை திருவெண்ணெய் நல்லூரில் பார்த்ததில்லை என்றும் எது அவரது விலாசம் என்றும் கேட்டார்கள். அதற்கு கிழவேதியர், 'எம்மை நீங்கள் ஒருவரும் அறியவில்லையென்றால் என்னோடு வாருங்கள் காட்டுகிறேன்' என்று கூறி முன் நடந்து திருவருட்டுறை என்னும் திருவெண்ணெய் நல்லூர் கோயிலுக்குள் புகுந்து திடீரென்று மாயமாய் மறைந்தார்.

இதனைக் கண்டு சுந்தரர் திகைத்துக் குழம்பி, 'ஈசனாரது கோயிலில் கிழவேதியர் புகுந்தது ஏன்?' என்று அதிசயித்து, பெரும்

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

வியப்போடு அவர் மட்டும் தனியாகத் தொடர்ந்து கோயிலினுள்ளே சென்றார். அங்கு வேதியரைப் பலவாறாகவும் கூவியழைத்தார்.

உடனே சிவபெருமான் உமாதேவியுடன் இடபத்தின்மீது தோன்றி நம்பியாரூரருக்கு உணர்த்தலானார்,

முன்பு நீ நமக்குத் தொண்டன் முன்னிய வேட்கை கூறப்
பின்புநம் ஏவலாலே பிறந்தனை மண்ணின் மீது
துன்புறு வாழ்க்கை நின்னைத் தொடர்வறத் தொடர்ந்து வந்து
நன்புல மறையோர் முன்னர் நாம் தடுத்தாண்டோம்

என்றார். உடன் சுந்தரர் தாய்ப்பசுவின் குரல் கேட்ட கன்று போல கதறி அவருடைய கைகால் முதலான அங்கங்களிலெல்லாம் மயிர்ச்சிலிர்ப்பு பெருகியெழ அவர்தம் இருகைகளையும் கூப்பித் தொழுதவாறு,

"மன்றுளீர்! செயலோ வந்து வலிய ஆட்கொண்டது" என்றார்.

அப்பொழுது விண்ணிலிருந்து பூமாரி பொழிந்தது,

"மற்றும் நீ வன்மை பேசி வன்தொண்டன் என்னும் நாமம்
பெற்றனை; நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க
அற்சனை பாட்டே ஆகும்; ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடு"

என்றார் தூமறை பாடும் வாயார். அதற்கு நம்பியாரூரர், எனக்காக வேதியர் வடிவெடுத்து என்னை வழக்கின் மூலம் வென்று ஆட்கொள்ள வந்தீர்! அதன் பயனை அடியேன் அறிய வில்லை அதை எனக்கு உணர்த்தி என்னை உய்யக் கொண்ட பெருமானே! கோதிலா அமுதே! இன்று உன் குணப்பெருங் கடலை நாயேன் எப்படி அறிந்து என்னை சொல்லிப்பாடுவேன்? என்று மொழிந்தார். அதற்கு இறைவன்,

"முன்பெனைப் பித்தன் என்றே மொழிந்தனை ஆதலாலே
என் பெயர் பித்தன் என்றே பாடுவாய்" என்றார்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

பித்தா! பிறைசூடீ! பெருமானே! அருளாளா!
எத்தால் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர்
அருட்டுறையுள்
அத்தா! உனக்கு ஆளாய்இனி அல்லேன் எனலாமே.

நன் மக்கள் வாழும் திருவெண்ணெய் நல்லூரில் திருவருட்டுறை கோவிலில் எழுந்தருளியுள்ள சிவபெருமான், தம்மை வன்தொண்டர் இன்சொல்லால் தமிழிசை பாடியதைக் கேட்டு மகிழ்ந்தார். 'இன்னும் இது போலவே பல வகையாகவும் நம்புகழ் பாடுவாயாக!' என்று கூறி மறைந்தார்.

சுந்தரர் இறைவன் உறை பதிகளை தரிசிக்கக் கிளம்பினார். முதலில் திருத்துறையூர் சென்று பாடிப் பிறகு திருநாவுக்கரசர் கைத்தொண்டு செய்த பதியாகிய திருவதிகை மிதிக்க அஞ்சி சித்தவடம் எனும் மடத்தில் இரவு உறங்கும்போது இறைவன் மீண்டும் ஒரு கிழவேதியராகத் தோன்றி திருவடி தீக்கை செய்தார்.

சுந்தரர் கெடில நீராடி திருமாணிக்குழி வழிபட்டு பின்பு திருத்தினை நகர் வணங்கி தில்லை நகரடைந்தார். பிரணவ வடிவமான திருச்சிற்றம்பலத்தின்முன்னே திருக்களிற்றுப் படியருகே சேர்ந்து

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள, அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் கரணம் மூன்றும் திருந்து சாத்துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த எல்லையில் தனிப்பெருங்
கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து மாறிலா மகிழ்ச்சியின்
மகிழ்ந்தார்.

தில்லை பதியை நீங்கி சீர்காழி சேர்ந்து திருவதிகைப்போல் சீர்காழியாவது ஆளுடையப்பிள்ளை வாழ்ந்தவூராதலால் அதனையும்

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

மிதிக்க அஞ்சி வெளியிலிருந்து வழிபட இறைவன் உமையன்னையுடன் இடப வாகனத்திலமர்ந்து காட்சி தந்தருளினார்.

பின்பு திருவாரூரடைந்து பதியிலார் குலத்தில் தோன்றிய பரவை நாச்சியார் பால் ஈர்க்கப்பட்டு ஈசன் உதவியுடன் பரவையாரைத் திருமணம் செய்து இல்லறத்தில் இனிதிருந்தார்.

ஒரு நாள் பூங்கோவிலுக்கு வரும்போது நம்பியாரூரார் தேவாசிரியர் மண்டபத்திலிருந்த அடியார்களை கவனியாது உள்செல்ல விறன்மிண்டர் என்பார் கோபம் கொண்டு, 'நம் அடியார்களின் திருக்கூட்டத்தைப் பேணாமல் செல்லும் நம்பியாரூரனும் நமக்கு புறம்பு; அவனை ஆட்கொண்ட சிவபெருமானும் புறம்பு' என்றார். நம்பியாரூரார் தவறை உணர்ந்தார். தியாகேசப்பெருமான் அடியார்களது பெருமையை விவரித்து, 'எம் அடியார்களை நீதியால் நீ பணிந்து பொருள் நிறைந்த செந்தமிழ் பாக்களால் பாடுவாயாக!' என்று 'தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்' என முதலடி எடுத்துக் கொடுத்தார்.

சுந்தரரும் திருத்தொண்டத் தொகைப் பாடினார்.

திருக்கோளிலி எனும் பதியில் உள்ள குண்டையூர்க்கிழார் நம்பியாரூரருக்கு அளிக்க நெல்இல்லாது வருந்த இறைவன் அவருக்கு நெல்மலையை அருள அதனை அவர் வன்தொண்டரை ஏற்றருள வேண்ட வன் தொண்டரும் மணிமிடற்றோனிடம், 'ஆளிலை எம்பெருமான் அவை அட்டித் தரப் பணியே' என வேண்ட, இரவில் பூதகணங்கள் திருவாரூரில் நெற்குவியலைச் சேர்ப்பித்தன.

கோட்புலியார் நட்பினைப் பெற்று அவரது மகள்களாகிய வனப்பகை, சிங்கடி ஆகியோரை தமது புத்திரிகளாக ஏற்றார்.

திருவாரூர் பங்குனி உத்திரவிழா செலவிற்கு திருப்புகலூர் அண்ணலிடம் செங்கல் பொன்கல்லாகப்பெற்றுத் திரும்பினார்.

சோழ நாட்டுத் தலங்களை தரிசித்து கொங்கு நாட்டுப்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பேரூருறை பிறவாநெறியானாகிய பட்டிப் பெருமானை வணங்கி மீண்டு நடுநாட்டுப் பதிகளை தரிசிக்க வந்தணைந்து திருமுதுகுன்றத்தில் பன்னிரண்டாயிரம் பொன் பெற்று இறைவனின் இசைவுடன் அதனை மதிமுத்தாற்றில் இட்டார். பின்பு ஆரூரடைந்து பரவையார் முன் தான் இறைவனிடம் பெற்று ஆற்றிலிட்ட பொன்னை குளத்திலெடுத்துக் கொடுத்தார்.

பின்பு மீண்டும் தலயாத்திரை மேற்கொண்டு நள்ளாறில் ஈசன் அற்புதப் பழ ஆவணங்காட்டி அடியனாகத் தன்னை ஆட்கொண்டதனை நினைந்து பாடி பின்பு பலபதிகளைப் பாடி குருகாவூர் வெள்ளடையடைந்தார்.

இறைவன் ஒரு வேதியராகத் தோன்றி அவர்களுக்கு அழுதளிக்க, 'பாடுவார் பசி தீர்ப்பார்' எனப் போற்றி திருநாவலூர் வந்தணைந்தார்.

இம்முறையேனும் இவர் திருக்கோவலூர் வந்திருக்க வேண்டும். பதிகம் பாடியிருக்கவேண்டும். பதிகம் ஏதும் கிடைக்கவில்லை என்றாலும் அவரது ஊர்த்தொகையில்

கோத்திட்டையும் கோவலும் கோயில் கொண்டீருமைக்
கொண்டுழல்கின்றதோர் கொல்லைச் சில்லைச்
சேத்திட்டுக் குத்தித் தெருவே திரியுஞ் சில்பூதமு நீருந் திசைதிசையன
சோத்திட்டு விண்ணோர் பலருந் தொழுதும் மரைக் கோவணத்
தோடொரு தோல்புடைசூழ்ந்
தார்த்திட்டதும் பாம்பு கைக்கொண்டதும் பாம்படிகேளுமக்காட்
செய வஞ்சுதுமே

எனப் பாடியுள்ளார்.

தாரணிக்கு மங்கலமாம் தொண்டை வளநாட்டுத் தலங்களை தரிசிக்கப் புறப்பட்டு பலபதிகளையும் தரிசித்து திருக்கச்சூர் ஆலக்கோயில் எனும் பதியை சோர்வுடனும் பசியுடனும் அடைய இறைவன் ஓர் ஏழை அந்தணர் வடிவந்தாங்கி திருக்கச்சூரிலுள்ள அந்தணர்கள் வீடுதோறும் பிச்சை எடுத்து கொணர்ந்து சுந்தரர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பசிபோக்கினார். சுந்தரர் இறைவன் கருணையைப் போற்றி கச்சி ஏகம்பனை தரிசித்து ஒணகாந்தன்தளியில் மீண்டும் பொற்காசு பெற்றார். பின்பு பல தலங்களை தரிசித்து திருஒற்றியூர் அணைந்து எழுத்தறியும் பெருமானைப் பாடிப் பரவிப் பின்பு சங்கிலி நாச்சியாரைக் கண்டதும் காதல் கொண்டார். இறைவன் துணையை நாடினார். ஈசனும் சங்கிலியாரிடம் திருவொற்றியூர் எல்லைத் தாண்டமாட்டேன் என சபதம் பெற்றபின் திருமணத்திற்கு இசைவு தரச் சொன்னார். சுந்தரர் ஈசனிடம் சபதம் செய்யும் போது மகிழமர நீழலில் உறையும்படி கேட்டுக் கொண்டார். ஈசன் திருவிளையாட்டில் சுந்தரருக்கு பாதகமாக முடிந்தது. மகிழ மரத்தடியிலேயே சபதம் செய்தார். சங்கிலியாரை மணம் முடித்து ஒற்றியூரில் இனிதிருந்தார். பின்பு திருவாரூர் ஞாபகம் வர திருவொற்றியூர் எல்லைத் தாண்டத் துணிந்தார். எல்லைத் தாண்டியதும் கண்பார்வை இழந்தார். தொண்டமான் வழிபட்ட திருமுல்லைவாயிலில் துயர்களைய வேண்டினார், திருவெண்பாக்கத்தில் 'கோயிலுளாயோ?' என வினவி ஊன்று கோள் பெற்றார், பின் ஏகம்பம் அணைந்து ஒருகண் பார்வைப் பெற்று தழுவக்குழைந்த நாதரின் திருமேனியில் உள்ள வளைத்தழும்புகளையும் முலைத்தழும்புகளையும் தரிசித்தார். திருத்துருத்தியில் உடலில் கண்ட ரோகம் போக்கப்பெற்றார். பின்பு திருவாரூரில் தமது மிஞ்சு தமிழால் இறைவனை கடிந்து பாடி மற்றைக் கண்ணும் பெற்றார்.

திருவாரூரில் பரவையாரிடம் ஊடல் தீர்க்கும் பொருட்டு இறைவனையே தூதுவிடுத்தார். ஊடல் தீர்ந்தது. செய்தி பரவியது. செய்திகேட்டு ஏயர்கோன் கலிக்காமர் எனும் அடியார் வெகுண்டார். சுந்தரர் இதனைப் பெருமானிடம் முறையிட பெருமான் இருவரையும் ஒன்று சேர்த்தார்.

பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்கு
உரிமையின் உரிமையின் உதவி ஒளி திகழ்
குருமா மதிபுரை குவவிய குடைக்கீழ்ச்
செருமா உகைக்கும் சேரலனாகிய

Digitization by Hindu Heritage Foundation of America, HHFA(USA)

கழறிற்றறிவாருடன் இறைவனருளால் நட்பு பூண்டொழுகினார். சேரமான் தில்லை ஆடல்வல்லானை பொன்வண்ணத் திருவந்தாதி பாடி போற்றி பின்பு திருவாரூரணைந்து சுந்தரரை தரிசித்து ஆரத்தழுவினார். இருவரும் பல பதிகளை தரிசித்தனர். பாண்டி நாட்டுத் தலயாத்திரையில் திருச்சுழியல் எனும் தலத்தை தரிசித்து உறங்குகையில் இறைவர் காணப்பேர் வரப்பணித்தார். அவ்வாறே சென்று தரிசித்தனர். பின்பு சோழநாடு திரும்பி திருக்கண்டியூர் தரிசித்து திருவையாறு செல்லஇயலாது காவிரி வெள்ளம் தடுக்க காவிரிக்கோட்டத்து ஐயாறுடைய அடிகளை வேண்ட வெள்ளம் பளிங்கு மலைபோல் சிறைப்பட்டு நிற்க சென்று ஐயாறப்பரை தரிசித்தனர்.

பின்பு இருவரும் சேரமானின்மலைநாடு சென்றடைந்தனர். அங்கு சுந்தரமூர்த்தி நாயனாரை ஒரு பெண்யானையின் மீது ஏற்றி அவருக்கு வெண்சாமரை வீசிக்கொண்டு உலாவந்தார் சேரமான் நாயனார். பின் சேரமானிடம் பிரியாவிடைபெற்று திருவாரூர் திரும்பும் வழியில் கொங்கு நாட்டு திருமுருகன் பூண்டி சேரும் வழியில் இறைவன் எவிய புதகணங்கள் வடுகவேடுவராய் அவரது பொருட்களைப் பறிக்க அவர் திருமுருகநாதரை எத்துக் கிங்கிருந்தீ ரெம்பிரானிரே என வினவினார். பின்பு பெருமான் அவரது பொருட்களைத் திரும்ப அளித்தார்.

திருவாரூரில் சிறிது காலம் இருந்து மீண்டும் நண்பரின் நினைவுவர மலைநாடு கிளம்பினார். கொங்கு நாட்டு திருப்புக் கொளியூர் அணைந்தபோது அங்கு முதலையுண்ட பாலகனை உரைப்பார் உரை உகந்து உள்க வல்லார் தங்கள் உச்சியாராகிய அவிநாசியப்பரிடம் வேண்டி முதலை வாயிலிருந்து மீட்டார். பின்பு சேரமானது தலைநகரான கொடுங்கோளூர் அணைந்து நண்பரை ஆரத்தழுவி அவருடன் இனிதிருக்கும் வேளையில் ஒருநாள் சேரமான் நீராடும் தருணத்தே அஞ்சைக்களத்தப்பரை அடைந்து எம்மை திருவடியிலே சேர்த்திடுக என விண்ணப்பிக்க இறைவர்

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

அனுப்பிய வெள்ளையானை மீது ஊர்ந்து, தானெனை முன்படைத்தான் எனப் பதிகம் பாடி, அதில்,

இந்திரன் மால் முதலா எழிலார் மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ள என்னை மத்தயானை அருள்புரிந்து
மந்திர மாமுனிவர் 'இவன் ஆர்?' என எம்பெருமான்,
'நந்தமன் ஊரன்' என்றான் நொடித்தான் மலை உத்தமனே

என ஏழிசை இன்தமிழால் இசைந்தேத்திய பதிகத்தை ஆழி கடல் அரையனிடம் அஞ்சைக் களத்தப்பற்கு அறிவிக்கப் பணித்தார்.

நண்பர் கைலை செல்வதைக் கேள்வியுற்று சேரமானும் தமது புரவியின் காதில் திருவைந்தெழுத்தினை ஓதி கயிலையைச் சேர்ந்தார்.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்று ளாரடியாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.

சேற்றக்காரியின் சாசனம்

திருச்சிராப்பள்ளி குன்றில் பல்லவ மன்னன் மகேந்திர வர்மன் லலிதாங்குர பல்லவேசுர கிருகம் எனும் குடைவரைக் கோயிலை சிவனாருக்காக எடுப்பித்தான்.

இதிலுள்ள கங்காதரமூர்த்திக்கு இருபுறமும் உள்ள கல்வெட்டுப் பாடல்கள் மூலம் மகேந்திரனின் உருவச்சிலை பற்றிய செய்திகளையும், சைவத்தின் சிறப்பையும் அறிய முடிகிறது. மேலும் மகேந்திரவர்மன் சமணம் விடுத்துச் சைவம் தழுவியதைத் தமிழுலகிற்கு அறிவிக்கும் ஒரே கல்வெட்டும் இதுவே. பல்வகையாலும் தமிழகத்தின் வரலாறு அறிய உதவும் இக்கல்வெட்டின் தமிழாக்கம் காண்போம்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

1. "*காவேரீம் நயனாபிராம ஸலிலாம் ஆராம மாலாதராம்*
தேவா வீக்ஷ்ய நதீப்ரிய: ப்ரியகுணாம் அபி ஏஷ
(ப்ரியகுணாமப்யேஷ) ரஜ்யேத் இதி
ஸாஸங்கா கிரிகன்யகா பித்றாகுலம் ஹித்வேஹ
மன்யேகிரேள
நித்யம் திஷ்டதி பல்லவஸ்ய தயிதாம் ஏதாம் ப்ருவாணா நதீம்"

நதிகளிடம் மிகுந்த ஆவல் கொண்ட சிவபெருமான் (நதிப் பிரியன்), கண்களுக்கு இனிய தெளிந்தநீரையும், வரிசையாக உள்ள கோயில்களான ஆபரணங்களையும், விரும்பத்தக்க பல நற்பண்புகளையும் உடையவளாகிய காவிரியைப் பார்த்துவிட்டு அவள் எழிலில் மயங்கிக் காதல் கொண்டுவிடுவானோ என்று ஐயம் கொண்ட மலையரையனின் மகளாகிய பார்வதி தேவி, தன் தந்தையின் உறைவிடமான இமயத்தை விட்டு விட்டு இங்கு வந்து (திருச்சிராப்பள்ளி மலைக்கோயிலுக்கு வந்து) சிவனருகில் நீங்காமல் அமர்ந்து கொண்டு, "இந்தக் காவிரியானவள் பல்லவனுக்குரியவள்" என்று சொல்லிய வண்ணமே இருக்கிறாள்.

2. "*குண பர நாமநி ராஜநி அநேந லிங்கேந லிங்கிநி க்ஞானம்*
ப்ரததாம் சிராய லோகே விபக்ஷ விருத்தே: பராவ்ருத்தம்"

இந்தச் சிவலிங்கத்தின் திருவருளால் குணபரன் எனும் பெயருள்ள இவ்வசரன் காமம், கோபம், பகை உணர்வுகள் உடைய புறச்சமயம் நீங்கி அறிவு, ஞானம் முதலியவற்றின் இருப்பிடமான மெய்ப்பொருளைத் தழுவினான். இது நீண்ட நெடுங்காலம் சிறந்து விளங்கட்டும். (தர்க்க சாத்திர அடிப்படையிலுள்ள இந்தச் சுலோகத்திற்குச் சிலேடையுடன் கூடிய ஆழ்ந்த இருவகைப் பொருள்கள் உண்டு.)

3. "*சோலவிஷயஸ்ய ஸைல: மௌலி ரிவாயம் மஹாமணி*
ரிவாஸ் ய
ஹரக்ரு ஹமேதஜ்யோதி: ததீயமிவ ஸாங்கரம் ஜ்யோதி"

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

சோழநாட்டின் மகுடம் போன்ற இந்த மலை, இந்தக் குணபரனின் உத்தம வைரமணிகளையுடைய மகுடம் போலவும் இச்சிவாலயம் அந்த மகுடத்தின் பேரொளி போலவும், அவனுடைய பேரழகு சிவபெருமானின் ஒளி போலவும் திகழ்கிறது.

4. *"சிலா அக்ஷரேண ஜநிதா ஸத்யஸ்ந்தஸ்ய பௌதிகீமூர்த்தி:*
கீர்த்திமயீ சாஸ்ய க்ருதா தேநைவ ஸமதாயி ஸாஸ்வதீ பக்தி:"

சத்தியம் தவறாத இந்தக் குணபரனின் அழியக்கூடிய உடலும், அவனது அழியாத புகழ்மயமான சிலா வடிவமும் (கல் உருவச்சிலையும்) சிவபெருமானால் படைக்கப்பட்டவை என்பதால், சிவபெருமானிடம் குணபரனால் நிலையான பக்தி வைக்கப்பட்டது.

5. *"சைலேந்திர மூர்த்நி சிலாபவநே விசித்ரே ஸைலீம் தநும்*
குணபரோ ந்ருபதிர் நிதாய
ஸ்தாணும் வ்யதத்த (விதரேஷ) விதிநைஷ யதார்தஸம்ஞம்
ஸ்தாணு: ஸ்வயம் ச ஸஹ தேந ஜகத்ஸு ஜாத:"

மலையின் உச்சியில் புதுமையான (விசித்திரமான) மலைக்கோயிலில் சிலா வடிவத்தை வைத்ததினால் தாணுவாகிய சிவபெருமான் என்றும் அழியாத சிற்பமாகத் (ஸ்தாணுவாக) தோற்றமளிக்கிறார். இச்செயலால்-குணபரனும் அச்சிவபெருமானுடன் தன் உருவச்சிலையையும் படைத்துக் கொண்டதால் - தானும் நிலையானவனாகப் (ஸ்தாணுவாக) பெரும் புகழ் அடைந்துள்ளான்.

6. *"க்ருஹ மக்ருத சத்ருமல்ல: (ல்லா)*
கிரீந்த்ர கத்யாபதே: கிரௌ அஸ்மிந் (கிரா வஸ்மிந்)
கிரிசஸ்ய கிரிசஸ்ஞாம்
அந்வர்தீ கர்த்துமர்த பதி:"

சிவபெருமானுக்கு மலையில், உறைபவன் என்ற காரணத்தால் 'கிரீச' (கிரி ஈசன்) என்ற பெயருண்டு. அவருக்குரிய கிரீச என்ற பெயரைப் பொருளுடையதாகச் (காரணப் பெயராக) செய்வதற்கென, மாற்றரசர்களை வீழ்த்தும் மாவீரனான குணபரன்

Digitization by Hindu-Heritage-Foundation-of-America. HHFA(USA)
(சத்ருமல்லன்) இந்த மலை மீது மலையரையனின் மகளது மணாளனுக்கு இந்த ஆலயம் அமைத்தான்.

7. *விபூதிம் சோலாநாம் கதமஹம் அவே க்ஷேய விபுலாம்*
நதீம்வா காவேரீம் அவநி பவநாவஸ்தித இதி
ஹரேணோக்த: ப்ரீத்யா விபுரதீசத் அப்ரம்லிஹமிதம்
மநுப்ரக்யோ ராஜ்யே பிரிபவநம் அஸ்மை குணபர:

சோழநாட்டின் பரந்த செல்வ வளங்களையும் காவிரியின் எழிலையும் தரையிலுள்ள கோயில்களிலமர்ந்து சிவபெருமான் காண முடியாது என்பதற்காக மனுநிகர் மன்னவனாம் குணபரன் மேகங்களைத் தழுவும் இந்த மலைக் கோயிலை, உயரமான இந்த இடத்தில் அமைத்தான்.

8. *நிர்மாபிதாம் இதி முதா புருஷோத்தமேந ஸைலீம் ஹரஸ்ய*
தநும் அப்ரதிமாம் அநேந
க்ருத்வா சிவம் சிரஸி தாரயதாத்ம ஸம்ஸ்தம்
உச்சை: சிரஸ்த்வம் அசலஸ்ய க்ருதம் க்ருதார்த்தம்

புருஷோத்தமனாகிய இந்தக் குணபரன் மகிழ்வுடன் தன் இதயநாயகனாகிய சிவபெருமானின் இணையற்ற சிலா வடிவை அமைத்து அந்தச் சிவபெருமானைத் தன் தலையால் தாங்கும் தகுதியாகிய பெருமையை இந்த மலைக்கும், தனக்கும் உரியதாகச் செய்தான்.

மேற்குறித்த இந்தப் பல்லவக் கிரந்தக்கல்வெட்டால் மகேந்திர போத்தரையன் திருச்சி மலைக்கோயிலில் கங்காதர மூர்த்தியின் அருகில் என்றென்றும் அழியாத சிலையாகத் தன் உருவத்தைச் செதுக்கச் செய்தான் என்பதையும், இதனால் சிவபெருமானைத் தலையில் தாங்கும் பெருமையடைந்தான் என்பதையும் கண்டோம். கல்வெட்டு குறிப்பிடுவது போன்றே மகேந்திரப் போத்தரையனின் சிலையும் தனக்குமேல் கையை உயர்த்தி அருகே நிற்கும் கங்காதரரைத் தலையில் தாங்கும் கோலத்தில் வடிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க சிறப்புடையதாகும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குணபரனைச் சைவத்தின்பால் அன்புகொண்டு தழுவச் செய்த அப்பர் அடிகள் நல்லூர்த் திருக்கோயிலில் பாடிய

"நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரிரெம் பெருமானார் நல்லவாறே-"

என்ற பதிகமும், மகேந்திரனுக்குப் பின் வந்த தமிழக மன்னர்கள் வரிசையில் முதலாம் இராசராசன் தன்னைச் சிவபாதசேகரன் எனக்கூறிக்கொண்டதும், இரண்டாம் குலோத்துங்கன் ஆரூர்க் கல்வெட்டில் தன்னைச் சிவபெருமானின் திருவடிகளாகிய தாமரை மலர்களை மொய்க்கின்ற வண்டு என்று குறிப்பிடுவதும், திருவாலங்காட்டில் சிவனடிகளைச் சுமந்து சிலையாக நிற்கும் குலோத்துங்கனின் சிறப்பும் ஈண்டு நோக்குதற்குரியனவாகும்.

நாவுக்கரசர் மற்றும் சேக்கிழாரின் கூற்றுக்களாலும் குணபரன் எனும் மகேந்திர போத்தரையன் சமணம் விடுத்துச் சைவம் ஏகி இலிங்க வழிபாட்டை மேற்கொண்ட செய்திகள் மட்டுமன்றி என்றென்றும் அழியாப் பரமனின் அருகிலேயே தனது சிலா வடிவத்தை எடுத்து, என்றும் அழியாப் பெரும் புகழெய்தியதை அறிய முடிகிறது.

திருச்சிற்றம்பலம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

10. நடுநாட்டில் திருஞான சம்பந்தரும் மாணிக்கவாசகரும்

திருஞானசம்பந்தர்

ஞானப்பாலுண்ட பிள்ளையார் திருக்கோலக்காவில் பொற்றாளம் பெற்று பலத்தலங்களைத் தந்தையார் தோள்மீது யாத்திரையாகவே சென்று வழிபட்டார். திருநீலகண்ட யாழ்ப்பாணரின் பிறந்த ஊரான திருவெருக்கத்தம்புலியூர் சென்று பரவி பின்பு பழமலைநாதர் வீற்றிருக்கும் திருமுதுகுன்றம் பாடி பெண்ணாகடம் அணைந்தார். அங்கு சுடர்க்கொழுந்தீசரை வணங்கி தந்தையாரோடு திருவறத்துறைக்குப் புறப்பட்டுச் சென்றார். அவ்வாறு அவர் செல்லும் போது தந்தையாரின் தோள்மீது அமர்ந்து செல்வதைத் தவிர்த்து தம் பச்சிளம் கால்களால் நடந்தே சென்றார். அந்தணர்களும் தந்தையாரும் அருகே வரப் பெருவிருப்போடு திருவறத்துறையினை நோக்கி விரைந்தார். அவர் முன்னே நடந்து செல்வதைக் கண்ட அவரது தந்தையாரும் பிறரும் வருந்த, ஞானசம்பந்தரது பாதத்தாமரைகள் பையப்பைய நொந்தன. வேதங்கள் யாவும் ஒரு வடிவு கொண்டு வந்தது போலவும் நிறைமதி நிலவுக்கு வந்தது போலவும் பிள்ளையார் திருஅறத்துறை நாதரை வணங்க விரைந்தார். மாறன் பாடி என்னும் தலத்தை அடையும்போது வழிநடந்து வந்த கால் வலியினால் தம்முடன் வந்தவர்கள் இளைப்படைய அவர்களுடன் அங்கேயே இரவு தங்கினார்.

திருவறத்துறை இறைவன் அன்றிரவு அவ்வூர் அந்தணர்கள் கனவில் தோன்றி, ‘ஞானசம்பந்தன் நம்மிடம் வருகிறான். முத்துச்சிவிகையும், முத்துச் சின்னமும் முத்து மணிக்குடையும் நம்மிடமிருந்து எடுத்துச் சென்று அவனுக்கு கொடுங்கள்’ என்று கூறி மறைந்தார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

வேதியர்கள் மறுநாள் காலையில் சந்திரசேகரப் பெருமான் ஆலய திருக்காப்பு நீக்கினர். அங்கு சந்திரனைப் போன்ற பிரகாசமான முத்துச் சிவிகையும் ஒருவெண்குடையும் ஊதும் முத்துச் சின்னமும் இருக்கக் கண்டு அளவிலா ஆனந்தம் கொண்டு அவற்றை எடுத்துக் கொண்டு மாறன்பாடிக்கு புறப்பட்டனர். திருஞானசம்பந்தருக்கு அதே இரவே கனவில் சிவபெருமான் தோன்றி, 'நாம் உனக்குக் கொடுத்துள்ள முத்துச்சிவிகை முதலான வற்றை ஏற்றுக்கொண்டு சிவிகையில் ஏறி எம்மிடம் வருவாயாக என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தார். மறுநாள் திருவரத்துறை அந்தணர்கள் இறைவனருளிய பொருள்களை ஏற்றுக் கொள்ளவேண்டினர். சம்பந்தரும் இறைவன் திருவருளை எண்ணி

எந்தை யீசனெம் பெருமா னேறமர் கடவுளென் றேத்திச்
சிந்தை செய்பவர்க் கல்லாற் சென் றுகை கூடுவ தன்றால்
கந்த மாமல ருந்திக் கடும்புன னிவாமல்கு கரைமேல்
அந்தண் சோலை நெல்வாயி லரத்துறை யடிகட்ம் மருளே

எனப்பதிகம் பாடி முத்துச் சிவிகையை வலம்வந்து, கீழே வீழ்ந்து வணங்கி ஐந்தெழுத்து ஓதி அச்சிவிகையின் மீது ஏறி அமர்ந்தார். வெண்முத்துச் சிவிகையில் திருவெண்ணீறு பூசிய மேனிப் பொலிவோடு ஞானப்பிள்ளையார் வீற்றிருந்தது, பாற்கடல் மீது வெண்ணிலா உதித்ததுபோல் விளங்கியது. திருவரத்துறை அணைந்து ஈசனை வழிபட்டு சிலநாட்கள் தங்கி பின்பு முத்துச்சிவிகையில் முதலில் திருநெல்வெண்ணெய் எனும் நர்டுநாட்டுப் பதியை தரிசித்தார். பரசமயக் கோளரியான சம்பந்தருக்கு முத்துச்சிவிகை யளித்த பேறு பெற்றது நடுநாடு.

மாணிக்கவாசகர்

வாதவூரர் கழுமலமதனில் காட்சி கொடுத்தும் கழுக்குன்ற தனில் வழுக்காதிருந்தும் என ஒரு பாடலில், குறிப்பிட்டுள்ளார். பிடித்த பத்து எனும் பாடலை சீர்காழியிலேயே பாடியுள்ளார்.

அம்மையே அப்பா ஒப்பிலாமணியே அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும் புழுத்தலைப்
புலையனேன் றனக்குச்

செம்மையே ஆய சிவபதம் அளித்த செல்வமே சிவபெருமானே
Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்தருளுவது இனியே

என இறைவன் எங்கெழுந்தருளுவது இனி என பாடல் முடிவடைகிறது.

சோழ நாட்டிலிருந்து கழுக்குன்றமாகிய பதியை அடைந்து அங்கு மறைமலை அடிகளால் திருவடி சூட்டப் பெற்று எல்லையில் சிவஞானம் காட்டப் பெற்று அதனை

பிட்டு நேர்பட மண்சுமந்த பெருந்துறைப் பெரும்பித்தனே
சட்ட நேர்பட வந்திலாத சழக்கனேன் உனைச் சார்ந்திலேன்
சிட்டனே சிவலோகனே சிறுநாயினுங் கடையாய வெங்
கட்டனேனையும் ஆட்கொள்வான் வந்து காட்டினாய் கழுக்குன்றிலே.

என பதிவு செய்துள்ளதும் பலர் அறிந்ததே.கழுமலத்திலிருந்து கழுக்குன்றம் செல்லும் வழியில் திருப்பாதிரிப்புலியூர் தோன்றாத்துணை நாதரை தரிசிக்க விரும்பினார். ஆனால் கெடில நதி வெள்ளம் இருகரையையும் பொங்கித் தடுத்தது.

ஈசனை தரிசிக்காது அசைவதில்லை என திடங்கொண்டு அங்கேயே இரவு பகலாக உணவு நீரின்றி இருந்தார். அம்மையே அப்பாகிய இறைவன் ஒரு சித்தர் வேடந்தாங்கி மாணிக்கவாசகரை அணுகி குறை கேட்டார். பின்பு மாணிக்கவாசகரின் துயரகற்ற பாதிரிப்புலியூரின் தென்பால் ஓடிய நதியை வடபால் ஓடும்படி செய்தார். மாணிக்கவாகர் தடையகன்றதும் ஆலயம் சேர்ந்து ஆண்டவன் கருணையைப் போற்றினார்.

இந்நிகழ்ச்சி மாணிக்க வாசகருக்கு நடுநாட்டுடன் உள்ள தொடர்பை விளம்புகிறது. தமிழகத்தில் சாக்கியப்பேய்களை வேரறுத்த மாணிக்கவாசகர் திருவடிகளைப் போற்றுவோம்.

திருச்சிற்றம்பலம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

11. நடு நாட்டுச் சந்தானக் குரவர்கள்

ஓரும் வேதாந்தமென்று உச்சியிற் பழுத்த
ஆரா வின்ப அருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித்தாந்தம்

– குமர குருபரர்

மெய் கண்டார் துதி

பண்டை மறை வண்டு அரற்றப் பசுந்தேன் ஞானம்
பரிந்து ஒழுகச் சிவகந்தம் பரந்து நாறக்
கண்ட இரு தயகமல முகைகள் எல்லாம்
கண்திறப்பக் காசினிமேல் வந்த அருட்கதிரோன்
விண்டமலர்ப் பொழில்புடைசூழ் வெண்ணெய் மேவும்
மெய்கண்ட தேவன் மிகு சைவ நாதன்
புண்டரிக மலர்தாழச் சிரத்தே வாழும்
பொற்பாதம் எப்போதும் போற்றல் செய்வாம்.

– அருள் நந்தி சிவம்

சைவ சித்தாந்தம் எனும் சொல்லாட்சியில் ‘சைவம்’ என்பது சிவசம்பந்தமுடையது எனும் பொருளைத் தரும். ‘சித்தாந்தம்’ எனும் சொல்லில் ‘சித்தம்’ என்பது உண்மை அல்லது மெய்ப்பொருள் அல்லது செம்பொருள் எனக் கொள்ளலாம் ‘அந்தம்’ என்றால் முடிவு அல்லது இறுதியானது எனப் பொருள் கொள்ளலாம். ஆக சைவ சித்தாந்தம் என்பது சைவத்தின் முடிந்த முடிவாக, சித்தித்த முடிவாகக் கொள்ளப் படுவது. எல்லா சமய முடிவுகளுக்கும் முடிந்த முடிவாக, பல்வேறு சமய மற்றும் தத்துவக் கொள்கைகள் எனும் ஆறுகள் வந்து ஒய்வெடுக்கும் கடல் போன்றது சைவசித்தாந்தம்.

இதன் மிக அடிப்படையானக் கொள்கை யாது எனில்

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

பதியைப் போன்று பசு பாசம் அநாதி என்னும் முப்பொருள் உண்மையை முழங்கும் திருமூலர் வாக்கே.

உலகம், உயிர், இறைவன் குறித்து ஏகான்ம வாதம், தேகான்மவாதம், உலோகாயதம் போன்ற பலவிதமான தத்துவங்கள் மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்திய காலம், சமயக் குரவர்கள் வாழ்ந்து சென்றபின் வரும் 11, 12 வது நூற்றாண்டுகளாகும். இக்குழப்பங்களையெல்லாம் தர்க்கரீதியில் எதிர்கொண்டு மறுத்து தெளிவான முப்பொருள் கொள்கையைத் தாபிக்கப் பிறந்ததுவே சைவ சித்தாந்தமாகும்.

அநேக வரலாற்று நூல்களில் தத்துவங்களைப்பற்றிப் பேசும்போது அத்துவிதம், துவிதம் விசிட்டாத்துவிதம் போன்றவற்றைக் குறிப்பிட்டு இதனை குறிக்காது இருப்பது இதன்புகழ் வெளியுலகிற்கு தெரியாது இருப்பதுவே. மேலும் பிற தத்துவங்கள் யாவும் வடமொழியில் இயற்றப் பட்டிருக்க நமது சித்தாந்த சாத்திரங்கள் தமிழில் அமைந்திருப்பதுவும் ஒரு காரணமாக இருக்கலாம். எது எப்படி இருந்த போதும் இது தமிழில் அமைந்திருப்பதை எண்ணி மிக்க பெருமிதமடைகிறோம்.

இந்த செம்மை தத்துவம் தோன்றி வளம் பெறுவதற்குக் காரணமாக இருந்தவர்கள் நால்வர். அவர்களாவர் மெய்கண்ட தேவர், அருள்நந்தி சிவாச்சாரியார், மறைஞானசம்பந்தர் மற்றும் உமாபதி சிவாசாரியார் ஆகியோர். இந்நால்வரையும் சந்தானாச்சாரியர் என சைவ உலகம் போற்றுகின்றது.

இந்த சைவ சித்தாந்தக் கொள்கைக்கு முதல் நூலாகக் கொள்ளப்படுவது பன்னிரண்டு சூத்திரங்களுள்ள மொத்தம் 39 வரிகளிலே அமைந்துள்ள சிவஞானபோதம் எனும் நூலாகும். ஒரு பெரிய கட்டிடத்தின் அஸ்திவாரம் எப்படி சுருக்கமாக இருக்குமோ அது போன்றே சைவ சித்தாந்தத்தின் முதல் நூல் அமைந்துள்ளது. இதுபோன்று சைவ சித்தாந்தம் பற்றி பேசுவன மொத்தம் பதினான்கு நூல்கள், அவற்றை சித்தாந்த சாத்திரங்கள் என்பர். அவை,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உந்தி களிறு உயர்போதம் சித்தியார்
பிந்திருபா உண்மை பிரகாசம் - வந்த அருள்
பண்புவினா போற்றி கொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மை நெறி சங்கற்பம் உற்று

எனும் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுள் திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், உண்மை விளக்கம் ஆகியவவை தவிர்த்து ஏனைய பதினோரு நூல்களும் சந்தானாச்சாரியரால் செய்யப்பட்டவை.

சந்தானாச்சாரியரில் முதல்மூவர் தோன்றியது நமது நடு நாட்டிலேயே. இது நடுநாட்டிற்கும் சைவசித்தாந்தத்திற்கும் உள்ள திண்மையான தொடர்பை வெளிப்படுத்துகிறது. மெய்கண்டார் திருவெண்ணெய் நல்லூரிலும், அருள் நந்தி திருத்தரூர் எனும் திருத்துறையூரிலும், மறைஞானசம்பந்தர் திருவிடையாற்றிலும் தோன்றினர். உமாபதிசிவம் தில்லையில் பிறந்தவர்.

இவர்களல்லாது 14 சாத்திரங்களில் சிறப்புடையதான உண்மை விளக்கத்தை இயற்றிய மனவாசகங்கடந்தார் திருவதிகையில் தோன்றியவர். இவர்களைப் பற்றி இனிக்காணலாம்.

மெய் கண்டார்

13ஆம் நூற்றாண்டில் பெண்ணாகடத்து அச்சுதகளப்பாளர் என்பார் குழந்தையில்லாது தமது குலகுருவாகிய அருள்நந்தியை நணுக தேவாரத்தில் கயிறு சாத்தி வெண்காட்டிலுறைவான் முக்குளநீராடி வழிபட்டு பெற்றெடுத்த மகவே சுவேதவனப் பெருமாள் எனப் பெயரிடப்பட்ட மெய்கண்டார்.

திருவெண்ணெய் நல்லூரில் இரண்டு வயது குழந்தை விளையாடிக் கொண்டிருக்க, அதன் பக்குவத்தைக் கண்டு வான்வழியே சென்று கொண்டிருந்த கயிலாய முனிவர் பரஞ்சோதி, கீழிறங்கி உபதேசம் செய்து 'மெய்ந்நூல் தமிழில் அருள்க' என ஆணையிட்டு சென்றார்.

இரண்டு வயதே நிரம்பிய குழந்தை சிவஞானபோதம் எனும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நூல் இயற்றி மெய்கண்டார் எனும் நாமத்துடன் சைவ சித்தாந்த வகுப்பு தமது குலகுருவாகிய அருள் நந்தி சிவாசாரியர், மனவாசகங்கடந்தார், சீகாழிச் சிற்றம்பல நாடிகள் முதலான 49 மாணாக்கர்களுக்கு நடத்திவந்தார். இவரது புகழ் எங்கும் பரவியது.

பின்பு சிறிய பிராயத்திலேயே ஐப்பசி சுவாதியில் திருவெண்ணெய் நல்லூரிலேயே ஜீவசமாதியடைந்தருள் செய்கிறார். இவரது சமாதி ஒரு அழகிய ஆலயமாக திருவாடுதுறை ஆதீனத்தின் பராமரிப்பில் இருந்து வருகிறது.

அருள் நந்தி சிவாசாரியார்

13ஆம் நூற்றாண்டில் திருத்துறையூரில் தோன்றி சகல ஆகமப் பண்டிதராக விளங்கிய இவர் எங்கேனும் சென்றால் இவருடன் இரண்டு வண்டிகளில் இவரது சுவடிகள் முன்பு செல்லும் எனக் கூறப்படுகிறது. தம் உதவியால் பிறந்த மெய்கண்டாரின் புகழ் இவரிடத்தே அழுக்காற்றினை ஏற்படுத்தியதாகவும் இவர் வெண்ணெய்நல்லூரணைந்து மெய்கண்டாரைக் காண முயன்றபோது இருள்மலநிலை எனும் ஆணவம் பற்றிய வகுப்பினை எடுத்துக் கொண்டிருந்த மெய்கண்டார் பாடத்தை இடையில் நிறுத்த இயலாது முழுதும் எடுத்து முடித்து வர, வெகுநேரமாகக் காத்திருந்த அருள்நந்தி அவர்கள் சினத்துடன், 'ஆணவம் எத்தகைத்து?' என வினவ, அதற்கு மெய்கண்டார், 'அத்தகைத்து' எனக் கூறியதாகவும் அதனைக் கேட்ட மாத்திரத்தில் அருள்நந்தி சிவாச்சாரியார் அந்தப் பாலகர் முன் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து தன்னையும் ஒரு மாணவனாக ஏற்றருளுமாறு வேண்டி அதன் படியே நாற்பத்தொண்மருள் முதன்மை மாணாக்கராக ஏற்றுக் கொள்ளப்பட்டார் என்றும் கூறுகிறார்கள்.

இவரது நூல் சிவஞான சித்தியார். 'சிவனுக்கு மேல் ஒரு தெய்வம் இல்லை; சித்திக்கு மேல் ஒரு நூல் இல்லை' எனும் முதுமொழி இந்நூலின் மாண்பினை இயம்புகிறது. இந்நூல் சிவஞானபோதத்தை விரிவாக விளக்கும் வழி நூலாக

Digitization by Hindu-Heritage Foundation of America, HHFA(USA)

அமைந்துள்ளது. இந்நூல் பரபக்கம், சுபக்கம் என இருபகுதிகளையுடையது. 301 செய்யுள்களையுடைய பரபக்கம் பிறருடைய கொள்கைகளாகக் கூறுவதாகும். 328 செய்யுள்களையுடைய சுபக்கம் தம்முடைய கொள்கைகளாகக் கூறுவதாகும். இதனைப் பாயிரம், அளவை இலக்கணம், சைவசித்தாந்தப் பொருள் என மூவகையால் ஆராயலாம்.

இவர் இயற்றிய மற்றொரு நூல் இருபது வெண்பாக்கள் பெற்ற இருபா இருபஃது ஆகும். இவரது சீடர் மறைஞானசம்பந்தர். இவர் புரட்டாசி பூரத்தில் சமாதியடைந்தார். இவரது சமாதி திருத்துறையூர் சிவாலயத்திற்கு நேர் எதிரே கூப்பிடு தூரத்திலமைந்துள்ளது.

மறைஞானசம்பந்தர்

13ஆம் நூற்றாண்டில் திருக்கோவலூருக்கும் வெண்ணெய் நல்லூருக்கும் இடைப்பட்ட திருவிடையாறு எனும் பதியே இவர் தோன்றிய பதியாகக் கூறப்படுகிறது. சுகப்பிரம்மரிஷி பூசித்த இடையாற்றீசர் ஆலயத்தில் சமயக் குரவர்களுடன் இவரும் காட்சியளிக்கின்றார். சிலர் இவரது ஊர் பெண்ணாகடம் என்று கருதுகின்றனர். ஆராய்ந்தறிக. தில்லை தீட்சிதராகிய உமாபதியாரின் அஞ்ஞானத்தை போக்கி ஆட்கொண்டவர் எனும் செய்தியைத் தவிர இவரைப் பற்றி அநேகமாக செய்திகள் கிடைக்காமலிருக்கிறது. பதினான்கு சாத்திரங்களில் இவர் இயற்றியதாக நூல் ஏதும் இல்லை. இவர் ஆவணி உத்திரத்தில் முத்தி பெற்றார். இவரது சீவசமாதி தில்லையருகே திருக்களாஞ்சேரியிலுள்ளது.

உமாபதி சிவாசாரியார்

14ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இவர் மட்டுமே சோழநாட்டு தில்லையைச் சேர்ந்தவர். ஆடல் வல்லானுக்கு பணிசெய்ய செல்வார் பல்லக்கில் அழைத்துச் செல்லப்படுவர். இவர் பகலில் அவ்வாறு செல்லும் போது, உடன் இருவர் தீப்பந்தம் ஏந்திச் செல்ல, அதைக் கண்ட மறைஞானசம்பந்தர், 'பகற்குருடு செல்கிறது' என்று இவரது

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA (USA)
ஞானக்கண் திறக்க இவர் அவரைப் பின் தொடர்ந்து அவர் குடித்த கூழின் எச்சிலை உண்டு குருவருள் பெற்றார்.

இதன்பின் இவரது செயல்கள் தில்லைவாழந்தணரை ஆத்திரமூட்ட அவர்கள் இவரை அக்கிரகாரத்திலிருந்து வெளியேற்ற கொற்றவன்குடி எனும் புலைச்சேரியில் குடியேறினார். இவர் பெற்றான் சாம்பான் என்பானுக்கும் முள்ளிச்செடி ஒன்றிற்கும் முத்தி கொடுத்தருளினார். தில்லைச் சிற்றம்பலவனின் ஆலயக்கொடி ஏறாது நிற்க இவரை அழைக்கும்படி ஆனந்த சபேசன் ஆணையிட இவர் கொடிக்கவிப்பாடி கொடியேற்றினார். பதினான்கு சாத்திரத்தில் இவர் எழுதியது எட்டு, அவையாவன: சிவப்பிரகாசம், திருஅருட்பயன், வினா வெண்பா, போற்றி பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் ஆகியன.

மேலும் இவர் இயற்றிய நூல்களாகக் கூறப்படுவன கோயிற்புராணம், பௌட்கராகமவிருத்தி, சேக்கிழார் புராணம், திருமுறை கண்ட புராணம், திருப்பதிக்கோவை, சிவநாமக்கலிவெண்பா ஆகியவை.

இவர் சித்திரை அத்தத்தில் சமாதியடைந்தார். இவரது சமாதி சிதம்பரத்திலிருந்து அண்ணாமலைப் பல்கலைக்கழகம் செல்லும் வழியில் இரயில் கேட் தாண்டியதும் இடப்பக்கமாக (வல) அமைந்துள்ள குடியிருப்பில் உள்ளது.

சித்திரை அத்தம் உமாபதி, ஆவணித் திங்கள் தனில்
உத்திரம் சீர்கொள் மறைஞான சம்பந்தர் ஒதுகன்னி
சுத்த மெய்ப் பூரம் அருணந்தி, ஐப்பசிச் சுவாதி தனில்
வித்தக மெய்கண்டதேவர் சிவகதி மேவினரே

திருவதிகை மனவாசகங்கடந்தார்

சித்தாந்த சாத்திர ஆசிரியர்களின் சீவசமாதிகளில் கோபுரத்துடனும் பிற அனைத்து அம்சங்களுடனும் பீடுடன் திகழ்வது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மணிவாசகங்கடந்தார் சிவன் முத்தராக அமைந்திருக்கும் பண்ருட்டி சோமநாதர் ஆலயம்தான். இங்கு அழகிய ஓவியங்கள் அமைந்து பராமரிப்பில்லாமல் உள்ளன.

இவரைத் தவிர திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் ஆகிய மெய்கண்டாரின் சிவஞானபோதத்திற்கு முற்பட்ட நூல்களை இயற்றியவர்கள் முறையே திருவியலூர் உய்யவந்த தேவரும் திருக்கடவூர் உய்ய வந்த தேவரும் ஆவர்.

சைவசித்தாந்தம் குருவருள் பற்றி வற்புறுத்தி பேசுகிறது. ஞானாசிரியன் துணைக் கொண்டே முக்தி பெற முடியும் என்றும் கூறுகிறது. இதற்கு அகச்சான்றாக இவர் எழுதிய 53 செய்யுள்களையுடைய உண்மை விளக்கம் எனும் நூல் விளங்குகிறது.

தமது குருவாகிய பொய்காட்டி பொய் அகற்றி போதாந்தப் பொருளாம் மெய்காட்டும் மெய்கண்டாரிடம் இவர் கேள்விகளை விண்ணப்பம் செய்கிறார்:

(1) ஆறாறு தத்துவம் ஏது? (2) ஆணவம் ஏது? அன்றே தான்

(3) மாறா வினை ஏது? (4) மற்று இவற்றின்
வேறாக நான் ஏது?

(5) நீ ஏது? (6) நாதன் நடம் ஏது? (7) அஞ்செழுத்துத்?
(8) தான் ஏது? தேசிகனே சாற்று.

நாதன் நடனத்தை இந்நூல் 35வது பாடல்

தோற்றம் துடியதனில்; தோயும் திதி அமைப்பில்,
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோதம் முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு

என மிக அழகாக விளக்குகிறது.

Digitization by Hindu Heritage Foundation of America HHFA(USA)
வண்மை தரும் ஆகம நூல் வைத்தபொருள் வெளிவர உண்மை விளக்கம் அருளிச் செய்த மணவாசகங்கடந்தார் அவர்களையும் சந்தானாசாரியர்களையும் போற்றிப் பணிவோம்.

அகச்சந்தான குரவர்

1. நந்திதேவர்
2. சனற்குமாரர்
3. சத்திய ஞானதரிசினி
4. பரஞ்சோதி முனிவர்

புறச் சந்தான குரவர்

1. மெய்கண்டார்
2. அருணந்தி சிவாச்சாரியார்
3. மறைஞான சம்பந்தர்
4. உமாபதி சிவம்

சந்தானாசாரியர் துதி

ஈராண்டில் சிவஞானம் பெற்றுயர்ந்த
மெய்கண்டார் இணைத்தாள் போற்றி
நாராண்ட பல்லடியார்க்கு அருள்புரிந்த
அருள் நந்தி நற்றாள் போற்றி
நீராண்ட கடந்தை நகர் மறைஞான
சம்பந்தர் நிழற்றாள் போற்றி
சீராண்ட தில்லைநகர் உமாபதியார்
செம்பதுமத் திருத்தாள் போற்றி.

திருச்சிற்றம்பலம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

12. நடு நாட்டுப் பாடல் பெற்றத் தலங்கள்

தமிழ்நாடு கல்வியில் சிறந்த நாடு. உயர்கலைகள் வளரும் நாடு. இங்குள்ள கோயில்கள் தமிழ்நாகரிகத்தின் அடையாளச் சின்னங்கள் மட்டுமல்ல, தமிழர்தம் அறிவை, ஆற்றலை, ஆளுமையை உலகுக்கு உணர்த்தும் உயர்ந்த எடுத்துக்காட்டுக்கள்.

திருக்கோயில்களைக் கட்டியவர்கள், கலை எழில் சேர்த்தவர்கள், காத்தவர்கள், காப்பவர்கள் என்றும் எந்தை தந்தை தந்தை எம் மூத்தப்பன் ஏழ்படிகால் தொடங்கி வந்து வழி வழி வணங்குதற்குரியவர்கள், இவர்களின் நற்றமிழ் நலத்தால் திருக்கோயில்கள் இலக்கியமாய், இசையாய், இனிய கலை வடிவமாய் என்றும் நின்று நிலவுகின்றன.

திருக்கோயிலில்லாத திருவிலூரும் திருவெண்ணீறணியாத
திருவிலூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடாவூரும் பாங்கினொடு
பலதளிகள் இல்லாவூரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதாவூரும் விதானமும்
வெண்கொடியும் இல்லாவூரும்
அருப்போடு மலர் பறித்திட்டு உண்ணாவூரும் அவையெல்லாம்
ஊரல்ல அடவிகாடே

என்கிறார் அப்பர் அடிகள்.

தமிழர்களது கோயில் கலையைப் பற்றி:

The Tamil races were perhaps the greatest temple builders in the world;... the great pagoda at Tanjore by far the grandest temple in India....

- Architecture, Encyclopaedia Brittanica, 9th edition II p. 396 என ஆங்கிலக் களஞ்சியம் கூறுகிறது.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

இப்படிப்பட்ட ஆலயங்களுள் மேலும் சிறப்புப் பெற்றுத்திகழ்வன சமயக் குரவர்களாகிய சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோரால் பாடப்பெற்றத் தலங்கள். அவையாவன 274 பதிகள். அவற்றுள் நடுநாட்டில் 22 தலங்கள் அமைந்துள்ளன.

1. திருஅண்ணாமலை

சுவாமி பெயர்: அண்ணாமலையார், அருணாசலேசுவரர்
தேவியார்: உண்ணாமுலையம்மை
தீர்த்தம்: சிவகங்கை, பிரம்மதீர்த்தம்
பதிகம்: சம்பந்தர் 2, அப்பர் 3

*'அக்கினியீச் சுரமென்றோர் பெயர் பெற்றார் அங்கணனும்
அக்கினிமா தீர்த்தமென்றோர் பெயர் பெற்ற தீர்த்தம் அக்கினிய
தெனப்புனைவார்க் கதி விருப்பம் அத்தலமே'*

என சிவத்தல மஞ்சரி போற்றும் பதி அண்ணாமலை.

பஞ்சபூதங்களில் இறைவன் இங்கு தேயு எனும் சோதியாக அமைந்திருக்கிறான். பிறபூதங்கள் எடுக்கக் குறைய தீ ஒன்று மட்டுமே குறையாதிருப்பதாலேயே இறைவனையும் சோதி என சுட்டுகிறோம்.

சுவாமி பிரம விஷ்ணுகளுக்கிடையே சோதியுருவாய் எழுந்தருளித் தரிசனந் தந்தருளிய தலம். உமாதேவியார் இறைவன் திருநேத்திரங்களை தமது கரங்களால் மூடிய பாவம் நீங்கப் பூசித்துப் பாகம் பெற்ற தலம். கிரி வலம் செய்த புனுகுப்பூனை, குதிரை முதலியன நற்பதவி பெற்ற தலம். அருணகிரிநாதர் அவதரித்துத் திருப்புகழ் முதலியன பாடிய தலம். வீராட்புருடனின் மணிபூரகமாக அமைந்துள்ள தலம். நினைக்க முக்தி தரவல்ல பெருமையுடையது. இரண்டு குளம், ஒன்பது கோபுரங்களையுடைய மிகப்பெரிய ஆலயம். திருக்கோவலூரிலிருந்து 35 கி.மீ.

2. திரு ஆமாத்தூர்

சுவாமி பெயர்: அழகர், அபிராமேசுரர்

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)
தேவியார்: அழகியநாயகி, முத்தை வென்ற முறுவலாள்

தீர்த்தம்: பதும தீர்த்தம், பம்பையாறு

பதிகம் : சம்பந்தர் 2, அப்பர் 2, சுந்தரர்1

பசுக்களுக்கு தாயாக இறைவன் அருளும் தலம். கோடிருஷிகளும் காமதேனுவும் பூசித்ததலம். பசுக்கள் பூசித்து கொம்பு (கோடு) பெற்றதலம். இராமபிரான் பூசித்தமையை அப்பர்,

குராமன்னுங் குழலாள் ஒரு கூறனார்
அரா மன்னுஞ் சடையான் திரு ஆமாத்தூர்
இரா மனும் வழிபாடு செய் ஈசனை
நிராமயன்றனை நாளும் நினைமினே

என தமது திருக்குறுந்தொகையில் குறிப்பிடுகிறார்.

அப்பரடிகள் மேலும் இப்பதியில் கடவுள் வாழ்த்துப் பாடாண் பகுதியுள், கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கத்துப் பெருந்திணை வகையாக ஓசையின்பமும், பொருளின்பமும், சொல்லின்பமும் ஒருங்கே கூடிய திருத்தாண்டகம் பாடியருளியுள்ளார்.

வெந்தார் வெண்பொடிப்பூசி வெள்ளைமாலை
விரிசடைமேற் றாஞ்சூடி வீணை யேந்திக்
கந்தாரம் தாம்முரலாப் போகா நிற்க,
"கறைசேர் மணி மிடற்றீர் ஊரேது?" என்றேன்
நொந்தார் போல் வந்தெனது இல்லே புக்கு,
"நுடங்கேர் இடைமடவாய்! நம்மூர் கேட்கில்,
அந்தாமரைமலர்மேல் அளிவண்டு யாழ்செய்
ஆமாத்தூர்" என்று அடிகள் போயினாரே.

அப்பரடிகளது பண் என்றே காந்தாரம், குறிஞ்சி, சீகாமரம், புறநீர்மை, பழந்தக்கராகம், இந்தளம் ஆகியவற்றை குறிப்பர். அவற்றுள் ஈசன் காந்தாரப் பண்பாடுவதாக பாடலிலுள்ளது. இது போன்றமைந்த தாண்டகங்கள், திருவொற்றியூர், திருவெண்காடு, திருப்புறம்பயம், தில்லை, ஆகிய பதிகளில் மட்டுமே பாடியுள்ளார். இத்தலம்

Digitization by Hindu Heritage Foundation of America - HHFA(USA)
விழுப்புரம் அருகே அமைந்துள்ளது. டவுன் பஸ் செல்கிறது.

3. புறவார் பனங்ககாட்டூர்

சுவாமி பெயர்: பனங்காட்டுஅடிகள், நேத்திரோத்தாரக ஈசுரர்
தேவியார்: புறவம்மை, அமிர்தவல்லியம்மை
தீர்த்தம்: பதும தீர்த்தம்
பதிகம்: சம்பந்தர் 1

வித்தியாதரர் பூசித்த தலம். இத்தலத்தில் சித்திரை முதல் வாரத்தில் சூரியன் உதயமாகும்போது அதன் கிரணங்கள் சுவாமிமீது படுகிறது.

புறாவுக்கு அபயங்கொடுத்த சிபிச்சக்ரவர்த்தி தம் கண்ணைப் பறித்தவுடன் எடை சரியாகி, சுவாமி காட்சி கொடுத்த காரணத்தால் சுவாமிக்கு நேத்திரோத்தாரக ஈசுரர் எனும் பெயர்.

விழுப்புரத்திலிருந்த டவுன் பஸ் உள்ளது. பனையபுரம் என்று கேட்கவேண்டும்.

4. திருப்பாதிரிப்புலியூர்

சுவாமி பெயர்: தோன்றாத்துணைநாதர், பாடலீசுவரர்
தேவியார்: தோகையாம்பிகை, அறம் வளர்த்த நாயகி
தீர்த்தம்: கெடில நதி, சிவகரதீர்த்தம்
பதிகம்: சம்பந்தர்1, அப்பர் 1

வியாக்கிரபாதர் பூசித்தமையால் இது வடபுலியூர் எனப்படும். தூமப்பமுனிவரின் சாபத்தால் முடக்காலுள்ள முயலுருப் பெற்ற மங்கண முனிவர் பூசித்து சாபம் நீங்கப் பெற்றதலம். இதனை சம்பந்தர்,

முன்னம் நின்ற முடக்கால் முயலுக்கு அருள் செய்து நீள்
புன்னை நின்று கமழ் பாதிரிப்புலியூர் உளான்
தன்னை நின்று வணங்கும் தனைத் தவமில்லிகள்
பின்னை நின்ற பிணி யாக்கையைப் பெறுவார்களே.

Digitization by Hindu Heritage Foundation of America, HHFA(USA)
எனக் குறிப்பிடுகிறார். சம்பந்தருக்கு கோவில் எதிரில் சற்று தூரத்தில் ஒரு சிறிய தனி சன்னதி இருக்கிறது.

அப்பரடிகள் சமணர்களால் கல்லில் பிணிக்கப்பட்டு கடலிற் பாய்ச்சப் பட்ட காலத்தில் நற்றுணையாவது நமச்சிவாயவே என கரை சேர்ந்தது இந்தப் பதியில்தான். இங்கு கோயிலிலிருந்து 1 கி.மீ. தொலைவில் கரையேறவிட்ட குப்பம் எனும் ஊர் உள்ளது.

கரையேறிய அப்பர் பாதிரிப்புலியூர் அடைந்து இறைவனை,

ஈன்றாளுமாய் எனக்கெந்தையுமாய் உடன் தோன்றினராய்
மூன்றாய் உலகம் படைத்து உகந்தான் மனத்துள்ளிருக்க
ஏன்றான் இமையவர்க்கு அன்பன் திருப்பாதிரிப்புலியூர்
தோன்றாத் துணையாயிருந்தனன் தன்னடி யோங்களுக்கே .

எனப் பாடியுள்ளார்.

இவ்வூர்க் கல்வெட்டுப் பாடலில் திருநாவுக்கரசுப் பெருந்தகையார் பரசமயகோளரி மாமுனி எனக் கூறப்பெற்றிருப்பதோடு அவர்மீது புராணம் இயற்றிய புலவர்க்கு இரண்டு மா நிலம் இறையிலியாகக் கொடுத்த செய்தி குறிக்கப்பட்டுள்ளது. இது முதலாம் குலோத்துங்க சோழன் காலத்திய கல்வெட்டு. இக்காலத்து பூம்புலியூர் நாடகம் எனும் நாடகம் அப்பர் வாழ்க்கையை சித்தரிப்பதாக இருந்திருக்கிறது. இத்தலம் கடலூர் பேருந்து மற்றும் திருப்பாதிரிப்புலியூர் ரயில் நிலையத்திலிருந்து நடந்து செல்லும் தூரத்திலிருக்கிறது. இத்தலத்துக்கு வந்த மாணிக்கவாசகரின் பொருட்டு இறைவன் தென்பால் ஓடிய கெடில நதியை வடபால் திருப்பிச் செலுத்தியதாக தல வரலாறு கூறுகிறது.

இத்தலத்தில் இறைவனை உமையம்மை அருவமாக வாயுவடிவில் பூசித்ததாக கூறுகின்றனர். அக்னி தேவருக்கு ஏற்பட்ட சாபத்தைப் போக்கியதும் சனகாதி முனிவர்க்கு உபதேசம் செய்ததும் இத்தலத்தில் தான் நிகழ்ந்தது என்று தலப்புராணம் கூறுகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

5. திருமாணி குழி

சுவாமி பெயர்: மாணிக்க வரதர், வாமனேசுவரர்
தேவியார்: மாணிக்கவல்லி
தீர்த்தம்: கெடிலம், மாணிக்க தீர்த்தம்
பதிகம்: சம்பந்தர் 1

வாமனாவதாரங்கொண்ட விஷ்ணு மாணிக்கம் வைத்துப் பூசித்த தலம். சுவாமி தேவியாருடன் கருவறையுள் இருப்பதாக ஐதீகம். எனவே எப்போதும் திரையிட்டிருக்கிறது. திரையில் ஏகாதச ருத்திரர்களுள் பீமருத்திரரின் உருவம் இருக்கிறது. இவருக்குத்தான் முதலில் அர்ச்சனை, தீபாராதனை முதலிய செய்கின்றனர். அதன்பின்பு தான் சிவலிங்கத்திருமேனியை, அதுவும் சில விநாடிகளே தரிசிக்கலாம். திருப்பாதிரிப் புலியூரிலிருந்து பேருந்தில் செல்லலாம். ஊர் பெயர் சற்று மருவியுள்ளது. விசாரித்து செல்க.

6. திருவடுகூர்

சுவாமி பெயர்: வடுகேசுவரர்
தேவியார்: வடுவகிர்க் கண்ணியம்மை
தீர்த்தம்: பெண்ணை நதி
பதிகம் : சம்பந்தர் 1

உக்கரவீர்யரிஷியும், பைரவரும் பூசித்த தலம். ஆண்டார்கோயில் எனும் பெயரில் விழுப்புரம் புதுச்சேரி மார்க்கத்திலுள்ளது. இங்கிருந்து ஒரு மைல் தென்மேற்கே சென்றால் திருத்துறையூரினை அடையலாம்.

7. திருவெண்ணெய் நல்லூர்

சுவாமி பெயர் : தடுத்தாட் கொண்டநாதர், கிருபாபுரீசுவரர்
தேவியார்: வேற்கண்ணியம்மை
தீர்த்தம்: பெண்ணை நதி
பதிகம் : சுந்தரர் 1

Digitization by Hindu Heritage Foundation of America (HHFA)(USA)

இவ்வாலயத்திற்கு அருட்டுறை எனப் பெயர். அசுரர்களால் துன்புற்றிருந்த தேவர்களுக்கு இறைவன் அருள்புரிந்தமையால் இப்பெயர் பெற்றது. அம்பிகை வெண்ணெயினால் கோட்டை செய்து அதனுள் சிவபூசை செய்து மகிஷாசுரனை வதம் செய்தபோது ஏற்பட்ட கோர வடிவம் நீங்கியத்தலம் என்பதால் திருவெண்ணெய் நல்லூர் என்றும் கூறுவர்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளை ஆவணங்காட்டி அடிமையாக தடுத்தாட் கொண்டு பித்தா பிறைசூடி எனப் பாடல் பெற்றதலம். செம்பியன் மாதேவியார் திருப்பணி செய்து இக்கோயிலை கற்றளியாக்கினார். மெய்கண்டார் பிறந்து சீவன் முத்தராக தனி ஆலயத்தில் அருள் செய்யும் தலம்.

வன்றொண்டர் சம்பந்தர் வாகீசர் மற்று முளோர்
பொன்றரிய ஞானம் புகுந்திடுக்கச் சென்று
பதிதோறும் பாடிப் பணியு மதென் மாட
மதிதோ யருட்டுறையாய் வந்து

– சதமணிக்கோவை.

திருக்கோவலூரிலிருந்து 20 கி.மீ. விழுப்புரத்திலிருந்து அடிக்கடி பேருந்து செல்கிறது.

8. திருவிடையாறு

சுவாமி பெயர்: இடையாற்றீசர்
தேவியார்: சிற்றிடைநாயகி
தீர்த்தம்: பெண்ணை நதி, சிற்றடை
பதிகம்: சுந்தரர் 1

சுகப்பிரம்மருஷி பூசித்ததலம். சந்தானாசாரியர்களில் ஒருவரான மறைஞானசம்பந்தர் தோன்றிய பதி என்றும் கூறுகின்றனர். திருவெண்ணெய் நல்லூரிலிருந்து திருக்கோவலூர் செல்லும் வழியில் 5 கி.மீ. தொலைவில் உள்ளது.

9. திரு அறையணி நல்லூர்

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

சுவாமி பெயர்: அறையணி நாதர், அதுல்யநாதர், ஒப்பிலாமணி ஈசர்

தேவியார்: சௌந்தர்ய கனகாம்பிகை, அருள்நாயகி.

தீர்த்தம்: பெண்ணைநதி, பாண்டவதீர்த்தம், ஆரண்ய தீர்த்தம்

பதிகம்: சம்பந்தர் 1

பிரசண்டருஷி பூசித்த தலம். பீமன் தனது கதையால் பாறையில் கொட்டி ஏற்படுத்தியதுவே பாண்டவதீர்த்தம் என்கின்றனர். திருக்கோவலூர் ரயில் நிலையத்திற்கு வெகு அருகாமையில் அமைந்துள்ளது. இங்கு ஞானசம்பந்தர் எழுந்தருளியபோது அண்ணாமலையண்ணல் சோதிவடிவில் காட்சியளித்து அழைத்தார்.

10. திருக்கோவலூர்

சுவாமி பெயர்:. வீரட்டேசுவரர், அந்தகாந்தகமூர்த்தி, குழகர்

தேவியார்: சிவானந்த வல்லி

தீர்த்தம்: பெண்ணை நதி

பதிகம்: சம்பந்தர் 1, அப்பர்1,

அந்தகாசுரனை அழித்ததலம், மெய்ப்பொருள் நாயனார் வாழ்ந்து முத்தியடைந்த தலம். இத்தலத்தில் தாம் பாடிய பதிகம் பாவநாசப்பதிகம் என ஞானசம்பந்தர் கூறுகிறார்.

கழியொடுலவு கானல்சூழ் காழி ஞானசம்பந்தன்
பழிகள் தீரச் சொன்ன சொல் பாவநாசம் ஆவதால்
அழிவிலீர் கொண்டு ஏத்துமின் அந்தன் கோவலூர்தனில்
விழிகொள் பூதப்படையினான் வீரட்டானஞ் சேர்துமே

11. திருநெல்வெண்ணெய்

சுவாமி பெயர்: வெண்ணெயப்பர்

தேவியார்: நீலமலர்க்கண் அம்மை

தீர்த்தம்: வெண்ணெய்த் தீர்த்தம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சநகர், சநற்குமாரர் முதலியோர் பூசித்தது.

நெற்றியோர் கண்ணுடை நெல்வெண்ணெய் மேவிய
பெற்றி கொள் பிறை நுதலீரே
பெற்றி கொள் பிறைநுதலீருமைப் பேணுதல்
கற்றறி வோர்கள் தங்கடனே.

என சம்பந்தர் பாடுகிறார். திருக்கோவலூரிலிருந்து நெய்வாணை எனும் பெயர் போட்ட டவுன்பஸ் செல்கிறது. உளுந்தூர்பேட்டையிலிருந்தும் செல்லலாம். மிகவும் சிதலமடைந்து சுற்றுச்சுவர் காணாமல் போன ஆலயம்.

12. திருமுது குன்றம்

சுவாமிபெயர்: பழமலைநாதர்,
தேவியார்: பெரிய நாயகி
தீர்த்தம்: மணிமுத்தாறு
பதிகம்: சம்பந்தர் 7, அப்பர் 1, சுந்தரர் 3

சிவனார் உலகில் மலைகள் தோன்றுவதற்கு முன்பு தாமே ஒரு மலையாக இங்கு எழுந்தருளியமையால் பழமலைநாதர் எனப்படுகின்றார். பிரமன் அட்டவசுக்கள், உமை, விபசித்து பூசித்ததலம். மதுகைடவரை வெல்லத்தவஞ் செய்த விஷ்ணுவிற்கு விருத்த வேதியராய் அநுகிரகித்த தலம். சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு பொன் கொடுத்து அவர் அதனை இத்தலத்தின் கண்ணுள்ள மணிமுத்தா நதியிலிட்டு பெற்ற தலம்.

விளையாததொர் பரிசில் வரு பசு பாச வேதனையொண்
தளையாயின தவிரவ்வருள் தலைவன்னது சார்பாம்
களையார்தரு கதிராயிரம் உடையவ்வவனோடு
முளைமாமதி தவழும் உயர் முதுகுன்றடை வோமே

எனும் பாடலில் சம்பந்தர் சைவசித்தாந்தம் கூறும் மூலநோயினை அழகாகக் குறிப்பிடுகிறார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA (USA)

இத்தலம் ஆதியில் விபசித்து முனிவரால் கட்டப்பட்டது.

முதலாம் பராந்தகனுடைய இரண்டாம் புதல்வர் கண்டராதித்தர். இவருடைய மகன்தான் மதுராந்தக உத்தம சோழன். உத்தமசோழனின் பெருமை மிக்க அன்னையார் செம்பியன் மாதேவியார். இவர் மழவராய குலப்பெண்மணி. இளம் வயதிலேயே கணவனை இழந்தவர். அதற்கு பின் வாழ்ந்த 30 ஆண்டுகளில் திருக்கோயில்கள் பல கட்டியும், திருப்பணிகள் செய்தும், நிவந்தங்கள் அளித்தும் பெருமைப்பட வாழ்ந்தார். இவரது கோயில் திருப்பணிகளில் முதன் முறையாக தேவக் கோட்டங்கள் மூன்றிலிருந்து ஒன்பது முதல் பதினான்கு வரை எண்ணிக்கையில் உயர்ந்தன. கங்காதரர், அர்த்தநாரி, நடராஜர், பிக்ஷாடனர், ஜங்கரன், அகத்தியர் ஆகியோர் இவர் திருப்பணிகளிலேயே முதன் முதலில் இடம் பெற்றனர். இவரே பழமலைநாதர் ஆலயதிருப்பணி செய்தவர்.

பழமலை நாதரது ஆலயம் ரயிலில் செல்லும்போது காண்பதற்கு தேவலோகம் போன்று காட்சியளிக்கும். இவ்வாலயத்து தலவிருட்சம் வன்னி. இவ்வாலயத்து

முதல் பிரகாரம் – கயிலாயப்பிரகாரம்
இரண்டாம் பிரகாரம் – வன்னியடிப் பிரகாரம்
மூன்றாம் பிரகாரம் – அறுபத்து மூவர் பிரகாரம்.

ஊரைவிட சற்று உயர்ந்த மேட்டு நிலத்தின்மீதே ஆலயம் அமைந்துள்ளது. இவ்வாலயத்தில் 28 சைவ ஆகமங்களுக்கு தனியே ஒரு சன்னதி 28 சிவலிங்கத்திருமேனிகளுடன் அமைந்துள்ளது. ஆகமங்கள்: 28; சைவம் – 10, ரௌத்ரம் 18. சைவம் **(10)**: காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அஜிதம், தீப்தம், ஸீக்ஷ்ரமம், ஸகஸ்ரம், அம்சுமான், ஸீப்ரபேதம் **ரௌத்ரம் (18)** : விஜயம், நிச்வாஸம், ஸ்வாயம்புவம், அனவம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞ்ஞானம், முகபிம்பம், புரோத்கீதம், லளிதம், ஸித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேசுவரம், கிரணம், வாதுளம்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)
அம்பிகைக்கும் பெரிய சன்னதி உள்ளது. விருத்தாசலம் ரயில் சந்திப்பு உள்ளது. ஆலயத்தின் சமீபத்தில் தற்போது ஒரு ரயில் நிலையம் அமைந்துள்ளது.

13. திருமுண்டீச்சுரம்

சுவாமி பெயர்: சிவலோகநாதர், முண்டீச்சுரர், பாதேசுவரர்.
தேவியார்: கானார் குழலியம்மை
தீர்த்தம்: கண்ணாயிரதீர்த்தம், முண்டதீர்த்தம், பெண்ணை
பதிகம்: அப்பர்1

இந்திரன் பூசித்த தலம். முண்டி எனும் சிவலோக வாயிற் காப்பாளன் பூசித்தது என்றும் கூறுவர். திண்டி எனும் மற்றொரு காப்பாளன் பூசித்த தீண்டீசுரம் எனும் சம்பந்தரின் வைப்புத்தலம் அருகாமையிலுள்ளது என்றும் கூறுகின்றனர். அங்கு இறைவனின் திருநாமம் நடனபாதேசுவரர் என்கின்றனர். வெண்ணெய் நல்லூரிலிருந்து 5 கி.மீ. தொலைவிலுள்ள 'கிராமம்' எனும் ஊர்.

அப்பரது தாண்டகத்திலிருந்து ஒரு பாடல்:

உரிந்தவுடையார் துவரால் உடம்பைமுடி
உழிதரும் அவ்வூமரவர் உணரா வண்ணம்
பரிந்தவன் காண் பனிவரைமீப் பண்டமெல்லாம்
பறித்துடனே நிரந்துவரு பாய்நீர்ப் பெண்ணை
நிரந்துவரும் இருகரையுந் தடவாதோடி
நின்மலனை வலங்கொண்ட நீள நோக்கித்
திரிந்துலவு திருமுண்டீச்சரத்து மேய
சிவலோகன் காண் அவன் என் சிந்தையானே.

14. திருநாவலூர்

சுவாமி பெயர்: திருநாவலேசுரர், பக்த ஜனேசுரர்
தேவியார்: சுந்தரநாயகி, மனோன்மணியம்மை
தீர்த்தம்: சிவகங்கை, கருடதீர்த்தம், கோமுகிதீர்த்தம்,
பதிகம்: சுந்தரர் 1

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

சுக்கிரன் பூசித்த தலம். சுந்தரமூர்த்தி நாயனார் திருஅவதாரஞ் செய்த தலம். சடையனார், இசைஞானியார், நரசிங்கமுனையரையர் முக்தியடைந்த தலம். பண்ருட்டியிலிருந்து செல்லலாம். விழுப்புரம் - உளுந்தூர்பேட்டை நெடுஞ்சாலையில் கெடிலம் எனும் இடத்தில் இறங்கி டவுன் பஸ்பிடித்து திருநாம நல்லூர் எனக் கேட்டுச் செல்லலாம். அருகில் 5 கி.மீ. தொலைவில் அப்பர் பிறந்த திருவாமூர் அமைந்துள்ளது.

15. திருஅதிகை வீரட்டானம்

சுவாமி பெயர்: வீரட்டேசுரர்
தேவியார்: திரிபுரசுந்தரி
தீர்த்தம்: சூலகங்கை, சக்கரதீர்த்தம், கெடிலநதி
பதிகம்: சம்பந்தர்1, அப்பர் 16, சுந்தரர் 1

எல்லாத் தலங்களிலும் அதிகம் ஆதலால் அதிகை எனப்பெயர் பெற்றது. அதிகமான் நெடுமான அஞ்சி எனும் அதியரையர் வழி மன்னன் ஆண்டமையால் அதியரைய மங்கை என ஆகி பின்பு வெண்ணெய் நல்லூர் - வெண்ணெய்; மயிலாப்பூர் - மயிலை; கொடும்பாளூர் - கொடும்பை; கரிவலம் வந்த நல்லூர் - கருவை; மாறன் தாயநல்லூர் - மாறந்தை; அருணாசலம் - அருணை; விருதுநகர் - விருதை; குடமூக்கு - குடந்தை; நெல்வேலி- நெல்லை; திருப்பாதிரிப்புலியூர் - புலிசை; பெண்ணாகடம் - கடந்தை என அழைக்கப்படுவது போல் அதிகை என அழைக்கப்படுவதாகவும் கூறுவர்.

ஆதி அந்தணன் அறிந்து பரிகொளுவ
வேத மாபூண், வையத்தேர் ஊர்ந்து
நாகம் நாணா, மலைவில்லாக
மூவிலை ஆர் எயில் ஓர் அழல் அம்பின்முனிய
மாதிரம் அழல் எய்து அமரர் வேள்விப்
பாகம் உண்ட பைம்கண் பார்ப்பான்

எனும் பழம் பாடலால் திரிபுரம் எரித்த விரிசடைக்கடவுளைப்பற்றி

Digitization by Hindu Heritage Foundation of America, HHFA(USA)

அதிகாரம் அந்த திரிபுர தகனம் நிகழ்ந்த பதியே அதிகை வீரட்டானம். தேறுநீர் சடைக்கரந்து திரிபுரம் தீமடுத்த செஞ்சடைக் கடவுள் உறையும் பெரிய விமானமாவது இராச சிம்மனால் செய்யப்பட்டதோ அல்லது அவனது பாணியை பின்பற்றப் பட்டதோ என எண்ணத் தூண்டுகிறது. தேர் போன்றமைந்துள்ளது விமானம். 16 பட்டைகளுடனாய பிரம்மாண்டமான சிங்கலிங்கத்திருமேனி. தேவாரப் பாடல் பெற்ற திருமேனிகளுள் திருப்புனவாசல் பழம்பதிநாதர், திருச்சிராப்பள்ளி தாயுமானவர், திருக்கரவீரம் கரவீரநாதர் ஆகியோருக்கு அடுத்த படியான பெரியத் திருமேனி என்பதில் எள்ளவும் ஐயம் இல்லை. கருவறையுள் அமைந்துள்ள சோமாஸ்கந்த உருவம் பாலாற்றின் மருங்கிலே கலை வளர்த்த பல்லவர்களின் பங்கை உறுதிப்படுத்துகிறது. திருநாவுக்கரசருக்கு சூலைநோயருளியாட் கொண்ட தலம். திலகவதியார் திருத்தொண்டு செய்த தலம். விஷ்ணு, பிரமன், கருடன் ஆகியோர் பூசித்துள்ளனர்.

சமணம் விடுத்து சைவம் சார்ந்த மிக்க கலையார்வம் கொண்ட பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் சமணர்களுக்கு பாடலிபுத்திரத்தில் அமைத்துக் கொடுத்த பாழியை இடித்து கொணர்ந்து திருவதிகையில் குணபரஈச்சரம் எனும் ஆலயம் அமைத்தான். இதனை சேக்கிழார்,

பாடலிபுத்திரத்தில் அமண் பள்ளியொடு பாழிகளும்
கூட இடித்துக் கொணர்ந்து குணபர ஈச்சரம் எடுத்தான்

என பதிவு செய்துள்ளார். இப்பொழுது இவ்வாலயம் முற்றிலுமாக திருப்பணி செய்யப்பட்டு வருகிறது. இதில் குணபர ஈசுவரர் அதிகையிலுள்ளது போல் 16 பட்டைகளுடன் ஷோடசகோண லிங்கமாக அமைந்துள்ளார். மகேந்திர வர்மன் திருவதிகை அம்மான் பால் ஏற்பட்ட ஈர்ப்பின் காரணத்தாலேயே பல்லவர்களது சிவலிங்கத்திருமேனிகள் இங்குள்ளது போல 16 கோணங்களுடன் திகழ்கின்றனர்.

பண்ருட்டி பேருந்து நிலையத்திலிருந்து 1 கி.மீ. தூரம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

16. திருச்சோபுரம்

சுவாமி பெயர்: சோபுரநாதர்
தேவியார்: சோபுர நாயகி
தீர்த்தம்: பரமதீர்த்தம், சோபுரதீர்த்தம்
பதிகம்: சம்பந்தர் 1

அகத்தியர் பூசித்த தலம், மேற்கு பார்த்தசன்னதி. தியாகவல்லி எனும் அரசகுமாரி பூசித்தமையால் இன்று இவ்வூர் தியாகவல்லியானது.

இத்தலம் மணலினால் மூடப்பட்டு நூற்றைம்பது ஆண்டுகளுக்குமுன் தரிசணம் செய்ய வந்த தம்பிரான்கள் இருவர் கண்டு பிடித்து திருப்பணி செய்தமையால் 'தம்பிரான் கண்டதலம்' எனும் பெயருண்டாயிற்று. கடலருகில் அமைந்த தலம்.

ஆலப்பாக்கம் ரயில் நிலையத்திலிருந்து 3 கி.மீ. தொலைவில் உள்ளது. தியாகவல்லி என்று விசாரித்து செல்லலாம்.

17. திருத்தினைநகர்

சுவாமிபெயர்: சிவக்கொழுந்தீச்சுரர், திருத்தீச்சுரர், நந்தீசுரர்
தேவியார்: ஒப்பிலாநாயகி
தீர்த்தம்: மணிமுத்தா, திருந்துதீர்த்தம்
பதிகம்: சுந்தரர் 1

பிறப்பால் சேரியன் உருவில் இறைவன் வந்து உழவு செய்ய தினை விளைந்த நகர் என்பதால் திருத்தினைநகராயிற்று. தினையமுது நைவேத்யமாகிறது. ஜாம்புவர் பூசித்த ஜாம்புவலிங்கம் தேவி கோயிலில் இருக்கிறது. கோயிலுக்கு வடக்கில் ஜாம்புவ தடாகம் உள்ளது. இங்குள்ள அழகிய ஆடல்வல்லானின் நடனத்திற்கு பிரம்மா மத்தளம் வாசிப்பது அருமையிலும் அருமை.

மேற்கூறிய ஆலப்பாக்கம் ரயில் நிலையத்திலிருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ளது. தீர்த்தனகிரி என கேட்கவேண்டும்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

18. திருஎருக்கத்தம்புலியூர்

சுவாமி பெயர்: நீலகண்டேசுரர்
தேவியார்: நீலமலர்க் கண்ணியம்மை
திர்த்தம்: நீலோற்பல தீர்த்தம், வெள்ளாறு
பதிகம்: சம்பந்தர் 1

நாகராசன் பூசித்த தலம். புலியூர் என வழங்குவதால் வியாக்கிர பாதர் பூசித்திருக்கவேண்டும். திருநீலகண்ட யாழ்ப்பாணர் பிறந்த தலம். உருத்திரசன்மர் வழிபட்டுத் தமது ஊமைத்தன்மையை நீக்கிக் கொண்ட தலம். இத்தலத்தில் உருத்திரசன்மரின் பிம்பமும் உண்டு. கோயில் பிரகாரத்தில் வெள்ளெருக்கஞ் செடியுள்ளது. விருத்தாசலத்திலிருந்து தெற்கே 11 கி.மீ. ராஜேந்திர பட்டினம் என்று கேட்கவேண்டும்.

19. திருக்கூடலையாற்றூர்

சுவாமி பெயர்: நெறிகாட்டு நாயகர், இடையாற்றுநாதர்
தேவியார்: புரிகுழலாம்பிகை
தீர்த்தம்: மணிமுத்தாறு, வெள்ளாறு, சங்குதீர்த்தம்
பதிகம்: சுந்தரர் 1

வன்மீகருஷி பூசித்த தலம். சுந்தரமூர்த்தி சுவாமிகளை விருத்தாசலத்திற்குப் போகும் மார்க்கத்தில் வேதியராய் மறித்து இது கூடலையாற்றூர்க்குப் போகும் மார்க்கமெனக் கூறிப் பதிகம் பெற்றதலம். விருத்தாசலத்திலிருந்து 23. கி.மீ. ஸ்ரீ முஷ்ணம் எனும் ஊரிலிருந்தும் செல்லலாம்.

20. பெண்ணாகடம் (திருத்தூங்கானை மாடம், கடந்தை)

சுவாமி பெயர்: சுடர்க்கொழுந்தீசர், பிரளயகாளேசுவரர்
தேவியார்: கடந்தை நாயகி
தீர்த்தம்: கெடிலநதி
விமானம்: கஜ பிருஷ்ட விமானம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பதிகம்: சம்பந்தர் 1, அப்பர் 1

இந்திரன், சப்த கன்னியர், ஐராவதம், காமதேனு பூசித்த தலம். ஆலயத்தின் பெயர் தூங்கானை மாடம். கலிக்கம்பநாயனார் அவதாரஞ் செய்ததலம். திருநாவுக்கரசர் விடைக்குறி, சூலக்குறிவேண்டிப் பெற்றதலம். மெய்கண்டாரின் தந்தை அச்சுதகளப்பாளர் இவ்வூர். நந்தி சுவாமியை நோக்காது எதிராக திரும்பியுள்ளது. பிரளயமாக வெள்ளம் ஊர் புக, மக்கள் இறைவனிடம் சரண்புக, ஈசன் நந்தித் தேவரை ஏவி வெள்ளத்திலிருந்து காத்ததுவே காரணம் எனப்படுகிறது. விருத்தாசலத்திலிருந்து பேருந்து செல்கிறது.

21. திருநெல்வாயில் அரத்துறை

சுவாமி பெயர்: அரத்துறைநாதர்
தேவியார் ஆநந்த நாயகி
தீர்த்தம்: வெள்ளாறு
பதிகம்: சம்பந்தர் 1, அப்பர் 1, சுந்தரர் 1

சப்தரிஷிகளும், இந்திரனும் பூசித்த தலம். நிவாநதியின் வடகரையில் உள்ளது. சப்தரிஷிகள் ஆதித்துறை (காரியனூர்), திருவடதிட்டத்துறை, திருவரத்துறை, ஆடுதுறை, திருக்கைத் துறை, திருஆலந்துறை, திருமாந்துறை என உள்ள துறைகள் ஏழையும் பூசிக்க வேண்டி 'நீவா' என அழைத்ததால் இந்நதி 'நிவா' எனப்படுகிறது. சமண மதமாங் களையகற்றிச் சைவ சமயப் பயிர் வளர்த்த சம்பந்தர் பாதசாரியாய் எழுந்தருளியது கண்ட சிவபெருமான் முத்துச்சிவிகை, குடை, சின்னம் முதலிய அருளிய தலம். பெண்ணாகடத்திலிருந்து திட்டகுடி செல்லும் பேருந்தில் கொடிகளம் என கேட்டு திருவட்டத்துறை என விசாரித்து இப்பதியடையலாம். சுந்தரர் இத்தலத்தில் ஈசனிடம்,

சிகரம் முகத்தல் தரளார் அகிலும் மிக உந்தி வருந் நிவாவின்கரைமேல்
நிகரில் மயிலா ரவர்தாம் பயிலும் நெல்வாயில் அரத்துறைநின்மலனே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)
மகரக் குழையாய் மணக் கோலமதே பிணக்கோலமதாம் பிறவி
இதுதான்
அகரம் முதலின் எழுத்தாகி நின்றாய் அடியேன் உய்யப்
போவதோர் சூழல் சொல்லே

என இறைஞ்சுகிறார்.

22. திருத்துறையூர்

சுவாமி பெயர்: பசுபதீசுரர், சிட்டகுருநாதர், துறையூரப்பர்

தேவியார் பூங்கோதையம்மை, சிவலோகநாயகி

தீர்த்தம்: பெண்ணைநதி

பதிகம்: சுந்தரர் 1

நாரதர் பூசித்தது. சிவஞானசித்தியார் இயற்றிய அருணந்திசிவம் சீவசமாதியடைந்துள்ளது இத்தலத்தில்தான். பீமன், சூரியன் பூசித்த சிவலிங்கங்கள் ஆலயத்திலுள்ளன. சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு காட்சி கொடுத்த மூர்த்தி விமானத்தில் வீற்றிருக்கின்றார். பண்ருட்டியிலிருந்து புதுப்பேட்டை எனும் இடத்திலிறங்கி அங்குள்ள சித்தவடத்தை வணங்கி பின்பு டவுன்பஸ் பிடித்துச் சென்றால் 4 கி.மீ. தூரத்தில் இத்தலத்தை அடையலாம். திருத்தரூர் என்று கேட்கவேண்டும்.

அட்டான மென்றோதிய நாலிரண்டும் அழகன்னுறை காவனைத்துந்
துறைகள்
எட்டாந்திரு மூர்த்தியின் காடொன்பதுங் குள மூன்றுங் களமஞ்சும்
பாடிநான்கும்
மட்டார் குழ லாண்முலை மங்கைபங்கன் மதிக்கும்மிட மாகிய பாழி
மூன்றும்
சிட்டானவன் பாசூரென் றேவிரும்பாய் அரும்பாவங்க ளாயின
தேய்ந்தறவே.

– சம்பந்தர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பாராகில்
தீவண்ணர் திறம் ஒருகால் பேசாராகில்
ஒருகாலுந் திருக்கோயில் சூழாராகில்
உண்பதன்முன் மலர்ப் பறித்திட்டு உண்ணாராகில்
அருநோய்கள் கெட வெண்ணீறணியாறாகில்
அளியற்றார் பிறந்தவா று ஏதோ வென்னில்
பெருநோய்கள் மிக நலியப் பெயர்த்துஞ் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே

- அப்பர்

திருச்சிற்றம்பலம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

13. சிவத்திரு ஞானியார் அடிகள் (ஐந்தாம் குருநாதர்)

19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20 ஆம் நூற்றாண்டின் முதல் இடைக் காலங்களிலும் "ஞானி யார்?" என்ற வினாவிற்கு "திருக்கோவலூர் ஆதீனம் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார்" என்ற விடையே தமிழ் கூறும் நல்லுலகில் நிலவி வந்தது. இன்று சைவமும் தமிழும் தமிழ் நாட்டில் தழைத்திருப்பதற்குக் காரணர் அவர்களே. பல இடங்களில் சமயச்சார்பான சங்கங்களும் தமிழ்க் கல்லூரிகளும் தோன்றுவதற்கும் அவர்களே காரணர் என்றால் மிகையாகாது.

உலகிலுள்ள சகல உயிர்களும் வினைவழிப்படுவன என்பதனை அறிந்த இவர் போன்ற அருளாளர்கள் பழவினைப் பற்றறுத்து பரம்பொருளையடைய உயிர்களை ஆற்றுப்படுத்து தலையே தமது திருத்தொண்டாகக் கருதினர்.

குடந்தையருகேயுள்ள திருநாகேச்சுரம் எனும் பதியில் வீரசைவ குடும்பத்தைச் சார்ந்த அண்ணாமலை அய்யர் பார்வதியம்மையார்க்கு கலி 4973, ஸ்ரீமுக ஆண்டு, வைகாசி மாதம் 4ஆம் நாள் (17-05-1873) வியாழக்கிழமை இரவு 10-30 மணியளவில் மூல விண்மீனும், பிரதமைதிதியும் தனுசு லக்கினமுங் கூடிய நல்வேளையில் பிறந்த நல்மகவே நமது ஞானியார் சுவாமிகளாவர்.

குழந்தைக்கு பழநியாண்டி எனப் பெயர் சூட்டினர். வீரசைவர், தம் மரபுக்குரிய முறைப்படியே, பிள்ளைப் பருவச் சடங்குகளையெல்லாம் நிறைவேற்றிச் சிவலிங்க தாரணையும் செய்து வைத்து விடல் வேண்டும். அவ்வாறே செய்ய, தம் குருவாகிய திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்து சுவாமிகளிடம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஆறாம் மாதத்தில் குழந்தையைக் கொண்டு வந்து சடங்குகளை நிறைவேற்றினர்.

அப்போதைய நான்காங் குருமூர்த்திகளான ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக பரமசிவ மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் ஒருமுறை தம்மை தரிசிக்க வந்த தம்பதியரிடம், ‘உங்கள் குழந்தை பழநியாண்டி, இனி எமக்குரிய பிள்ளை. அப்பிள்ளையை இங்கே கொண்டு வந்த சேர்த்துவிடுக’ என ஆணை பிறப்பிக்க ‘குருவே சிவனெனக் கூறினன் நந்தி’ எனும் வாக்கினை மிகமிகத் தீவிரமாகப் பின்பற்றும் வீரசைவ மரபினராகிய அத்தம்பதியர் அவ்வாறே செய்தனர்.

சுவாமிகள் தெலுங்கு, தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய நான்கு மொழிகளும் பள்ளியிற் சேர்ந்து, கருத்துடன் பயின்றார்கள். மடாலய குருநாதரிடம் சைவசித்தாந்த நூல்களையும் நன்கு கற்றுத் தேர்ந்தார்கள்.

பதினாறு வயது நிரம்பி பதினேழாம் வயது நடந்து கொண்டிருந்த காலத்திலே, நான்காம் குருமூர்த்திகள் நாற்பத்தோராண்டு பட்டமேற்றிருந்த பின்னர், திருவருள் எய்தும் நிலை வந்துறவே, அடுத்துப் பட்டமேற்க சிலர் சொல் கேட்டு, தமது கருத்திற்கு புறம்பாக வேறொரு வரை தலையேற்கக் குறிப்பிட்டு ‘உயில்’ எழுதியிருந்ததை மாற்றி, இவ்விளம் பிள்ளையையே நியமித்து மாற்றியெழுதிய தோடமையாது, அன்றே (20-11-1889) பள்ளியினின்று பகலுணவுக்கு வந்த இவர்களை முறைப்படி தீட்சை செய்வித்து சந்நியாச நிலை யேற்கச் செய்து உபதேசமும் செய்துவிட்டார்கள். பின் 4 நாள் கழித்தே 4வது பட்டம் பரிபூரணம் அடைந்தார்கள்.

இளையவராக மடாதிபதி பொறுப்பேற்ற சுவாமிகள் பழநியாண்டி முதலியார் என்பார் உதவியுடன் கடன் தொல்லைகளினின்று மடத்தை மீட்டனர். தமிழ் கற்கும் அவாமேலீட்டினால் சிதம்பரம் மு. சுவாமிநாத ஐயரவர்களைத்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தம்மடாலயத்திற்கு வருவித்து தமிழ் நூல்களை கற்றனர். சுவாமிகள், தாம் பட்டமேற்றுக் கொண்ட எட்டாண்டுகளுள் திருப்பாதிரிப் புலியூர்ப் புராணத்தைத் தேடி அச்சிடுவித்தார்கள்.

தமிழ்பாடம் கற்பித்தவர் சிவனடியடைய, அதன்பின் தம் மடாலய நூல் நிலையத்திற்குச் 'சுவாமிநாத புத்தகசாலை' எனப் பெயரிட்டார்கள். ஆசிரியரது குமாரரான முத்துகிருஷ்ண ஐயரை **B.A.** வகுப்புவரை படிக்கச் செய்தார்கள்.

அடிகளார், தெலுங்கு மொழியை நான்கு ஆண்டுகள் பயின்றும், ஆங்கிலத்தை ஏழாண்டுகள் பயின்றும், வடமொழி, தென்மொழிகளைப், பதினைந்து ஆண்டுகள் பயின்றும் பேரறிவு படைத்தவர்களாயினர்.

கல்வியில் மனநிறைவு ஏற்பட்டதும், 'அறிவுடையார் எல்லாம் உடையார்' எனும் வாக்கினை உணர்ந்த அவர்கள் அறிவினையும், கல்வியையும் தமிழையும் வளர்க்க எண்ணம் கொண்டார். 1900 ஆம் ஆண்டு பாலவநத்தம் ஜமீன்தாரரான பாண்டித்துறைத் தேவர் திருப்பாதிரிப்புலியூர் தரிசனம் செய்து சுவாமிகளைக் காண மடாலயம் வர, அன்று மாலையே 'தமிழின் தற்கால நிலை' எனும் தலைப்பில் பாண்டித்துறை தலைமைதாங்கிய நிகழ்ச்சியில் சொற்பொழிவாற்றி, பின் மதுரையம் பதியில் ஓர் தமிழ்ச் சங்கத்தினை நிறுவி வளர்க்கும் பொறுப்பினை தேவரவர்கள் முன்னின்று ஏற்கவேண்டும் என வற்புறுத்தினார்கள். அவரும் தமது சகோதரராகிய பாஸ்கர சேதுபதியவர்களிடம் அறிவித்து மதுரையிற் சங்கம் நிறுவமுனைவதாக வாக்களித்தனர். அந்த ஆண்டிலேயே தீப தரிசனத்திற்காக திருவண்ணாமலை வந்த பாஸ்கர சேது பதியவர்கள் திருப்பாதிரிப் புலியூரில் சுவாமிகளை சந்தித்து, தமிழ் வளர்க்க ஓர் கலாசாலை மதுரையில் ஏற்பட வேண்டிய அவசியத்தை ஏற்றுக் கொண்டு, அதற்காம் பொருட்செலவிற்குத் தாமே பொறுப்பேற்பதாக வாக்களித்தார். அது போலவே 24-05-1901ல் மதுரையம் பதியில் மதுரைத் தமிழ்ச் சங்கம் நிறுவினார்கள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

'செந்தமிழ்' எனும் மாத இதழ் அச்சங்கத்தின் சார்பில் வெளிவரலாயிற்று.

சுவாமிகள் திருக்கோவலூரில் தங்கியிருந்த காலங்களில் அவர்களை யடுத்துப் பயன்பெற்றோர்பலர். அவர்களுள் குறிப்பிடத் தக்கவர், மணம்பூண்டி ம.ரா. குமாரசாமிப் பிள்ளை அவர்களாவார்கள். அவர் சுவாமிகளிடம் தொழும்பு பூண்டொழுகிக் கல்வி கற்றுச் சிறந்தவர். தம் சொல்லாற்றலால் பற்பல இடங்களில் சுவாமிகளின் பெருமையை அறிவித்தவர்.

1911ல் திருக்கோவலூர் மடாலய கட்டிடப் பணியைக் காண சுவாமிகள் வந்தபோது ம.ரா. குமாரசாமிப் பிள்ளை அவர்கள் தெய்வீக மன்னர் வம்சத்தை சேர்ந்த உடையார் என்ற பட்டப் பெயருடன் வாழ்ந்து வருபவரது குல முன்னேற்றங் கருதி, யாவர்க்கும் பொதுவாக அமையும் "பார்க்கவ குல சங்கம்" 6-8-1911ல் சுவாமிகளது நல்லாசியுடன் மணம்பூண்டியில் தொடங்கினார்.

சுவாமிகள் பலகழகங்கள் ஏற்பட காரணராக இருந்தனர். திருவெண்ணெய் நல்லூர் திரு. வடிவேல் முதலியார் அவர்கள் தமிழ்ப் புலவர் சுப்ரமணிய முதலியார் தலைமையில் "கம்பர் கலாமிர்த சங்கம்" 24-10-1909ல் தொடங்கினார். நெல்லிக்குப்பம் சோழவல்லி. ப. பாலசுந்தரநாயனார் அவர்கள் தம்மூரில் 25-4-1910ல் "வாகீச பக்த ஜன சபையை" தோற்றுவித்தார்.

புதுவையில் பங்காரு பத்தர் என்பார் சுவாமிகள் தலைமையில் 1911ல் 'கலைமகள் கழகம்' எனும் அமைப்பைத் துவக்கினார்.

சுவாமிகள் வாணி விலாச சபையின் கட்டிடங்களை கவனித்துச் சீர்திருத்தங்களை மேற்கொண்டார்கள். வாணி விலாச சபை மடாலயத்திற்கு திருக்கோவலூரிலும், ஆரணி - திருமலை சமுத்திரத்திலும், விருத்தாசலம் திருமுதுகுன்றத்திலும் இன்றும் மடங்கள் உள.

உத்தரமேரூர்ச் சைவ சித்தாந்த சபை, செங்கற்பட்டு 'சமயாபிவிருத்தி சங்கம்', காவிர் தண்டலம் 'சைவ சித்தாந்தத்

Digitization by Sindhu Heritage Foundation For America. HIF (USA)

சபை', தூத்துக்குடிச் 'சைவ சித்தாந்த சபை', கோவை தமிழ்ச் சங்கம், கண்டாச்சிபுரம் தமிழ்ச் சங்கம், முதலியனவும் பிறவும் சுவாமிகளது தலைமையில் விழாக்களைக் கொண்டாடியதுண்டு.

ஆரணியில் முருகன் கோயிலருகே 1927-29ல் ஒரு திருமடத்தை நிறுவினார்கள். 1937ஆம் ஆண்டு திருக்கோவலூரில் தங்கி முதல் குருமூர்த்தியின் ஆலயத்திருப்பணி செய்தார்.

தன்னலமற்ற தொண்டாற்றிய சுவாமிகளுக்கும் உடல் பிணி கண்டதுண்டு. 1929ல் புறமுதுகில் ராஜபிளவை கிளம்பியது. அதிலிருந்து திருவருளால் வெளிவந்தனர். 1932ல் கால் எலும்பு முறிவு ஏற்பட்டு மருத்துவர்கள் கைவிரிக்க, அதன் பின்னும் எலும்பு கூடியது.

சுவாமிகள் திருக்கோவலூர் வரும்போதெல்லாம் திருவெண்ணெய் நல்லூரில் சிறிது நேரம் செலவிட்டே வந்து சேர்வார். அருணையம்பதியாம் திருவண்ணாமலை மீது அளவிற்கரிய அன்பு வைத்திருந்தார். கால் முறிந்த பின்பும் கிரிவலம் நடந்தே செய்ய விரும்பினார்.

இவர் தெற்கே பீடுடன் சைவ சித்தாந்தம் ஒளிர்வது போல் வடதமிழ் நாட்டிலும் ஒளிர வேண்டும் என்று எண்ணங் கொண்டே 1905 ல் சைவ சித்தாந்த மகாசமாஜம் சென்னையில் நிறுவினார்.

சமாஜத்தின் முப்பத்தைந்தாம் ஆண்டு விழா 1940ல் மயிலத்தில் நடைபெற்றபோது சுவாமிகள் உடல் நலமில்லாது திருக்கோவலூரில் தங்கியிருந்தார்கள், மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை.

முப்பத்தாறாம் மாநாடு 1941ல் திருச்சிராப்பள்ளியில் நடக்க அன்பர்கள் வற்புறுத்தலின் பேரில் திருக்கோவலூரிலிருந்து புறப்பட்டார்கள் பெண்ணாகடத்தில் அன்பர்கள் வேண்டிக்கொள்ள சொன்மாரி பொழிந்தார்கள். 1941 டிசம்பர் 25ஆம் நாள் தொடங்கி மூன்று நாட்கள் ஆண்டு விழா செவ்வனே நடை பெற்றது.

Digitization by Hindu-Heritage Foundation of America, HHFA(USA)

அதுவே சுவாமிகள் சமாசத்திற்குச் செய்த பணிகளுள் இறுதிப் பணியாம். 19-01-1942 திங்கட்கிழமை காலை பழநிக்கு சென்றனர். 23-01-1942 வெள்ளிக்கிழமை பழநியில் சைவ சித்தாந்த சபை முதலாண்டு விழாவிற்கு தலைமை வகித்து 'சிவராஜ போகம்' என்னும் பொருள்பற்றி சொற்பொழிவு ஆற்றினார்கள். அதுவே அவர் ஆற்றிய கடைசி சொற்பொழிவு.

31-01-1942 சனிக்கிழமை இரவு பழநி முருகனை தரிசித்து விடியல் 3-00 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு திருச்சிராப் பள்ளியை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். புறப்பட்டு 8 மைல் வந்தவுடன் உடல் நலம் மாறுபட்டது. அந்நிலையிலேயே அவரது ஆன்மா திருவருளில் கலந்து ஒன்றியது.

திருஞானசம்பந்தர் திருநாளாகிய வைகாசி மூலத்தில் தோன்றிப் பழநியப்பன் திருநாளாகிய தைப்பூசத்தில் பரிபூரணம் எய்துவது சிவபுண்ணிய வசத்தால் ஏற்பட்ட பேறாகும்.

ஞானியார் ஒருவரே இருபதாம் நூற்றாண்டின் தமிழ் பரப்பிய ஒப்பற்ற தமிழ்தொண்டர் என கண்டாச்சிபுரம் திரு சு. மீனாட்சி சுந்தரம் கூறுகிறார். மேலும் திரு. சு. மீனாட்சி சுந்தரம் அவர்கள் ஞானியார் சுவாமிகள் பேச அமர்ந்தால் அப்படி இப்படி அசையாது திருவிளையாடற் புராணத்து விறகுவிற்ற படலத்தில் எழுதுசித்திரம் போல் ஆலவாய் அண்ணல் பாடியது போல் அமர்ந்து சொற்பொழிவு நடத்துவார் என்றுக் கூறுகிறார். பின் மடம் அல்லது தங்குமிடம் திரும்பியதும் சுவாமிகள் படுக்க அவரது உடல்வலி தீரும் பொருட்டு அவர்மீது ஏறி குதித்து நான்கு ஐந்து பேர் சேர்ந்து உடல் பிடித்து விடுவர் என்றும் கூறுகிறார். சமயத்திற்காக சுவாமிகள் சந்தித்த சிரமங்கள் தெரிகிறது.

மீனாட்சி சுந்தரம் அவர்கள் மற்றும் ஒரு நிகழ்ச்சியை கூறுகிறார். கண்டாச்சிபுரம் வாசு தேவ செட்டியார் என்பவர், சுவாமிகள் பல்லக்கில் ஊர்ந்து செல்வதனைக் கண்டு, 'மனிதர்கள் சுமக்க பயணம் செய்கிறாரே, இவர் மனிதனா?' எனப்பலரிடம்

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)
பரிகாசம் பேசிவந்ததாகவும், ஒருமுறை அதிகாரிகள் இவரை ஞானியார் மேற்கொண்ட ஒரு பணிக்கு நன்கொடை கொடுத்தால்தான் இவரது காண்டிராக்ட் ரசீதினை நகர்த்துவதாகக் கூறிப்பணம் பெற்ற தோடல்லாது ஞானியாரது சொற்பொழிவு நிகழ்ச்சியினையும் அவசியம்காண வற்புறுத்தியதாகவும் நிகழ்ச்சியைப் பார்த்தப்பின், 'இவரை எண்மர் சுமப்பதற்கு பதில் எண்ணாயிரம் பேர் சுமக்கவேண்டும்' எனக் கூறியதாகவும் அதற்கு அவரது நண்பர் அவருடைய வழக்கமான சுவாமிகள் குறித்த வசனமான, 'இவர் என்ன மனிதனா?' எனக்கேட்க அதற்கு அவர் தமது வாயாலேயே, 'அவர் மனிதன் அல்ல தெய்வம்' எனக்கூறியதாகவும் கூறுகிறார்.

மேலும் கண்டாச்சிபுரம் இர. மாணிக்கவாசகன் அவர்கள், ஒருமுறை பொதுகூட்டங்கள் மீது 144 பிரிவு தடை செய்திருந்த ஆங்கிலேயர் ஆட்சியில் சுவாமிகள் தாம் சமயம் குறித்து சொற்பொழிவாற்ற இருப்பதாகக் கூற, அதன்பின்னும் அவர்கள் கண்காணிக்க, சுவாமிகள் ஆங்கிலத்திலேயே சொற்பொழிவாற்றியதாகவும் சொற்பொழிவின் இறுதியில் காவல்துறை அதிகாரியாகிய வெள்ளையர் சுவாமியிடம் பணிந்து அவர் எங்கு வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் சொற்பொழிவாற்றிக் கொள்ளலாம் என்றதாக கூறுகிறார்.

எவரது பாதங்களையும் வணங்காத திரு.வி.க. சுவாமிகளது திருப்பாதத்தை வணங்கியதாக கோவல் ஞானியார்மடம் சுந்தரராமலிங்கம் மற்றும் பட்டாபிராம் முனைவர் அ. நாகலிங்கம் கூறுகிறார்கள்.

சுவாமிகள் மலையிலிருந்து கீழிறங்கி வரும்போது சிவபதவியடைந்தது போலவே சுவாமிகளை மானசீககுருவாக ஏற்றுக் கொண்ட கிருபானந்தவாரியார் அவர்களும் வானவூர்தியில் வானிலிருந்து கீழிறங்கும்போது சிவபதவியடைந்ததாகவும், இதேபோன்ற சிவபதமடைதலில் அபூர்வ ஒற்றுமையை பல

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குருசீடர்களிடத்தே தாம் கவனித்திருப்பதாகவும் கண்டாச்சிபுரம் இரா. மாணிக்கவாசகன் கூறுகிறார்.

கல்விக் கடலின் கலங்கரை விளக்கமாய், ஞானதீபமாய், அருட்சுடராய் விளங்கிய ஞானியாகிய சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் திருவடி வாழ்க.

தெளிவு குருவின் திருமேனி கண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே

– திருமந்திரம்

திருச்சிற்றம்பலம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

14. சைவ சித்தாந்தப் பெருமன்ற வரலாறு

தமிழகத்தில் சமய எண்ணம் குன்றி வந்ததை ஞானியார் சுவாமிகள் மனதில் நினைத்து வருந்தினர். மக்கள் சமய உணர்வு பெற்று நன்னெறி சேர்தற்கு மேற்கொள்ளவேண்டிய பணி எது என நினைந்தனர். தாம் ஆங்காங்கு சென்று சொற் பொழிவாற்றுதல் தான் தக்கது என எண்ணினர். அவ்வாறே செயல் மேற்கொண்டபோதும் மன நிறைவு இல்லை. அதனால் தாம் மட்டுமின்றிச் சமய அறிஞர் பலரும் இத்தொழிலை மேற்கொள்ளின் நல்லது எனத் திருவுளம் கொண்டு அதற்கு ஆங்காங்குக் கழகம் அமைப்பதே சிறந்தது எனக் கருதினர். அதற்கு தக்க காலமும் பார்த்திருந்தனர்.

சமய மற்றும் தத்துவக் கல்வியின் இன்றியாமையை உணர்ந்த சுவாமிகள் 'கல்லா நெஞ்சினில்லானீசன்', 'கல்லாதார் காண்டற் கரியானை', போன்ற திருவாக்குகளை நன்கே அறிந்திருந்தமையால் அநாதியே கட்டுண்ட உயிர்களிடத்தே 'காரியம் ஜகம் காரணம் சிவம்' என விளக்கும் தத்துவங்களுக்கெல்லாம் தத்துவமாகியதும் உலகை ஆளக்கூடியதுமாகிய சைவசித்தாந்தத்தை மக்களிடையே பரப்ப முடிவு செய்தனர்.

சென்னையில் சில அறிஞர்களே சித்தாந்த சாத்திரங்களில் தேர்ச்சி பெற்றவராயிருந்தனர். தெற்கே அவற்றைப் பரப்ப திருமடங்கள் பல இருந்தன - இருக்கின்றன வாதலால் சென்னையைத் தலைமையிடமாகக் கொண்ட ஓர் அமைப்பினைக் காண்டலே சிறந்த நலம் பயக்கும் எனத் துணிந்தார்கள். கடலூரில் அப்போது தென்னாற்காடு மாவட்ட முனிசீபாக இருந்தவர் திரு J.M. நல்லசாமிப்பிள்ளையவர்கள். அவர் சுவாமிகளின் சிறந்த

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அறிவு நலங் கண்டு அடிக்கடி வந்து சித்தாந்தத் தொடர்பான உரையாடலில் ஈடுபடுபவர். அடிகளாரிடம் அளவளாவிய அறிவின் மேம்பாட்டால்தான் பின்னாளில் அவர் சிவஞான போதத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். அவரிடம் சென்னையை தலைமையிடமாகக் கொண்ட அமைப்பு ஒன்றன் வாயிலாகச் சித்தாந்த நூல்களைப் பரப்புதல் இன்றியமையாத சமயப் பணியாகுமென வற்புறுத்திக் கூறினார்கள். அவர், சென்று அன்பர் பலரிடம் கூறி, அவர்களுடைய ஆதரவையும் பெற்றார். (7-7-1905) விசுவாவசு ஆண்டு ஆனித்திங்களில், சென்னை அன்பர்களும் பிறவெளியூர் உள்ளூர் அன்பர்களும் கூடியிருந்த அவையில் திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்தில் 'சைவ சித்தாந்த மகா சமாசம்' என்ற பெயருடன் நிகழ்ச்சிகளுக்கு தாமே தலைவராக இருந்து தொடங்கி வைத்தார்கள். அதற்குச் சிதம்பரம் நாவலர் பாடசாலை - சதாசிவம் பிள்ளையவர்கள் தலைவராகவும், பண்டிதர் நாகை வேதாசலம் பிள்ளை (மறைமலையடிகள்) செயலாளராகவும் அமர்த்தப் பெற்றனர். சுவாமிகள், 'முருகப் பெருமான் திருவருளும் மடாலய முதற் குருநாதரவர்களின் அருளும் சமர்ச வளர்ச்சிக்குத் துணை புரிக' என வாழ்த்தி மகிழ்ந்தார்கள்.

சுவாமிகளின் ஊக்கத்தாலும் ஆசிகளாலும் சென்னையில் பற்பல இடங்களில் சைவசித்தாந்த மகா சமாசக் கூட்டங்கள் நடைபெற்றன. மாநாடுகளுக்கென்று தனியே அஞ்சலகம் முதலியவும் அமைக்கப்பெற்றதும் உண்டு. சார்பாளர்கள் பலர் வெளியிடங்களிலிருந்தும் வருவர். பார்வையாளர்களும் அங்ஙனம் வருவதுண்டு. சார்பாளர், பார்வையாளர், மங்கையர்களுக்குத் தனித்தனியே இடங்கள் ஒதுக்கப்பெறும். இவையனைத்தையும் தம் திருமடத்திலிருந்து கேட்டறிந்த சுவாமிகள், இவ்வழியே சமய வளர்ச்சி சிறந்தோங்கும் என்று மகிழ்ந்தார்கள்.

1911 ஆம் ஆண்டு வரை, சென்னை நகரிலேயே நடைபெற்றுக் கொண்டிருந்த சமாசக் கூட்டங்கள் 1912ல் காஞ்சீபுரத்தில் நடந்ததாக அறியப்படுகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

1913ஆம் ஆண்டில் சமாசத்தின் எட்டாம் ஆண்டு நிறைவு விழா வேலூரில் நடைபெற்றது. இம்மாநாட்டில் சுவாமிகள் 'சைவம்' 'சித்தாந்தம்' என இரு பிரிவாக்கிக் கொண்டு, தமக்கேயுரிய சிறந்த தலைமையுரை நிகழ்த்தினார்கள். இவ்வுரைக் கேட்டார் இவரே சமுதாயத்தொண்டர்; "இவரே சிவம் பெருக்கும் ஞானி" என்றெல்லாம் போற்றினர். சுவாமிகளின் உரையானது 13-1-1914 **The Hindu** இதழில் வெளிவந்தது.

1914ஆம் ஆண்டு கடலூர் **O.T.** யில் மாநாடு நடைபெற்றது. இக்காலத்தில் சமாசத்தின் சித்தாந்தம் இதழ் வெளிவரவில்லை. இக்காலத்தில் சமாசத்தின் செயல்பாடுகளில் தொய்வு ஏற்பட்டது. ஆண்டுதோறும், சென்னை நகரிலேயே உள்ள சொற்பொழிவாளர்களைக் கொண்டு பொருட்செலவின்றிப் பெயரளவில் மாநாடு கூடி நடந்தது.

'பொன்னைவிட மேன்மை பொருந்திய காலம் அவமே கழிகின்றதே! மக்களிடையே சமய வளர்ச்சித் தொண்டு சிறக்க நடைபெற வில்லையே! என்று அடிகளார் வருந்திக் கூறியமை கேட்ட அடிகளாரின் மாணவர் சிலர் திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்டார் மடத்தின் தலைவராக இருந்த நவசிவாயத் தம்பிரானின் ஆதரவோடு, 'அகில இந்திய சைவ சித்தாந்த மகாசமாசம்' எனும் சமாசத்தை நிறுவினர். இதைக் கேள்வியுற்ற அடிகளார் மாணவர்களையழைத்து 'முன்பே ஒரு சமாசம் இருக்க வேறொன்றுக்கு அவசியமில்லை, நாமே தோற்றுவித்து ஆதரவு தேடுதல் சிறப்பன்று; முன்னைய சமாசத்தின் நிலையை இச்சங்கம் அடைவதற்கு நீண்ட காலமாகாது; எனவே, புதிய சங்கத்தை வளர்க்கும் முயற்சியைக் கைவிட்டு பழைய சமாசத்தை வளர்ப்பதில் ஈடுபடுங்கள்' என அறிவுரை கூறினர்.

மேலும், 'சென்னை சென்று, அங்கு அதன் வளர்ச்சிக்கு ஆக்கம் தேடுங்கள். அதற்குள், நம் நகரிலேயே வேண்டுமாயினும் ஒரு கூட்டம் நடத்திப் பிறருக்கு வழி காட்டுவோம்' என்றும்

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

அருளுரை கூறினார். 1924ஆம் ஆண்டு டிசம்பரில் சமாசக் கூட்டம் திருபாதிரிப் புலியூரில் நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு அடிகளாரே தலைவர்.

மாநாட்டில், ‘சித்தாந்தம்’ இதழை மீண்டும் தொடங்கி நடத்தவேண்டுமென வற்புறுத்தியபோது, பலர் அதன் உறுப்பினர், காப்பாளர்களாகக் கையொப்பமிட்டனர். விழாவின் வரவேற்புக் கழகத்தவர்களும் முந்நூறு வெண்பொற்காசுகள் அளிப்பதாக உறுதி கூறினர். இம்மாநாட்டில் வரவேற்புக் கழகத்தினர் சுவாமிகளைப் பாராட்டி முழுதும் பொற் கவசமிடப்பெற்ற பௌண்டன் பேனா ஒன்றினை அவர்கட்கு நினைவுக் குறியாக அளித்து நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

1927ஆம் ஆண்டில் சுவாமிகள் முதல்முறையாகச் சென்னைக்கு எழுந்தருளினார்கள். பிராட்வே டாக்கீசு இருந்த இடத்தில் அப்போது இருந்த பாலசு தியேட்டரில் சிறப்புக் கூட்டம் ஒரு மாநாடு போலவே நடந்தது. அக்காலை நீதிபதி சர்.வே.பா. இராமேசம், பா.வே. மாணிக்க நாயக்கர், திரு.வி.க. முதலாய பேரறிஞர் சொற்பொழிவாற்றினர்.

அக்கூட்டத்தில் ‘சித்தாந்தம்’ இதழை மீண்டும் நடத்துவதென முடிவு செய்யப்பெற்றது. நகரமக்கள் சார்பில் சர். A. இராமசாமி முதலியார் சுவாமிகளின் அரிய தொண்டுகளைப் பாராட்டி ஆங்கிலத்தில் ஓர் சொற்பொழிவாற்றினார்.

அடுத்த 1928ஆம் ஆண்டு சனவரியில் ‘சித்தாந்தம்’ பத்திரிக்கை மீண்டும் தொடங்கப்பெற்றது.

1928 ஆம் ஆண்டு பூரணாங்குப்பம் முதலியாரும் கிரந்தே சிவசங்கரசெட்டியாரும் விரும்பிய வண்ணம் புதுவையில் மூன்றுநாள் மாநாடு நடந்தது.

1929 டிசம்பரில் திருவெண்ணெய் நல்லூரில் திருவருட்டுறையில் மாநாடு நடைபெற்றது. திருவெண்ணெய்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)
நல்லூரில் 1933க்குள் பிறிதொருமுறை மாநாடு நடைபெற்றதாக அறிகிறோம்.

1934 ஆம் ஆண்டில், சமாசத்தின் இருபத்தொன்பதாம் ஆண்டு நிறைவு விழா திருவதிகையில் நடைபெற்றது. ஆண்டின் ஆகஸ்டு மாதத்தில் மயிலாப்பூரில் சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் விசேட மாநாடு ஒன்று நடைபெற்றது.

1937ஆம் ஆண்டு டிசம்பரில் சமாசத்தின் முப்பத்திரண்டாம் ஆண்டு விழா வேலூரில் நடைபெற்றது. சுவாமிகளுக்கு சுரம் 103 அளவிற்கு இருந்த போதும் தலைமை தாங்கி மாநாட்டை சிறப்பித்தார்கள்.

1938 ஆம் ஆண்டு மாநாடு கண்டாச்சிபுரத்தில் நடந்ததாக அவ்வூர் சு. மீனாட்சி சுந்தரம் கூறுகிறார்கள்.

1940 ஆம் ஆண்டு மாநாடு மயிலத்தில் பொம்மபுர ஆதீனத்தின் 18ஆம் பட்டம் உதவியுடன் நடைபெற்றது. சுவாமிகள் உடல்நலமின்மையால் திருக்கோவலூரிலேயே தங்கியிருந்தார்கள்.

1941 டிசம்பர் 25ஆம் தேதி திருச்சிராப்பள்ளியில் தொடங்கி மூன்று நாள் மாநாடு செவ்வனே நடைபெற்றது. இதுவே சுவாமிகள் பங்கு கொண்ட இறுதி மாநாடாகும்.

1958ல் மயிலத்தில் நடைபெற்ற 53ஆம் மாநாட்டில் சுவாமிகள் ஆற்றிய பன்னூற்றுக்கணக்கான சொற்பொழிவுகளுள் இருபத்தைந்தினை ஒரு நூலாக வெளியிட்டனர்.

1981 ஆம் ஆண்டு பவளவிழா மாநாடு இலங்கை தெல்லிப்பழையில் நடைபெற்றது. 1989 ஆம் ஆண்டு 'சைவ சித்தாந்த மகாசமாஜம்' 'சைவ சித்தாந்தப் பெருமன்றம்' என பெயர் மாற்றப் பெற்றது. பெருமன்றத்தின் 98ஆம் ஆண்டு விழா மாநாடு ஞானியார் சுவாமிகளின் முதன்மை பீடம் அமைந்துள்ள திருக்கோவலூரில் 2004 ஜீன் 12, 13ல் நடைபெறுகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

நூற்றாண்டு காண ஓராண்டே உள்ள நிலையில் இன்றளவும் பெருமன்றத்திற்கு சென்னையில் சொந்தக் கட்டிடம் இல்லை என்பதுவும் மயிலாப்பூர் வேங்கடேச அக்கிரகார சாலையில் ஓர் கட்டிடத்து மாடியில் வாடகையில் தான் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதுவும் ஒரு துயரம் தரும் செய்தி. உடனே சொந்த இடம் மற்றும் கட்டிடம் ஒன்று ஏற்படுத்த வேண்டும்.

19ஆம் நூற்றாண்டிலிருந்தே பல இடங்களில் பல வகையான சைவ சித்தாந்த சபைகள் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன. மேற்கத்திய நாடக மரபில் தமிழில் முதலில் செய்யுள் நாடகம் எழுதிய மனோன்மணி அவர்கள்கூட குடகநல்லூர் சுந்தரசுவாமிகளை குருவாக ஏற்று பேரார்வத்துடன் சைவசித்தாந்த நெறிகளை கற்று தேர்ந்து 1884ல் 'சைவ பிரகாச சபா' எனும் அமைப்பை நிறுவினார் என அறிகிறோம்.

பல அமைப்புகள் தோன்றி இருந்து மறைய முடிவில்லா முப்பொருளைப் பேசும் சைவ சித்தாந்த சமாசம் முடிவுறாத பீடுடன் தொடர செம்பொற்சோதி இறைவனை இறைஞ்சுவோம்.

தொகையாலும் வகையாலும் சொலமேற்கொள்
பொருள்விளக்கிச் சுவைமை யூட்டி,
நகையொடு பொருள்செறிந்த நல்லுவமை
நனமேற்கொள் நயமும் காட்டித்
தகையாய வழக்கோடு சாத்திரத்தின்
நுணுக்கங்கள் தகவிற் சாற்றித்
திகையாவும் தமிழ் வளர்த்த திருப்புலிசை
அடிகள் அடி சென்னி சேர்ப்போம்!

– புலவர் நா.ரா. முருகவேள்,
பி.ஓ.எல் (ஹானர்ஸ்) எம்.ஓ.ல்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெலாம் அரன் நாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அந்தகாந்தகர்

கோவல் வீரட்டானம்